# தமிழ்மொழி வளர்ச்சியில் பாரதியின் உரைநடை

நூலாசிரியர் : அ. சீனிவாசன்

பொருளடக்கம்:


- முன்னுரை

1. தோற்றுவாய்
2. மொழி : மொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும்
3. எழுத்தும் சொல்லும்
4. உரைநடை காலத்தின் தொடக்கம்
5. இந்தியாவில் அந்நியர் ஆட்சி
6. அருள் பிரகாசவள்ளலார் இராமலிங்க சுவாமிகள் உரைநடை
7. பாரதியின் உரைநடைமொழி
8. பாரதியின் உரைநடைக்கு இன்னும் ஒரு எடுத்துக்காட்டு
9. வசன நடைபற்றி பாரதியார்
10. தமிழ் விழாக்கள் பற்றி
11. தமிழின் நிலை
12. தமிழ்ப்பத்திரிகைகள் (இதழ்கள்)
13. தமிழ்நாட்டில் விழிப்புணர்வு
14. தமிழிசையைப் பற்றி
15. பெண் விடுதலை பற்றி
16. மதபேதங்களைக் குறித்து
17. கதை வடிவம்
18. தேசியக் கல்விபற்றி
19. பாரதி தன்னுடைய கவிதைகளுக்கு எழுதியுள்ள சில முன்னுரைகள்
20. பாரதியின் பகவத்கீதை தமிழாக்கம்
21. நிறைவுரை

- நூலாசிரியரைப் பற்றி

# தமிழ்மொழி வளர்ச்சியில் பாரதியின் உரைநடை

## முன்னுரை:

மகாகவி பாரதியின் படைப்புகளில் அவருடைய கவிதைகளைப் போலவே அவருடைய உரைநடைப் பகுதிகளும் மிகவும் முக்கியமானவை. கருத்துக்களில் மட்டுமல்ல, மொழி, நடை, விஷயங்களை எடுத்துக் கூறும் வழிமுறை, எளிமை, கருத்து வேகம், கருத்தாழம், தெளிவு, சொல் கூர்மை ஆகிய பல அம்சங்களிலும் புதுமை கொண்டிருக்கிறது.

“கூடியவரை, பேசுவது போலவே எழுதுவது தான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி” என்று வசன நடைபற்றி பாரதி குறிப்பிடுகிறார். வசனநடை என்பது தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்கும் உடையதாக இருக்கவேண்டும் என்றும் பாரதி குறிப்பிடுகிறார். இவ்வாறு உரைநடை பற்றி பாரதி குறிப்பிடும் கருத்துக்கள் அற்புதமானவை.

பாரதிக்குப் பின்னர், தமிழ் உரைநடை பிரவாகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. பத்திரிகைகள் பாடநூல்கள், கதைகள், கட்டுரைகள், ஆராய்ச்சி, அச்சு எந்திரம் தனிநபர் முயற்சிகள் முதலியன அதற்கு முக்கிய கருவிகளாக இருக்கின்றன.

பாரதி தன்னுடைய கட்டுரைகளில் மொழி நடைமட்டுமல்ல, கருத்துக்களும் சிறப்பு கொண்டவைகளாக எடுத்துக் கூறுகிறார். ஆயினும் அவை மக்களிடம் விரிவாகச் சென்று போதுமான அளவில் பிரபலமடையவில்லை.

அண்மையில் சில ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திலிருந்து பாரதியின் உரைநடையில் மொழி, அரசியல், சமுதாய சீர்திருத்தம் ஆகியவை

பற்றி ஒரு கட்டுரைப் போட்டி வைத்திருந்தார்கள். அந்தக் கட்டுரைப் போட்டி பாரதியின் உரைநடையைப் பிரபலப் படுத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அதற்கு திருநெல்வேலி பல்கலைக் கழகத் தலைவர்களுக்குக் குறிப்பாக அதன் அன்றைய துணை வேந்தருக்கு தமிழகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. அத்தகைய முயற்சிகளில் இதர பல்கலைக் கழகங்களும் ஈடுபடவேண்டும். அது ஒரு முக்கியமான தமிழ்ப் பணியாகும்.

அந்தக் கட்டுரைப் போட்டியில் பாரதியின் உரைநடை மொழி என்னும் தலைப்பில் அடியேனும் ஒரு கட்டுரை (ஆய்வுரை) அனுப்பியிருந்தேன். அக்கட்டுரை சிறப்பாக அமைந்து அப்போட்டியில் முதல் பரிசையும் பெற்றது.

அக்கட்டுரை தயாரிப்பதற்கான குறிப்புகளை அண்மையில் நான் எடுத்துப் பார்க்க நேர்ந்தது. அதை வைத்து மேலும் விரிவுபடுத்தி ஒரு சிறு நூல் எழுதி வெளியிடலாம் என்னும் நோக்கில் இந்த நூல் எழுதி முடிக்கப்பட்டது. இந்த நூலில் பாரதியின் உரைநடை, அவர் எழுதியுள்ள கட்டுரைகள், கருத்துரைகள் பற்றிய பல செய்திகளையும் கொண்டு வர முயற்சித்து இந்த நூல் வெளிவந்திருக்கிறது.

பாரதியின் கட்டுரைகள் அவருடைய உரைநடை, இன்னும் அவருடைய கவிதைகளில் கூட குறிப்பாக விநாயகர் நான்மணிமாலை, புதிய ஆத்திசூடி, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, வாழ்க்கை வரலாறு, பாஞ்சாலி சபதம் மற்றும் பல படைப்புகள் மறுபதிப்புகள் வெளியிடப்பட்டு பிரபலப்படுத்தப் படவேண்டும். அவைகளிலுள்ள சிறந்த கருத்துக்கள் மக்களிடம் விரிவாகச் செல்ல வேண்டும். பாரதியின் கருத்துகள் பலவும் அவருடைய உரைநடை மொழி நடையும் வழிமுறையும் இன்றும் நமக்கு மிகவும் பொருத்தமானதாகும், தேவையானதுமாகும்.

இப்பணியில் பல சான்றோரும் தமிழ் அறிஞர்களும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். வசதிபடைத்தோர் பலரும் அப்பணிகளுக்கு உதவ வேண்டும். நமது பல்கலைக் கழகங்களும் பதிப்பகங்களும் இதர பல அமைப்புகளும் ஆர்வமுள்ள தனி நபர்களும் அதற்கான திட்டங்களை வகுத்து அவைகளை நிறைவேற்ற வேண்டும். தமிழ்ப் பாடநூல்களில் பாரதியின் படைப்புகளை அதிகமாகச் சேர்க்க வேண்டும். நூல் வெளியீட்டாளர்கள் பாரதி பற்றிய நூல்களுக்கு முக்கிய இடம் தரவேண்டும்.

இதுவரை பாரதி பற்றி அடியேன் எழுதி வெளியிட்டுள்ள நூல்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. பாரதப் பண்பாட்டுதளத்தில் பாரதி, பாரதியின் புதிய ஆத்திசூடி—ஒரு விளக்கவுரை, பாரதியின் தேசீயம், ஆழ்வார்களும் பாரதியும் ஆகிய நூல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.

பாரதியின் உரைநடைபற்றியும் அதில் வந்துள்ள சீரிய பல கருத்துக்களைப் பற்றியும் மேலும் சில நூல்களும் எழுதலாம் என்றும் தீர்மானித்துள்ளோம். "தமிழ் மொழி வளர்ச்சியில் பாரதியின் உரைநடை" என்னும் இந்த நூலுக்கும் உரிய வரவேற்பு அளித்து இந்நூலைப் படித்துப் பயன் பெறவேண்டுகிறேன்.

இந்நூலைத் தயாரிக்கவும், இதை நல்ல முறையில் அச்சிட்டு வெளியிடவும், ஆதரவு நல்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
அ. சீனிவாசன்
நூலாசிரியர்

# தமிழ் மொழி வளர்ச்சியில் பாரதியின் உரைநடை

## 1. தோற்றுவாய்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தமிழ் மொழியின் வளர்ச்சியில் மகாகவி பாரதியின் கவிதைகளும், உரைநடைக் கட்டுரைகளும் அவைகளில் பொதிந்திருந்த ஆழ்ந்த கருத்துகளும் மிகப்பெரிய பங்கை ஆற்றியிருக்கின்றன. இன்று தமிழ் மொழியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கும் விரிவிற்கும் தமிழ் மக்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுக்கும் வேகத்திற்கும் பாரதியே வித்திட்டார் என்று உறுதிபடக் கூறலாம். தமிழ் மொழியும் கவிதையும் பாரதியின் உள்ளத்திலும் உணர்விலும் இணைந்திருந்தன.

பாரதிக்கு முன்னர், தமிழ் உரைநடை பிரபலமாக இல்லை. அச்சு எந்திரம் தோன்றிய பின்னர்தான் எல்லா மொழிகளிலும் உரைநடை என்பது பேச்சு நடையிலிருந்து எழுந்து பிரபலமாயிற்று. தமிழ் மொழிக்கும் இந்த நிலை பொருந்தும். இருப்பினும் தமிழ் மொழியில் அந்நாளில் சிறிய அளவில் உரைநடை பழக்கத்தில் இருந்தது. அவை முக்கியமாகக் கீர்த்திகள் பட்டயங்கள் செப்பேடுகள், கல்வெட்டுகள், முதலியவை மூலம் இருந்தன. சில பண்டிதர்கள், மிகவும் கடினமான மொழியில் சிறிய அளவில் உரைநடையில் எழுதினார்கள். மணிப்பிரவாள நடையில் சமயக் கருத்துக்கள் சிலவும் வெளியிடப்பட்டன. பக்தி நூல்களின் பகுதியாகவும் அவை வெளி வந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்நாட்டில் அச்சு எந்திரம் புழக்கத்திற்கு வந்தது. சில கிறிஸ்தவ சபைகள் பைபிள் பகுதிகளை தமிழ் உரைநடையில் அச்சிட்டு வெளியிட்டனர். தமிழ்ப்பெரியார் மறைமலையடிகள் தமிழ்

உரைநடையில் எழுதினார். தமிழுக்கு அவர் செய்த சேவை சிறப்புமிக்கது. அதைத் தொடர்ந்து வேறு சில தமிழ் அறிஞர்களும் தமிழ் உரைநடையில் எழுதத் தொடங்கினர். அருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், தனது உயர்ந்த மனிதாபிமானக் கருத்துகளை தமிழ் உரைநடையில் எழுதினார். வள்ளலார் தனது வலுவான கருத்துகளை தமிழ் உரைநடையில் எடுத்துக் கூறினார். எளிய கவிதைகளிலும் தனது கருத்துக்களை வெளியிட்டார். அவருடைய அருட்பா தமிழ் இலக்கியத்தின் தற்கால வரலாற்றில் முக்கிய இடம் பெற்று தமிழக மக்களின் வாழ்க்கையின் பகுதியாக அமைந்திருக்கிறது.

கருணையில்லாத ஆட்சி கடுகி ஒழிக என்றும், கண் மூடிப்பழக்கங்கள் எல்லாம் மண்மூடிப் போகட்டும் என்றும், பசியைப் போக்கு என்றும் கொலையை நிறுத்து என்றும், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்றும் பேசினார். சமரச சன்மார்க்கம் என்னும் ஒரு உயர்ந்த தத்துவத்தை உலகிற்கு அளித்தார்.

தமிழ் நாட்டின் வரலாற்றில் வள்ளலார் காலம் மிக முக்கியமான காலமாகும். அப்போது ஆங்கிலேயர் ஆட்சி பல போர்களிலும் வெற்றி பெற்று இந்தியாவில்—தமிழ்நாட்டில் வலுவாக நிலைபெற்றிருந்தது. அன்னிய ஆட்சியின் கொடுங்கோன்மையின் கீழ் மக்கள் எண்ணற்ற துன்பதுயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்த காலம். அந்த நேரத்தில் தமிழக மக்களுக்கு ஒரு ஆறுதலாக வள்ளலாருடைய தோற்றமும் அவருடைய சன்மார்க்க இயக்கமும் இருந்தது. இலக்கியத் துறையில், தமிழ் இலக்கிய வரலாற்றில் வள்ளலாரின் திருஅருட்பா முக்கியமான இடம் பெற்றது. (வள்ளலார் தமிழ்மொழி மட்டுமே அறிந்தவர்) வள்ளலார் தனது பாக்களிலும் உரைநடையிலும் எளிய முறையில் எளிய தமிழ் நடையில் தனது சமுதாய சீர்திருத்தக் கருத்துகளையும் இலைமறைவு காயாகத் தனது அரசியல் கருத்துக்களையும்

எடுத்துக் கூறினார். அவருடைய காலம் அடுத்து வரும் எழுச்சிக்கு ஒரு விடிவெள்ளியாக அமைந்தது. எனவே வள்ளலாருடைய காலம், அவருடைய திருஅருட்பா பாடல்கள், அவருடைய சத்திய சமரச சன்மார்க்க இயக்கம், அவர் உருவாக்கிய சத்திய தர்ம சாலைகள் தமிழகத்தில் ஒரு புதிய அத்தியாயமாக அமைந்தது. அவருடைய கருத்துகளை உலகறியச் செய்வதற்கு, பாரதம் முழுவதிலும் கொண்டு செல்வதில் தமிழ் சான்றோர் போதிய முயற்சிகள் எடுக்கவில்லை என்று கூற வேண்டியதிருக்கிறது. அனைத்திந்திய அளவில் இராம கிருஷ்ண பரமஹம்சரைப் போல் இராமலிங்க சுவாமிகள் தமிழ் நாட்டில் தோன்றிப் புகழ் பெற்றார். மக்களுடைய உள்ளத்தில் இடம் பெற்றார். ஆனால் இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு ஒரு விவேகானந்தர் அமைந்ததைப் போல், அதன்பின்னர் பல சான்றோர் முயற்சியால் சமுகத் தொண்டுக்கு இராமகிருஷ்ணாமிஷன் அமைந்ததைப் போல, இராமலிங்கருக்கு ஒரு விவேகானந்தரும் ஒரு வலுவான இராமலிங்க மிஷனும் அமையவில்லை. அது தமிழகத்தின் துரதிருஷ்டமேயாகும். எப்படியாயினும் இராமலிங்க சுவாமிகளுடைய தமிழ்த் தொண்டு தமிழகத்திற்கும், தமிழ்மொழிக்கும் கிடைத்த வரப்பிரசாதமாகும். தமிழகத்தின் விழிப்புணர்விற்கு வள்ளலார் ஒருவிடிவெள்ளி எனக் குறிப்பிட்டோம். பின்னர் தோன்றுகிறது விடியலும், பொழுது புலர்வதும், அதை மகாகவி பாரதி அங்கீகரித்துக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

பின்னர், சுதேசமித்திரன் பத்திரிகையும் சுப்ரமணிய பாரதியாரும் தமிழ் உரைநடையில் தோன்றினர். வேறு சில பத்திரிகைகளும் அந்த அணியில் சேர்ந்தன. தமிழ் உரைநடை விரிவடையத் தொடங்கியது.

பாரதி பல்வேறு துறைகளில் தமிழ் உரைநடையைக் கையாண்டார். அக்காலத்தமிழ் உரைநடை வளர்ச்சியைப் பற்றிப்

பல ஆய்வுகளும் உள்ளன. அந்த ஆய்வுகளுக்குள்ளே நாம் செல்லவில்லை. பாரதியின் பலவேறு துறை தமிழ் உரைநடை பற்றி இந்த நூலில் விரிவுபடக் கூறப்பட்டிருக்கிறது.

பாரதியைப் பெரும்பாலும் கவிஞர் என்றுதான் அதிகமாக நாம் அறிவோம், மக்களும் அதிகமாக அவ்வாறேதான் அறிவார்கள். ஆனால் பாரதி கவிதைகளைப் போலவே வீறுகொண்ட பல கட்டுரைகளையும் கதைகளையும் தமிழ் உரைநடையில் எழுதியுள்ளார். பலவேறு அரசியல் கருத்துக்களையும் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களையும் பாரதி தனது உரைநடையில் எழுதியுள்ளார்.

மக்களை பாதிக்கக் கூடிய, மக்களுடைய வாழ்க்கையுடன் தொடர்புள்ள பலவேறு பிரச்னைகளைப் பற்றியும் பாரதி எழுதியுள்ள கட்டுரைகள் அவருடைய உரைநடைப் பகுதியில் வெளி வந்துள்ளன.

அரசியலைப் பற்றி, பலவேறு பொருளாதாரப் பிரச்சனைகளைப் பற்றி சமூக சீர்திருத்தங்களைப் பற்றி பெண்ணுரிமைபற்றி மற்றும் கல்வி, சுகாதாரம், சங்கீதம், தத்துவஞானம், முதலிய பலவேறு பிரச்னைகளைப் பற்றி பாரதி தனது உரைநடையில் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அக்கட்டுரைகள் கதைகள் எல்லாம் மிகப் பெரிய செழுமைமிக்க இலக்கியங்களாகும்.

பாரதி சுதேசமித்திரன் பத்திரிகையின் துணை ஆசிரியராக இருந்து பணியாற்றியுள்ளார், என்பது அனைவரும்அறிந்த ஒன்றாகும். அத்துடன் அவர் வேறு சில இதழ்களையும் தொடங்கி தனது நண்பர்களின் உதவியுடன் அவைகளை நடத்தியுள்ளார். அவைகளில் முக்கியமாக இந்தியா, கர்மயோகி, சக்கரவர்த்தினி, விஜயா முதலியவை குறிப்பிடத்தக்கவை. அவைகள் மூலமும்

பாரதியின் இலக்கியப் பணிகள் கவிதை, கட்டுரை, செய்திக் கட்டுரை, செய்தி விமர்சனம், முதலிய பலவகை உரைநடைத் தமிழையும் எழுதியுள்ளார்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் அவருடைய தேசபக்தப் பாடல்கள் பலவும் பிரபலமடைந்தன. ஆயினும் பாரதியின் முழுவடிவத்தை அப்போது தமிழ் மக்கள் காணவில்லை. படிப்படியாகத்தான் பாரதியை தமிழ் உலகம் அறிந்து கொள்ளத் தொடங்கியது. இன்னும் பாரதியை அறிந்து கொள்ள வேண்டியதும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களும் ஏராளமாக உள்ளன. இன்று பாரதி ஒரு தேசீய மகாகவி என்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளார். தமிழகத்தில் பல ஊர்களிலும் நகரங்களிலும் கிராமங்களிலும் பாரதி மன்றங்கள் தொடங்கப்பட்டு அவருடைய புகழ் பரப்பப்பட்டுவருகின்றது. அவருடைய பாடல்கள் பலவும் மேடைகளிலும் நாடகங்களிலும் திரைப்படங்களிலும், வானொலி, தொலைக் காட்சிகளிலும் பாடப்படுகின்றன.

பாரதியின் ஜன்மதின நூற்றாண்டு விழாவின் போது 1982–ம் ஆண்டில் பாரதி பற்றி, அவருடைய பாடல்களும், கவிதைகளும், கட்டுரைகளும், கருத்துக்களும் சற்று விரிவாகவே தமிழ் கூறும் நல்லுலகத்திற்குச் சென்றது. பாரதி பற்றிப் பலரும் பல செய்திகளையும் கட்டுரைகளையும் பத்திரிகைகளில் எழுதினார்கள். பாரதி பற்றி பல கோணங்களில் பலநூல்களும் வெளிவந்தன.

இன்னும் அவருடைய படைப்புகளில் அவருடைய சுயசரிதைப் பாடல் அதில் ஆங்கிலக்கல்விப் பற்றி அவர் எழுதியுள்ள பகுதி, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், முதலிய பகுதிகள் எல்லாம் ஏன் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டு பாடநூல்களில் கொண்டு

வரப்படவில்லை? இதைக் காட்டிலும் வேறு கொடுமை எதுவும் இருக்க முடியாது.

பாரதியின் இந்தப் பாடல்கள் எல்லாம், பாடல் தொகுப்புகள் எல்லாம், இன்னும், விநாயகர் நான் மணிமாலை, தோத்திரப்பாடல்கள், தேசபக்தப் பாடல்கள், புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு முதலியவைகள் எல்லாம் இன்னும் அதிகமாக மக்களிடம் செல்ல வேண்டும். பள்ளிகளில், கல்லூரிகளில் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும்.

பாரதியின் பகவத் கீதை தமிழாக்கம், அந்தத் தமி ழாக்கத்திற்கு அவர் எழுதியுள்ள முன்னுரை ஆகியவை மிகவும் அற்புதமான படைப்புகளாகும். இவையெல்லாம் மக்களிடம் மிக விரிவாகச் செல்ல வேண்டும். பள்ளிகளில், கல்லூரிகளில் பாடமாகச் செல்ல வேண்டும். பல்கலைக் கழகங்களில் பாரதிக்கு என்று தனித்துறைகள் அமைத்து அவருடைய கருத்துகள் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும்.

"குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களை சமைத்தேன்" என்று கீதை கூறுகிறது. இதிலிருந்து வர்ணங்கள் என்பது பிறப்பினால் அல்ல என்பது தெளிவு.

பாரதி தன்னுடைய கண்ணன் பாட்டில் கண்ணன்–என் தந்தை என்னும் தலைப்பில் 8–வது பாடலில் :

*"நாலுகுலங்கள் அமைத்தான் – அதை*
*நாசமுறப்புரிந்தனர் மூடமனிதர்,*
*சீலம், அறிவு, தர்மம் – இவை*
*சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்*

*மேலவர் கீழவர் என்றே – வெறும்*
*வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்*
*போலிச் சுவடியையெல்லம் – இன்று*
*பொசுக்கிவிட்டால் எவர்க்கும் நன்மையுண்டென்போம்"*

என்று பாரதி குறிப்பிடுகிறார்.

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமையான்"*

என்று வள்ளுவப் பேராசான் கூறுகிறார்.

"எனவே கண்ணபிரான் மனிதருக்குள் ஜாதி வேற்றுமையும் அறிவு வேற்றுமையும் பார்க்கக் கூடாதென்பது மட்டுமேயன்றி எல்லா உயிர்களுக்குள்ளேயும் எவ்வித வேற்றுமையும் பாராதிருத்தலே ஞானிகளுக்கு லக்ஷணமென்று சொல்லுகிறார்" என்று பாரதியார் தன்னுடைய பகவத்கீதை தமிழாக்க நூலுக்கு எழுதியுள்ள முன்னுரை 3–ம் பகுதியில் குறிப்பிடுகிறார்.

உண்மை விவரம் இவ்வாறு இருக்க ஏன் சில மூடமனிதர், அறிவுக்குருடர் கீதையையும் பாரதியையும் அவதூறு செய்து பேசுகிறார்கள்? கண்ண பரமாத்மா அவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கட்டும்.

எனவே பாரதி, அவருடைய நூல்கள், அதன் கருத்துகள், ஆகியவற்றை விரிவாக மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அப்போது நல்லோர்களும் மேலும் நல்ல அறிவைப் பெறுவார்கள். சில மூடங்களும் அறிவு பெற்றுத் தெளிவடைவார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக பாரதியின் உரைநடைப் பகுதிகள் அவருடைய கவிதைகள் மக்களிடம் சென்றுள்ள அளவில் கூட

செல்லவில்லை. அவருடைய உரைநடைப் படைப்புகள் மூலம் தமிழ் உரைநடை புதிய மலர்ச்சியையும் மணத்தையும் பெற்றிருக்கிறது. புதிய எழுத்துப் பாரம்பரியத்தை உண்டாக்கியிருக்கிறது.

பாரதியின் உரை நடைப் பகுதியில் அவருடைய கட்டுரைகள், கதைகள், பகவத் கீதை தமிழாக்கத்திற்கு அவர் எழுதியுள்ள முன்னுரை, அவர் எழுதி வெளியிட்டுள்ள கவிதைத் தொகுப்புகளுக்கு எழுதியுள்ள முன்னுரை, விளக்கவுரைகள், அவர் பத்திரிகைகளுக்கு எழுதியுள்ள செய்தித் தொகுப்புகள் கட்டுரைகள், பலவேறு தலைப்புகளில் அவர் எழுதியுள்ள பல தனிக்கட்டுரைகள் கதைகள் அவைகளின் கருத்துகள் ஆகியவை எல்லாம் விரிவாக மக்களிடம் செல்ல வேண்டும்.

இந்த நூல் அந்த மகத்தான பணியில் ஒரு இம்மித்துளியாக, அணுவில் சதகோடியாகத் திகழுமாயின் நாம் கண்ணன் அருளையும் பாரதியின் ஆசியையும், பெற்றுள்ளோம் என்று பெருமைப்படலாம்.

பலவேறு தலைப்புகளில் பாரதி எழுதியுள்ள எழுத்துரைகளில், அவருடைய உரைநடையின் சிறப்புக்குச் சான்றாக இந்த நூலில் பல எடுத்துக்காட்டுகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளைத் தமிழ் மக்கள் தனியாகவும் படித்துப் பயன் பெற வேண்டும். அவைகளின் மூலக்கட்டுரைகளைக் கண்டு அவைகளையும் படித்து பயனடைய வேண்டும், என்றும் அக்கருத்துகளை மக்களிடம் பரப்ப வேண்டிய கடமையை, பாரதிக்கு நாம் அனைவரும் ஆற்றவேண்டிய சேவையாக நிறைவேற்ற வேண்டும், எனவும் வேண்டுகிறோம்.

## 2. மொழி : மொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

மொழி என்பது மனிதனுக்குரிய மிகப் பெரிய செல்வமாகும். மனிதனுக்கே உரிய, மனிதனுக்கு மட்டுமே உரிய தனிச் செல்வமாகும். ஆதி மனிதன் பேசத் தெரிந்தவனாக இல்லை. அவன் படிப்படியாக வாழ்க்கை முறைகளில் வளர்ச்சி பெற்றபோது பேசத் தெரிந்தவனாகவும், மேம்பாடு அடைந்தான். மனிதனுக்கு மனிதன் தங்கள் சிந்தனைகளின் வெளிப்பாடுகளையும் கருத்துகளையும் பரிமாறிக் கொள்ளத் தெரிந்து கொண்டபோது மொழிகளின் ஆரம்ப வடிவங்கள் தோன்றியிருக்கின்றன.

தொடக்க கால மனிதன் இனக் குடும்பங்களாக வாழ்ந்து, பின்னர் இனக் குழுக்களாக வளர்ச்சி பெற்று அதன்பின்னர் அந்த இனக் குழுக்களும் இணைந்து இனக் கூட்டங்களாக வளர்ச்சி பெற்றுள்ளதாக மனித இன வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்போது பல இனக்குழுக்களின் பேச்சு மொழிகளும் இணைந்து இனக் கூட்டமொழிகளாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன.

ஆதிமனிதன், காடுகளிலும் மலைகளிலும், கடலோரங்களிலும் வாழ்ந்தபோது, கல்லும் கம்புமே அவர்களுடைய உற்பத்திக் கருவிகளாகவும், ஆயுதங்களாகவும் இருந்த போது உணவு சேகரித்தலும் வேட்டையாடுதலும், மீன் பிடித்தலுமே முக்கியத் தொழில்களாக இருந்தபோது, இனக் குழுக்கள் சமுதாயங்களாக வாழ்ந்து வந்தனர். இராமாயணத்தில் வரும் வானர இனமக்கள் மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்தார்கள். அவர்களுடைய கருவிகளும், ஆயுதங்களும் கல்லும், கம்புமாகவே இருந்தன.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலத்தை நால்வகையாகப் பிரித்தும் அவைகளில்

வாழ்ந்து வந்த மக்களையும் நால்வகையாகப் பிரித்தும் அவர்களுடைய தொழில்களையும், பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் பிரித்து விளக்கிக் கூறியிருப்பதையும் காண்கிறோம்.

அவ்வாறு ஆரம்பகால மக்கள் இனக்குழுக்களாகக் கூடி வாழ்ந்தபோது இனக்குழு மொழிகள் உருவாகி வளர்ந்துள்ளன.

அந்தப் புராதன சமுதாய மக்கள் தங்களுடைய சமுதாய வளர்ச்சியைத் தொடர்ந்து ஆடுமாடு மேய்த்தல், கால் நடை பராமரித்தல், அவை தொடர்பான தொழில்கள் பலவற்றிலும் ஈடுபட்டு சமுதாய செயல்பாடுகளும் மனிதத் தொடர்புகளும், கூட்டுத் தொழில்களும் விரிவடைந்தன. காலப் பயணத்தில், நதி ஓரங்களையும், புல்வெளிகளையும் மக்கள் தேடிச் சென்ற போது பல இனக்குழுக்களும் சந்தித்து இணைந்தபோது, அவ்வினக் குழுக்கள் இணைந்து ஒன்றிணைந்த இனக் கூட்டங்களாக உருவாகி வளர்ச்சி பெற்றிருக்கின்றன, விரிவடைந்திருக்கின்றன. அப்போது அந்த இனக்குழுக்களின் மொழிகள் இணைந்து இனக் கூட்ட மொழிகளாக ஒன்றிணைந்து வளர்ச்சி பெற்றுப் புதிய மொழி வடிவங்கள் பெற்றிருக்கின்றன. வாய்மொழி வடிவங்களாக அம்மொழிகள் வளர்ச்சி பெற்றுத் தொடக்க கால மொழி இலக்கியங்களும் தோன்றியிருக்கின்றன.

அந்தப் பண்டைய இலக்கியங்கள் வாய்மொழி வழியாக வாழையடி வாழையாக, தலைமுறை தலைமுறையாக, ஒருதலை முறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குச் சொல்லப்பட்டு மனப்பாடமாகத் தொடர்ச்சியாக வளம் பெற்று சமுதாயத்தில் நிலைபெற்றிருக்கிறது. இந்த ஆரம்ப இலக்கியங்கள், ஒவ்வொரு தலைமுறையின் போதும், மேலும் செழுமையும் வளமும் பெற்று

வளர்ச்சி பெற்றுப் பேரிலக்கியங்களாக நிலை பெற்று நின்றிருக்கின்றன.

அத்தகைய பல இலக்கியங்களின் வளர்ச்சியை ஒட்டி அந்தந்த இனக் கூட்ட மொழிகளும் வளர்ச்சி பெற்றிருக்கின்றன, மேம்பாடு அடைந்திருக்கின்றன. அக்கால இலக்கியங்கள், மக்கள் பேசும் மொழிகளில், எளிய பதங்களில், எளிய வழிமுறையிலான கவிதைகள், பாடல்கள் கண்ணிகள் ஆகிய வடிவங்களில் அமைந்து மக்களின் உள்ளங்களில் இடம் பெற்று, மனப் பாடங்களில் நிலை பெற்று வளர்ச்சியடைந்திருக்கின்றன.

இனக் கூட்டங்கள் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டும் கால் நடைகளைப் பராமரித்துக் கொண்டும் காலப் பயணத்தில் தண்ணீர் வசதிகளும், புல்வெளிகளும் அதிகமாக உள்ள இடங்களை நோக்கி நகர்ந்து சென்ற போது மீண்டும் பல மனிதக் கூட்டச் சந்திப்புகளும், சேர்க்கைகளும், இணைப்புகளும் நிகழ்ந்திருக்கின்றன. மனித சமுதாயங்களின் பெருக்கத்தையும் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் ஒட்டி ஆற்றோரங்களிலும், மலையடிவாரங்களிலும், கடலோரங்களிலும் மனித இனக் கூட்டங்களின் ஒன்றிணைந்த சமுதாயங்கள் நிலைபெறத் தொடங்கின.

ஆடுமாடுகள் மேய்த்தல், கால்நடை பராமரித்தல், மீன் பிடித்தல், பின்னர் சிறிய அளவிலும், படிப்படியாகப் பெரிய அளவிலும் சாகுபடித் தொழில், அவைகளைத் தொடர்ந்து அவை தொடர்பான கைவினைத் தொழில்களும் வளர்ச்சி பெற்று மனித நாகரிகம் புதிய கட்டங்களை எட்டியிருக்கின்றன. மனித சமுதாயத்தின் இவ்வாறான வளர்ச்சியில் புதிய உற்பத்தி சக்திகளும், உற்பத்தி சாதனங்களும், உற்பத்திக் கருவிகளும்

மனித ஆற்றலும் வளமும் மனிதனுடைய உழைப்பு சக்தியும் அறிவுத் திறனும் வளர்ச்சி பெற்றுப் புதிய கட்டங்களை எட்டியிருக்கிறது.

இக்காலங்களில் பலவேறு இனக் கூட்டங்களில், பேச்சு மொழிகளும் இலக்கியங்களும் கவிதைகளும் பாடல்களும் இணைந்து வளர்ந்து நிலை பெற்றிருக்கின்றன. சேர்ந்தாற் போல கூடி வாழ்ந்த மக்கள் சமுதாயங்களில் மொழிகளும் வளர்ச்சி பெற்றுப் புதிய பரிமாணங்களில் விரிவடைந்து மொழிகளின் புதிய பல இலக்கியங்களும் இலக்கணங்களும் வளர்ச்சிபெற்று, அவற்றின் புதிய வரிவடிவங்களும், எழுத்து வடிவங்களும் தோன்றி நிலைபெற்றிருக்கின்றன. இலக்கிய இலக்கண வளர்ச்சிக்கு வெறும் மனப் பாடங்கள் போதவில்லை. எழுத்து வடிவங்கள் தேவைப்பட்டன. இலக்கியங்களும், இலக்கணங்களும், பாடல்களும், கவிதைகளும், எழுத்து வடிவங்களில் பதிவு செய்யப்பட வேண்டிய வளர்ச்சிக் கட்டம் உருவாகியது.

அத்தகைய பண்டய கால சமுதாய முன்னேற்றங்களில் உலகில் நாகரிக வளர்ச்சியின் அடையாளங்களைப் பதித்திருந்த சமுதாயங்களில் பாரத சமுதாயம் பெரிதும் முன்னேறி வளமும் வளர்ச்சியும் பெற்றிருந்தது. அதன் முக்கிய பகுதியாக, அதன் முக்கிய அங்கமாகத் தமிழ் சமுதாயம் இடம் பெற்றிருந்திருக்கிறது. அதன் மொழியான தமிழ் மொழியும் புதிய சொல் வடிவங்களும் வரி வடிவங்களும் பெற்றுச் சிறப்பான இலக்கியங்களையும் ஆடல் பாடல்களையும் கூத்துகளையும் மற்றும் பல துறைக் கலைகளையும் வளர்த்திருக்கிறது.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் மூன்று தமிழ் நாடுகளையும் தமிழ்ச் சமுதாயத்தின் பலதுறை வளர்ச்சியைப் பற்றி அறியமுடிகிறது. நகரங்களின் வளர்ச்சி, துறைமுகங்கள்,

வெளிநாட்டு வாணிபம், நகர அமைப்புகள், மக்களின் வளம், ஏராளமான பொருள்கள் நிறைந்த அங்காடிகள் கடைவீதிகள், பலவகையான தொழில் உற்பத்திப் பொருள், விவசாயம், பால் உற்பத்தி, ஆபரணத் தொழில்கள், ஆலயங்கள், வழிபாடுகள், அரசு, அரசியல் நிர்வாகம், உள்நாட்டு வாணிபம், ஆடல் பாடல், நாட்டியம், பலவகை சிறப்பு மிக்க கூத்துகள், இசை, இசைக் கருவிகள், இலக்கியம், கவிதைகள் இன்னும் இவ்வாறான தமிழகத்தின் சிறப்புகளை அறிய முடிகிறது.

ஆடுமாடு மேய்த்தல், கால் நடைபராமரித்தல், சாகுபடி மற்றும் பாசன மேம்பாடு, மீன் பிடித்தல் மற்றும் கடல் சார்பு தொழில்கள் கப்பல் கட்டுதல், நெசவுத் தொழில் மற்றும் இதர பலவகை கைவினைத் தொழில்கள், வாணிபம், சமுதாய நிர்வாகம், ஆலயங்கள், திருவிழாக்கள், ஆட்சி, அரசியல் நிர்வாகம், நீதி, சட்டம், காவல், தண்டனை நிர்வாகம் பற்றிய இலக்கியங்களையும் தமிழ் பூமி வளர்த்துள்ளது. நாட்டின் பொதுச் செல்வத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "நிலம் தருதிருவும், கலம் தருதிருவும்" என்று சிலப்பதிகாரக் காப்பியம் குறிப்பிடுகிறது. கம்பன் தனது இராமாவதாரப் பெருங்காவியத்தில் கோசல நாட்டைப் பற்றிக் குறிப்பிடும்போது "*கலம் சுரக்கும் நிதியம்; கணக்கிலா நிலம் சுரக்கும் நிறைவளம்; நன்மணிபிலம் சுரக்கும்; பெறுதற்கு அரியதம் குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்*" என்று கூறுகிறார். கம்பன் இவ்வாறு கூறும்போது தமிழகத்தையும் பாரதத்தையும் மனதில் வைத்தே கூறுகிறார்.

*கலம்* சுரக்கும் நிதியம் என்பது கடல்வளம், கடல் வாணிபம் மூலம் வரும் வளம் ஆகியவைகளாகும். *நிலம்* சுரக்கும் நிறைவளம், என்பது நீர், சாகுபடி, காடுகள், மலைவளம் தோட்டங்கள், துரவுகள், கால் நடைவளம், பால்வளம்,

தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்வளம் முதலிய முதல்நிலை உற்பத்தி அனைத்தும் அடங்கும்.

பிலம் என்பது சுரங்கம், நன்மணிபிலம் சுரக்கும் என்பது சுரங்கங்கள் மூலம் கிடைக்கும், உலோகவகை தங்கம் வெள்ளி வைரம் முதலியனவாகும்.

குலம் சுரப்பது மனித வளம். உழைப்பு, அறிவாற்றல், ஒழுக்கம், கடமையாற்றல் முதலிய பலமுக திறன் படைத்த வற்றாத மனித வளத்தைக் கொண்டிருக்கிறது பாரத நாடு என்று இந்தக் கவிதை பொருள்படுகிறது.

எத்தனை அரிய உயரிய கருத்துகளை இந்தப் பாடல்வரிகள் எடுத்துக் கூறுகின்றன?

இந்த வகையில் தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும், செம்மொழிச் சிறப்புடன் உலக மொழிகளில் முக்கிய மொழியாக இடம் பெற்றிருக்கிறது. இன்று தமிழ் மொழி பன்னாட்டு மொழிகளில் ஒன்றாக விரிவுபட்டு உலகின் பல நாடுகளிலும் பரவி இடம் பெற்றிருக்கிறது.

இவ்வாறு பண்டைய காலத்திலும் மத்திய காலத்திலும் எல்லா மொழிகளின் இலக்கியங்களும், கவிதை மற்றும் பாடல் வடிவங்களிலேயே வெளிவந்து நிலை பெற்றிருக்கின்றன. பிற்காலத்தில் தோன்றி வளர்ச்சி பெற்ற ஆங்கில மொழியில் கூட உலகப் புகழ்பெற்ற சேக்ஷ்பியர் நாடகங்களும் மில்டனின் படைப்புகளும் கவிதை வடிவில்தான் வெளிவந்தன.

எழுத்து, எழுத்தாணி, ஏடுகள், சுவடிகள், பனைஓலைக் கட்டுகளில் சீரும் சிறப்பும் மிக்க தமிழ் இலக்கியங்களும்,

காவியங்களும் காப்பியங்களும் இதர பல அறிவியல் தத்துவம், மருத்துவம், மற்றும் பல அருங்கலை நூல்களும் பலவகைக் கவிதை வடிவங்களில்தான் இடம் பெற்று மக்களிடம் பரவியிருந்தது. கவிதை வடிவங்கள் மனப்பாடம் செய்து கொள்வதற்கு எளிதானது. அவைகளைப் படித்து விளக்குபவர்களும் பாராயணம் செய்பவர்களும் மனப்பாடம் செய்து கொள்பவர்களும் மற்றவர்களுக்குப் பாடம் போதிப்பவர்களும் சிலரே இருந்தனர்.

உரைநடை என்பது செப்பேடுகள், அரசர்களின் ஆணைகள் கீர்த்திகள், ஆகியவைகளிலேயே இடம் பெற்றிருந்தன. கவிதை வடிவங்கள் என்பது சமுதாய வளர்ச்சியின் குறிப்பிட்ட வாழ்க்கைச் சாதனங்கள் மற்றும் கருவிகளின் வளர்ச்சி கட்டத்தைச் சார்ந்து உருவாகி நிலைபெற்றிருந்தன.

கவிதைகள் (செய்யுள் வடிவம்) சுருங்கக் கூறிவிரிந்த பொருளைத் தரத்தக்கது. சூத்திரங்கள், ஈரடிக் குறட்பாக்கள், நாலடிப்பாக்கள், விருத்தப் பாக்கள், வெண்பாக்கள் மற்றும் பல வடிவங்களில் கவிதைகள், பாசுரங்கள், பாடல்கள் வடிவங்களில் இலக்கியங்கள் தோன்றின. அவைகளுக்கு, அதாவது அத்தகைய மூல நூல்களுக்கு தனியான உரைநூல்களும் எழுதப்பட்டிருந்தன. மற்றும் விளக்கவுரைகள், விரிவுரைகள் மூலம் தனியான வல்லுனர்களால் உரை ஆசிரியர்களால் விளக்கப்பட்டன. பிரவசனம் செய்யப்பட்டன.

பாரதநாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் கல்வி முறையும் பரம்பரை பரம்பரையாக குருகுல அடிப்படையில் அமைந்திருந்தன. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை ஒட்டியே கல்வி சாதனங்களும் அமைந்து மொழியும் இலக்கியங்களும் சாத்திரங்களும், உருவாகி

வளர்ச்சி பெற்றிருந்தன. அதே சமயத்தில் பாரத நாட்டில் மிகவும் எளிமையான கருவிகள் சாதனங்களைக் கொண்டே மிகப் பெரிய அளவில் இசையும் இலக்கியங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக நாரதர், தும்புரு போன்ற இசை ஞானிகள் ஒப்பு உயர்வு நிறைந்தவர்கள். அவர்களுடைய இசை ஞானத்திற்கு உலகில் ஈடு இணையே இல்லை. தியாகப் பிரம்மம், அன்னமாச்சாரியார் மற்றும் நமது இசை மேதைகளுக்கு ஈடு இணையே இல்லை. மிகவும் உயர்வான மிகவும் மேலான உயர்ந்த சங்கீத மேதைகள். மிகவும் சிறிய சாதாரண இசைக் கருவிகளைக் கொண்டே அவர்கள் நமது இசையை உயர்த்தினார்கள். இதே போல பாரத நாட்டின் தலை சிறந்த அறிவியல் மேதைகள், ஞானிகள் எளிய முறையிலான கருவிகளைக் கொண்டே அரிய சாதனைகளைச் செய்து முடித்திருக்கிறார்கள். அதேபோல நமது குருகுலக் கல்வி முறையில் மிகவும் எளிமையான சாதனங்களைக் கொண்டே மிக உயர்ந்த கல்வியைக் கொடுத்திருக்கிறார்கள்.

பண்டைய கிரேக்க இதிகாசங்கள், கிரேக்க, லத்தீன் மொழிக் கதைகள், காவியங்கள் சாத்திரங்கள், அறிவியல் இலக்கியங்கள் ஆகியவைகளின் அடிப்படையில் அவைகளை மூலமாகக் கொண்டு ஐரோப்பிய இலக்கியங்களும் தத்துவங்களும் சாத்திரங்களும் பிற்காலத்தில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன.

பாரதநாடு அறிவுத்துறையில் மிகப் பண்டைய காலத்திலிருந்து உலகின் முன்னணியில் இருந்தது. சகல துறைகளிலும் கல்வியில் வளர்ச்சி பெற்றிருந்தது. ஊர்தோறும் இன்னும் தெருக்கள் தோறும் கூட குருகுலங்களும் திண்ணைப் பள்ளிக் கூடங்களும் நடைபெற்றும் அனைவரும் கல்வி கற்றவர்களாக இருந்தனர். பல மிகப் பெரிய பல்கலைக் கழகங்களும் சிறப்புற்று விளங்கின. அப்பல்கலைக் கழகங்களில்

பாரதம் முழுவதிலிருந்தும் இன்னும் உலகின் பலநாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்து சேர்ந்து கல்வி பயின்றனர். பாரதத்தின் பல மொழிகளும் வளர்ச்சி பெற்றிருந்தன. அவைகளில் சமஸ்கிருதமும், தமிழ் மொழியும் முக்கிய இடம் பெற்றிருந்தன. பாரத நாட்டின் மொழிகள், இலக்கியங்கள், தத்துவங்கள் மற்றும் இதர சாத்திரங்கள் முதலியவைகளின் வளர்ச்சியில் வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், நீதி சாத்திரங்கள், தர்ம சாத்திரங்கள், அர்த்த சாத்திரங்கள், அறிவியல் சாத்திரங்கள், அறநூல்கள், தத்துவ சாத்திரங்கள், வைத்தியம் மற்றும் மருந்தியல் நூல்கள், சிற்ப சாஸ்திரங்கள், கணிதம், காலக் கணித நூல்கள், முதலியவை வடமொழியில் உருவாகி வளர்ச்சி பெற்று இந்திய மொழிகள் அனைத்திலும் பரவி பரஸ்பரம் செல்வாக்கினைச் செலுத்தி பாரதத்தின் அத்தனை மொழிகளின் பொது வளர்ச்சிக்கு உதவியுள்ளன.

இதில் தமிழ் மொழி, வடமொழிக்கு ஈடாக மொழி வளமும், இலக்கிய வளமும், இலக்கண வளமும் சாத்திர வளமும் பெற்று சங்க நூல்கள், அறிவியல் நூல்கள், சிற்ப சாத்திர நூல்கள், கணிதம் மற்றும் காலக்கணித நூல்கள் அறநூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், வில்லி பாரதம் தத்துவ ஞான நூல்கள், இசை மற்றும் ஆடல் பாடல் பற்றிய நூல்கள், வைத்திய நூல்கள் முதலியவைகளில் தனித் தன்மையுடன் வளர்ச்சி பெற்று இதர இந்திய மொழிகளுடன் பரஸ்பரம் செல்வாக்கைச் செலுத்திச் செழுமை பெற்றுள்ளது.

கம்பன் தனது இராமாவதாரக் காவியத்தில் இராமனைப் பற்றிக் குறிப்பிடும்போது "தென்சொல் கடந்தான், வட சொல்கலைக்கு எல்லை தேர்ந்தான்" என்று இராமனை இருமொழிகளிலும் வல்லவன் என்று குறிப்பிடுகிறார். மேலும்,

*"ஆரியம் முதலிய பதினெண்பாடையில்*
*பூரியர் ஒரு வழிப்புகுந்ததாம் என*
*ஓர்வில கிளவிகள் ஒன்றொடு ஒப்பில*
*சோல்வில விளம்பு புவிது வன்றுகின்றது"*

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

பாரதியோ, " விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி, வேண்டிய வாறுனைப் பாடுதும் காணாய்" என்றும்,

*"செப்புமொழி பதினெட்டுடையாள் எனில்*
*சிந்தனை ஒன்றுடையாள்"*

என்றும் பாடுகிறார்.

இந்திய இலக்கியங்களின், பலவேறு சாத்திரங்களின், தத்துவங்களின், தத்துவ ஞானங்களின், அறிவுத்துறைச் செல்வங்களின், புத்த ஜாதகங்களின் தொடர்பையும் இணைப்பையும் பரஸ்பரம் செயல்பாட்டையும், செல்வாக்கு செலுத்தலையும், அவைகள் மூலம் நமது மொழிகளின் வளர்ச்சி பற்றியும், தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள் பலரும் எடுத்துக் கூறியுள்ளதைக் காண்கிறோம். சமஸ்கிருத மொழி இலக்கியங்கள் மற்றும் சாத்திரங்களுக்கு இதர மொழி அறிஞர்களும் வல்லுனர்களும் தங்கள் பங்கைச் செலுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக ஆதிசங்கரர் தனது நூல்கள் பலவற்றையும் பொது மொழியான வடமொழியிலே எழுதினார். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சிற்ப சாஸ்திரம் வாஸ்து சாஸ்திரம் பற்றி தமிழ் மொழியிலும் சமஸ்கிருதத்திலும் பல நூல்களும் இருந்து வந்திருக்கின்றன. அதில் பலரும் பங்கு கொண்டிருந்தனர் என்று இன்றைய சிற்ப சாஸ்திர மேதை கணபதி ஸ்தபதியார் கூறுகிறார்.

## 3. எழுத்தும் சொல்லும்

மனிதனுடைய வாயொலிகளிலிருந்து, அவனுடைய உச்சரிப்பிலிருந்து எழுத்துகளும் அவ்வெழுத்துகளின் சேர்மானங்களிலிருந்து சொற்களும், அந்த சொற்களுக்குப் பொருளும் கருத்தும், கருத்தமைவுகளும் கருத்து வடிவங்களும் உண்டாயிருக்கின்றன.

சொற்களும் சொற்றொடர்களும் ஒவ்வொரு மொழியிலும் உயிர்த்துடிப்பானவை. சிறந்த கவிஞனின் கவிதைகளும், மற்றும் காவியங்களும் காப்பியங்களும் நூல்களும் எழுத்தாளர்களின் படைப்புகளும் அத்தகைய உயிர்த்துடிப்பை வெளிப்படுத்துகின்றன.

ஒருமொழியின் வளம் அதன் சொற்களின் எண்ணிக்கையிலும், அச்சொற்களின் பொருளிலும், அப்பொருளின் ஆழத்திலும் விரிவிலும் அடங்கியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட எந்தக் கருத்தையும் ஒரு மொழியில் கஷ்டமில்லாமல் சொல்ல முடியுமானால் அம்மொழி ஒரு வலுவான வளமான மொழியாகும் என்று கூறலாம்.

காலத்தால், இடத்தால், மனிதகுல வரலாற்றில், உற்பத்தி சக்திகளின், மனித வளத்தின், மனித நாகரிகத்தின், பொருள் செல்வத்தின் மற்றும் அறிவுச் செல்வத்தின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் ஒட்டி மொழிகளின் சொற்களும் அவற்றின் பொருளும் விரிவுபட்டு வளர்ந்திருக்கிறது. எனவே மொழியின் வளர்ச்சிக்குச் சொல்வளம் பெருகிக் கொண்டேயிருக்க வேண்டும்.

அவ்வாறு தமிழ் மொழியின் சொல்வளம் மத்திய காலம்வரை பெருகிக் கொண்டே வந்து செழுமை பெற்றிருக்கிறது. கம்பராமாயணம், காப்பியங்கள், திருக்குறள், சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள், முதலியன தமிழ் மொழியின் சொல்வளத்தை மிகப் பெரிய அளவில் பெருக்கியிருக்கின்றன.

"எல்லையொன்றின்மை என்னும் பொருளதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி என்று பாரதி கம்பனைக் குறித்துக் குறிப்பிடுவதைக் காணலாம்.

சொற்கள் எந்த மொழியிலும் அந்த மொழியின் எழுத்துகளின் சேர்க்கையால் உண்டானது மட்டுமல்ல. அந்த சொற்களுக்கு அவைகளுக்குரிய பொருளும் கருத்துகளும் கருத்தமைவுகளும் கருத்து வடிவங்களும் அமைகின்றன. இவையெல்லாம் நீண்ட மொழி ஆராய்ச்சிக்கு உரியனவாகும்.

கம்பனுடைய மகாகாவியத்தில் ஏராளமான பல புதிய சொற்கள் காலத்திற்கேற்றவாறும், நீண்ட எதிர் காலத்திற்குப் பொருந்தும் முறையிலும் வடிவப்பட்டு வந்திருக்கின்றன. அவர் கையாண்டுள்ள பல சொற்களுக்குப் புதிய விரிவான பொருளும் வந்திருக்கிறது. புதிய கருத்துக்களும் கருத்தமைவுகளும், கருத்து வடிவங்களும் கொண்ட சொற்களும் வந்திருக்கின்றன. அவைகளுக்குக் காலத்திற்கேற்றவாறு விளக்கங்களும் வியாக்யானங்களும் விரிவுரைகளும் வளர்ந்திருக்கின்றன.

எடுத்துக் காட்டாக உலகு, உலகம் என்னும் சொற்கள் தமிழ் மொழியின் வடிவம் பெற்று தமிழ் மொழியில் இணைந்திருக்கிறது. ஆயினும் அந்த சொற்களின் பொருள் காலத்தாலும் இடத்தாலும் விரிவடைந்து கொண்டே வந்திருக்கிறது.

தமிழ் புலவர்களும், கவிஞர்களும், இலக்கியப் படைப்பாளர்களும் உலகு, உலகம் என்னும் சொற்களை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர். இதில் அவர்களுடைய பொதுமை நோக்கம் வெளிப்படுகிறது.

புறநானூற்றுப் பாடல்கள் உலகை இயற்கையின் வடிவமாகவே காண்கிறது. "மண் திரிந்த நிலனும், நிலம் ஏந்திய

விசும்பும், விசும்புதை வருவளியும், வளித்தலை இய தீயும், தீமுரணிய நீரும், என்றாங்கு ஐம்பெரும்பூதத்து இயற்கைபோல'' என்று புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. "புத்தேள் உலகத்து" என்றும் குறிப்பிடுகிறது. அத்துடன் ஞாலம், வையம், நிலம், பார், என்னும் சொற்களையே உலகைக் குறிப்பதற்குப் பெரும்பாலும் கூறி வருகிறார்கள்.

"மலர்தலை உலகின் மல்கிருள் அகல" என்று நன்னூல் தொடங்குகிறது. இங்கு மலர்தலை உலகு என்பது மிகவும் விரிவான பரந்த இந்தப் பேருலகைக் குறிக்கிறது. இதில் உலகம் முழுவதும், அதில் அடங்கியுள்ள பொருள்கள் அனைத்தும் என்று அதன் விரிவான பொருளில் நாம் புரிந்து கொள்ளலாம். உலகம் என்றால் உலக மக்கள் என்று பொருள் கொள்ளலாம், அல்லது வெறும் மக்கள் என்றே கூட புரிந்து கொள்ளலாம். நமது பாராளுமன்ற மக்களவைக்கு லோக் சபா என்று பெயர். லோக் சபா என்றால் மக்களவை என்றுதான் பொருள்.

ஞாயிறு தோன்றும் போது அதாவது சூரியன் உதிக்கும் போது இந்த உலகில் பரவியுள்ள இருள் அனைத்தும் நீங்கி, உலகின் பொருளனைத்தும் உயிரனைத்தும் தூக்கத்திலிருந்து எழுந்து ஒளிபெற்று உயிர் பெற்றுச் செயல் படத் தொடங்குகின்றன என்னும் கருத்தையும் அச்சொற்களில் காண்கிறோம்.

இளங்கோவடிகளார் தனது சிலப்பதிகாரக் காப்பியத்தில் மங்கல வாழ்த்துப் பாடல்களில், "அங்கண் உலகு'' என்றும், "நாமநீள்வேலி உலகு'' என்றும், மண்ணுலகை மட்டுமே குறிப்பிட்டுக் கூறுகிறார் என்றாலும், இவ்வுலகில் உள்ள பொருளனைத்தும் உயிரனைத்தும் இச்சொல்லில் நிறைந்து நிற்கிறது என்பதைக் காண்கிறோம். திங்களின் ஒளியும் மாமழையின் அருளும், ஆட்சியின் கருணையும் உலகைக் காக்கிறது என்னும் பொருள் அச்சொல்லில் நிறைந்திருக்கிறது.

*“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு”*

என்னும் பெருமைக்குரிய திருக்குறளின் முதற்பா, தொடக்கத்தில் எழுத்தெல்லாம் அகரத்திலிருந்து தொடங்குவதைப் போல உலகமெல்லாம் ஆதி பகவனிடமிருந்து தொடங்குகிறது என்றோ அல்லது உலகமெல்லாம் ஆதிபகவனிடமிருந்து தொடங்குவதைப் போல எழுத்தெல்லாம் அகரத்திலிருந்து தொடங்குகிறது” என்றும் கொள்ளலாம். உலகத்திலுள்ள அனைத்து மொழிகளிலும் எழுத்துக்கள் அகரத்திலிருந்தே தொடங்குகின்றன. இதில் நமது குறிப்பு உலகம் என்பது பற்றியதாகும். அந்த உலகு ஆதி பகவனிடமிருந்து தொடங்குகிறது என்பது வள்ளுவர் வாக்கு. இங்கும் உலகு என்பது அனைத்தளாவிய பொருளின் கருத்து வடிவத்திலேயே குறிப்பிடப்படுகிறது.

இனி கம்பன், “உலகம் யாவையும் தாமுள ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும்” என்று குறிப்பிடுகிறார். இங்கு உலகத்தில் உள்ள பொருள்கள் அனைத்தின் செயல்பாட்டினையும் நிலைபாட்டினையும் கம்பர் குறிப்பிடுகிறார். உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் இடைவிடாத இயக்கத்தில், மாற்றத்தில், மேல் நோக்கிய வளர்ச்சியில், தோன்றியும் நிலைபெற்றும், நீங்கியும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்னும் கருத்தமைவு புலப்படுகிறது. இங்கு உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் தோன்றி நிலைபெற்று பழயநிலையிலிருந்து நீங்கி புதிய நிலைக்கு இடைவிடாமல் மாறிக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளைக் கம்பன் எடுத்துக் காட்டுகிறார். இங்கு உலகும், உலகத்தின் அனைத்துப் பொருள்களும் அவைகளின் நிகழ்ச்சிகளும் அவைகளின் இடைவிடாத பிறப்பும் தோற்றமும், இருப்பும் வளர்ச்சியும் மாற்றமும் கொண்ட ஒரு அற்புதமான காட்சியைக் கம்பன் நமக்குக்

காட்டுகிறார். அதையே ஆண்டவனுடைய அலகிலா விளையாட்டாகக் கம்பன் எடுத்துக் காட்டுகிறார்.

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அறியவன்" என்று சேக்கிழார் பெருமான் தனது பெரிய புராணப் பெருநூலைத் தொடங்குகிறார். இங்கு "உலகெலாம்" என்பது உலகில் உள்ள உயிர்ப்பொருள் அனைத்தும் என்றும், "அறிவு பெற்றுள்ள உயிர் எல்லாம்" என்றும் பொருள் கொள்ளலாம்.

இவ்வாறு மிக விரிவான, பரந்த ஆழ்ந்த, அனைத்தளாவிய கருத்து வடிவத்தில் உலகு, உலகம் என்னும் சொற்களைக் காண்கிறோம்.

ஒரு மொழியின் கவிதை வடிவாயினும், உரைநடை வடிவாயினும், அதன் சொல் பெருக்கத்தை ஒட்டி வளம் பெற்று விரிவடைகிறது என்பதைக் காண்கிறோம். அந்த வகையில் தமிழ் மொழியில், குறிப்பாகச் சங்க காலத்திலிருந்து மத்திய காலம் வரையில் கவிதை (செய்யுள்) வடிவில் எண்ணற்ற பல நூல்களும் தோன்றிச் சொல்வளம் பெற்றிருக்கிறது. அந்தச் சொற்களின் பொருளும், கருத்துக்களும் கருத்தமைவுகளும் கருத்து வடிவங்களும் வளம் பெற்று விரிவடைந்திருக்கின்றன என்பதைக் காண்கிறோம்.

பலவேறு சமயங்களும் சிறந்த பல தத்துவஞானக் கருத்துக்களையும், அறநெறிகளையும், ஒழுக்க நெறிகளையும், தனிமனித வாழ்க்கை மற்றும் சமுதாய வாழ்க்கையின் தத்துவங்களைப் பற்றியெல்லாம் கூறும் சிறந்த கருத்துக்களைப் பற்றி, "பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்தது" என்று ஆற்றின் பெருமையைப் பற்றி அது கொடுக்கும் வளத்தின் விரிவைப் பற்றிக் கம்பர் கூறுகிறார். கோசல நாட்டுமக்கள்

செல்வமும் கல்வியும் நிறைந்திருந்தனர் என்று இரண்டையும், இணைத்துக் கூறுகிறார். இன்னும், "எல்லாரும் எல்லாப்பெரும் செல்வமும் எய்தலாலே இல்லார்களும் இல்லை, உடையார்களும் இல்லை" என்று கோசல நாட்டு மக்கள் எல்லாப் பெரும் செல்வங்களையும் பெற்றிருந்தனர், என்று அந்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை மிகவும் உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்திக் காட்டி எடுத்துக் கூறியிருக்கிறார். இன்னும் "அன்பு அரும்பி தருமம் மலர்ந்து நிறைந்திருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இன்னும் கோசலநாடு போர் இன்றி சமாதானம் நிலவியிருந்தது. உள்நாட்டுக் கலவரங்களும் சண்டைகளும் களவுகளும் சச்சரவுகளும் இன்றி அமைதியாக இருந்தது. மக்கள் எல்லாம் அமைதியாகத் தங்கள் தொழில்களைச் சிறப்பாகச் செய்து கொண்டு நாட்டின் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தனர்.

எல்லோரும் கல்விபெற்று அறிவும் ஞானமும் நிறைந்தவர்களாக இருந்தார்கள். நேர்மையும் ஒழுக்கமும் நிறைந்தவர்களாக இருந்தார்கள். மக்கள் ஒருவரை ஒருவர் மதித்து நட்புறவுடன் சகோதர பாசத்துடன் கூடி வாழ்ந்தார்கள்.

அயோத்தி நகரம் சுத்தமாகவும் அழகாகவும் அமைந்திருந்தது. தெருக்கள் நேராக அமைந்திருந்தன. கட்டிடங்கள் சிறப்பாக சிற்பக் கலை நிரம்பி அமைந்திருந்தன. கோவில்களும் குளங்களும் தெருக்கள் தோறும் அமைந்து மக்கள் பக்தி நெறியிலும் 'ஆன்மீக நெறியிலும் சிறந்து விளங்கினர்.

மக்களை உயிராகவும், தன்னை உடம்பாகவும் கருதி மன்னன் சிறப்புற ஆட்சி நடத்தினான். மக்கள்அரசுக்கும், அரசு மக்களுக்கும் மரியாதை செலுத்திச் சிறப்பாக ஆட்சி அமைந்து மக்களின் நல்வாழ்வு அமைந்திருந்தது.

இல்லம்தோறும் ஆடுமாடுகளும் கால்நடைச் செல்வமும் மக்களுக்குத் துணையாக இருந்தன. தோட்டங்கள், துரவுகள், நந்தவனங்கள் சோலைகள், நீர்நிலைகள் நிறைந்து நாடும் நகரமும் அழகாக இயற்கையோடு இணைந்து இசைந்து காட்சியளித்தது.

இவையெல்லாம் பாரத நாட்டின் நாகரிகச் செழிப்பையும் உயர்வையும் வெளிப்படுத்திக் காட்டியது. கம்பன் தமிழ் நாட்டையும் தமிழ் நகரங்களையும் நினைந்தே கோசல நாட்டையும் அயோத்தி நகரையும் அதன் சிறப்புகளையும் பாடினான்.

இவையெல்லாம் சமுதாய வளர்ச்சியின் மிக உயர்ந்த மேலான கட்டத்தை எடுத்துக் கூறுகின்றன. இவைகளுக்கு ஏற்றவாறு மொழியின் வளர்ச்சியும் வளமும் உயர்ந்து விளங்கியது. இலக்கியமும் கலையும் வளர்ச்சி பெற்று மொழியை வளர்த்தது. ஆடலும் பாடலும் கூத்தும் களிப்பும் கலை இலக்கியத்தை வளப்படுத்தி மொழியை மெருகு ஊட்டிவளர்த்தது.

“வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர் உள்ளமும், ஒருவழி ஓடநின்றவன்” என்று தசரதனுடைய நல்லாட்சியைப் பற்றிச் சிறப்பாகக் கம்பன் குறிப்பிடுகிறார். ஐம்புலன் உணர்வுகளை அளவுக்கு மீறிச் செல்லவிடாமல் கட்டுப்படுத்தி ஒருமுகப்படுத்தி பகுத்தறிவின் மூலம் சரியான திசை வழியில் கொண்டு செல்லும் சிறந்த மனித ஆற்றலையும் திறனையும் அறநெறி வாழ்க்கையையும், சிறந்த ஒழுக்க நெறி வாழ்க்கையையும் பற்றியும் சிறப்பான கருத்துகள் நிறைந்த தனது அறிய சொற்களில் கம்பன் எடுத்துக் கூறுகிறார். “அசட்டர்கள் ஐவரை அறுவர் ஆக்கிய வசிட்டன்” என்று கம்பன் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

கம்பன் கையாண்ட இன்னும் சில தமிழ்ச் சொற்களையும் காண்போம்.

இராமனைப் பற்றிக் குறிப்பிடும் போது "அறிவின் உம்பரான்" என்றும், "தன்புகழ் தன்னிலும் பெரிய தன்மையான்" என்றும் "கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியான்" என்றும் "ஏதமில் அறத்துறை நிறுத்திய இராமன்" என்றும், "வேதமும் அறனும் சொல்லும் மெய்யற மூர்த்தி வில்லோன்," என்றும் "மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆயகாலமும் கணக்கும் நீத்த காரணன்" என்றும், "முற்றிய பொருட்கெல்லாம் முடிவுளான்" என்றும், "அறம் வளர்க்கும் கண்ணாளன்" என்றெல்லாம் கம்பன் தனது சொல் குறிகளால் காட்டுகிறான். இந்தச் சொற்கள் எல்லாம் ஆழ்ந்த பொருள் பொதிந்த சொற்களாகும். இவையெல்லாம் தமிழ்மொழியை செழுமைப் படுத்துகின்றன. இவையெல்லாம் தமிழ் மொழியை மேலும் வளப்படுத்திப் பிரபலப் படுத்தியிருக்கிறது. இன்னும்,

பரதனைப் பற்றிக் குறிப்பிடும் போது, கம்பன், "செம்மையின் ஆணி" என்று கூறுகிறார். அது ஒரு அருமையான கருத்துக் செறிவுமிக்க சொற்றொடராகும். நன்கு விளைந்த கட்டியான முத்தை ஆணிமுத்து என்று குறிப்பிடுகிறார்கள். தேக்குமரம், வேப்பமரம், மருதமரம் முதலிய மரங்களின் வைரம் மிகவும் வலுவானது. நெஞ்சுரம் மிக்க ஒரு மனிதனை வைரம் போன்ற நெஞ்சுறுதி உள்ளவன் என்றும் உறுதிக்கு வைரம் ஒப்பீடாகிறது. வண்டிக்கு அச்சாணி அவசியம். அந்த அச்சாணி செம்மையாகவும், உறுதி மிக்கதாகவும் இருந்தால் அது அந்த வண்டியின் தொடர்ச்சியான ஓட்டத்திற்கு ஆதாரமாக இருக்கும். செம்மையே சீரானது தான். எந்த ஒரு பொருளையும் செம்மைப் படுத்துவது என்பது நன்கு சீராக்குவது என்பதாகும்.

ஒருமாங்கொட்டையை உள்ளே பிரித்து முகர்ந்தால் அதில் ஒரு மணம் இருக்கிறது. அந்த மணம் மா மணமாகும். அந்த மணம் அந்த விதையின் முளையின் சாரமாக அமைந்துள்ளது.

அந்த மணம், அதாவது, முளையின் சாரமாக உள்ள மணம் அந்த விதையின் முளை முளைத்து செடியாகி மரமாகி பூ பூத்து காய் காய்த்து அந்தக் காய்கள் பழமாகும் போதும் நமது மூக்கைத் துளைக்கிறது. அந்தப் பழத்திலுள்ள கொட்டையிலும் அந்த மணம் தொடருகிறது.

கொட்டையிலிருந்து, முளை, செடி, மரம், பூ, காய், பழம், மரத்தின் பட்டை, வேர், இலை, அனைத்திலும் அந்த மணம் நிரம்பியிருக்கிறது. அது மாவினத்தின் சாரம்.

வேம்பின் விதையில் உள்ள கசப்பு நோய்தீர்க்கும் மருந்து. கசப்பு வேம்பின் சாரம். வேம்பின் விதை முளைத்து செடியாகி மரமாகி, பூத்து, காய்த்து பழங்களையும் கொட்டைகளையும் தருகிறது. வேம்பின் விதையில் உள்ள அதன் சாரமான கசப்பு, வேப்ப மரத்தின் அத்தனை பகுதிகளிலும், செடி, மரம், பூ, காய், பட்டை, வேர், பிசின், இலை, கொளுந்து, ஆகிய அனைத்திலும் கசப்பு உள்ளது.

செம்மையான, மா, வேம்பு, மற்றும் பல தாவரங்கள் ஆகியவற்றில் அதனதன் குணம், இயல்பு, சாரம் ஆகியவற்றைச் சீராகக் காண்கிறோம்.

செம்மையான மனிதர்களும் உண்டு. அம்மனிதர்களில் ஒருவன்தான் பரதன். ஆனால் அப்பரதன் இராமனிலும் சிறந்தவன் என்று இராம காதை கூறுகிறது. நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு, இன்னும் கோடி இராமர்களுக்கு ஈடானவன். அதற்கும் மேலானவன். என்று கம்பர் கூறுகிறார்.

மனிதச் செம்மையின் குணம், இயல்பு, சாரம் அனைத்தும் பரதனுடைய குணத்தில் இயல்பில், சாரத்தில் கெட்டிப்பட்டு வலுவாக வைரம் பாய்ந்து நிற்பதைக் கம்பன் செம்மையின் ஆணி,

நன்கு விளைந்து பக்குவப்பட்ட செம்மை குணம் என்று குறிப்பிடுவது சிறப்பாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

செம்மையின் ஆணி என்னும் சொற்றொடர், கம்பனுக்கும், கம்பராமாயணப் பெருங்காவியத்திற்கும் தமிழுக்கும் தமிழ்ச் சொல்வளத்திற்கும், பெருமை சேர்க்கிறது. செம்மையின் ஆணி என்னும் தலை சிறந்த சொற்றொடருக்கு முழு விளக்கம் கொடுக்க அச்சொற்றொடரின் முழு பரிமாணத்தையும், பொருளையும் எடுத்துக் காட்ட அக்கம்பனே தான் வரவேண்டும்.

அகத்தியனைப் பற்றிக் குறிப்பிடும்போது, "தமிழ் என்னும் அளப்பரும் சலதி தந்தவன்" என்று கம்பர் கூறுகிறார். இங்கு தமி ழை அதன் சொல்வளத்தை பெருங்கடலுக்குக் கம்பர் ஒப்பிடுகிறார். இன்னும் நீண்ட தமிழால், உலகை நேமியின் அளந்தான் என்றும், அகத்தியரைப் பற்றிக் கம்பர் குறிப்பிடுகிறார். திருமால் வாமனனாக வந்து திரிவிக்கிரமனாகப் பேருருவம் எடுத்துத் தனது நீண்ட திருவடிகளால் உலகையே அளந்ததைப் போல அகத்தியன் நீண்ட தமிழால் (தமிழ் மொழியின் சொல்வளத்தால்) உலகை அளந்தவன் என்று குறிப்பிடுகிறார். திருமால் அவதாரத்தின் நீண்ட திருவடிகளுக்கு அகத்தியனுடைய நீண்ட தமிழ் ஒப்பிடப்படுவது மிகவும் சிறப்பானதாகும்.

மேலும், "எண்திசையும், ஏழ் உலகும் எவ்வுயிரும் உய்யக் குண்டிகையினில் பொருவில் காவிரி கொணர்ந்தான்" என்றும், "என்றும் உளதென் தமிழ் இயம்பி இசை கொண்டான்" என்றும், தமிழ் தந்த அகத்தியனைப் பற்றியும் அவன் தந்த தமிழின் சிறப்பு பற்றியும் கம்பன் குறிப்பிடுகிறார்.

தமிழ் தந்த அகத்தியன் என்று கம்பன் அகத்தியர் பெருமானைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அகத்தியரைப் பற்றி

அதாவது தமிழ் தந்த அகத்தியரைப் பற்றி மேலும் முக்கியமான ஒரு செய்தியைக் கம்பன் தனது மகா காவியத்தில் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

ஒரு மொழியின் எழுத்துகள் அவைகளின் உச்சரிப்புகள், ஆகியவை அம்மொழிக்கு அடிப்படையான அம்சமாகும். அந்த எழுத்துக்களின் குறிப்பிட்ட வழியிலான சேர்க்கையால் சொற்கள் உருவாகின்றன. அந்தச் சொற்களின் எண்ணிக்கையும் வளமும் செழுமையும் அம்மொழியின் வளர்ச்சி மட்டத்தைக் காட்டுகிறது. மக்களுடைய உழைப்பாலும், ஆழ்ந்த சிந்தனையாலும், அனுபவங்களாலும் பயிற்சியாலும் ஆராய்ச்சியாலும், இதர செயல்பாடுகளின் சிறப்புகளாலும், அந்த மக்களின் மொழியில் இலக்கியங்கள் தோன்றுகின்றன. அப்போது அம்மொழியின் எழுத்துகள், சொற்கள், வாக்கியங்கள், பொருள், இலக்கியம் ஆகியவைகளுக்கு இலக்கணம் வகுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவ்வாறு தமிழ்மொழிக்கு முதன் முதலில் இலக்கணம் வகுத்தது அகத்தியர் பெருமானாகும். அவ்விலக்கணத்திற்கு அகத்தியம் என்று பெயர்.

இந்த வரலாற்றைக் கம்பர் மிகவும் நுட்பமாகத் தனது மகா காவியத்தில் குறிப்பிடுகிறார். இராம இலக்குவர்கள் பல மலைகளையும் பல மரங்களைக் கொண்ட காடுகளையும், பாறைகளையும், நதிகளையும் அருவிச் சாரல்களையும் சோலைகளையும், இனிய சூழல்களையும் தடாகங்களையும், நீர் நிலைகளையும் கடந்து தண்ட காரண்யத்திற்கு வந்து சேர்ந்தனர். இக்கருத்தைக் கம்பர் தனது வளமான தமிழ்ச் சொற்களில் கூறுகிறார். அது ஒரு இனிய தமிழ்க் கவிதை.

“ *மலைகளும் மரங்களும் மணிக்கல் பாறையும்,*
*அலைபுனல் நதிகளும் அருவிச் சாரலும்,*

*இலைசெறி பழுவமும், இனிய சூழலும்,*
*நிலைமிகு தடங்களும் இனிது நீங்கினார்",*

இவ்வாறு, பல இனிமையான இயற்கைச் சூழல்களையும் தாண்டி இராம இலக்குவர்கள், தாண்டக வனத்திற்கு வந்து அங்கு பல முனிவர்களையும் பெருமைக்குரிய அகத்திய முனிவரையும் சந்தித்தனர்.

அந்த அகத்திய முனிவர் யார்? அவர், நீண்ட தமிழால் உலகை அளந்தவர், ஒளிமிக்க மழுப்படைகளையும், அழகிய நெற்றியிலிருந்து அக்கினியை சிந்திக் கொண்டிருக்கும் சிவந்த கண்ணையும், தீப்போன்ற ஒளிவடிவத்தையும் கொண்ட சிவபெருமான், தமிழை அகத்தியனுக்குத் தந்தான். அந்த அகத்தியன் சிவன் தந்த தமிழுக்கு இலக்கணம் வகுத்தான். அவ்வகத்தியர் பெருமான் நான்மறைகளையும் (ரிக், யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களையும்) வருந்திக் கற்றவர். மேலெழுந்தவாரியாக அல்லாமல் ஆழ்ந்து தெளிவாகக் கற்றவர். உலக வழக்குகளை நன்கு அறிந்தவர். சிறந்த இனிய கவிதைகளை இயற்றும் கவித்திறம் மிக்கவர். அத்தகைய ஞானி, சிவனார் தந்த தமிழை நீண்ட பாரம்பரியம் மிக்க பாரத மரபின் வழியில் தமிழுக்குச் சிறந்த இலக்கணத்தை வகுத்தார். அந்த இலக்கண நூலுக்கு அகத்தியம் என்று பெயர். தமிழுக்கு முதன் முதலில் வகுக்கப்பட்ட இலக்கணம் அகத்தியமாகும். இக்கருத்து மிக்க செய்தியை கம்பன் தனது சிறப்பு மிக்க இனிய கவிதையில்,

*"உழக்குமறை நாலினும் உயர்ந்து உலகம் ஓதும்,*
*வழக்கினும், மதிக்கவியினும் மரபின் நாடி,*
*நிழல்பொலி கணிச்சி மணி நெற்றி உமிழ்செங்கண்*
*தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்",*

என்று கூறுகிறார். இப்பகுதியில் கம்பனுடைய தமிழ்ச் சொல்வளம் பெருமைக்குரியது.

தமிழ் இலக்கணம் சிறப்பு மிக்கது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து அங்கங்களைக் கொண்டது.

இராவணனைப் பற்றிக் குறிப்பிடும் போது, "வீணையின் இசைபட வேதம் பாடுவான்" என்றும், "காமன் வெம்சரம் படக் கருகும் மேனியான்" என்றும் "வேரொடும் அமரர் தம் புகழ் விழுங்கினான்", என்றும், "உலகெலாம் மூன்றையும் கடந்து ஒரு வெற்றி முற்றினான்" என்றும், இவ்வாறு இராவணனைப் பற்றிக் கம்பன் குறிப்பிடுகிறர்.

இராவணன் போர்க்களத்தில் வீழ்ந்து கிடந்த போது அவனுடைய பிரகாசமான முகப்பொலிவைப் பற்றிக் குறிப்பிடும் போது,

*"தம்மடங்கு முனிவரையும், தலை*
*அடங்க, நிலை அடங்கச் சாய்த்த*
*நாளின், மும்மடங்கு பொலிந்தன*
*அம்முறை துறந்தான் உயிர் துறந்த முகங்களம்மா!"*

என்று கூறுகிறார்.

அனுமனைப் பற்றிக் கம்பன் மிகச் சிறப்பாகப் பல நல்ல சொற்களில் கூறுகிறார். "தன்பெரும் குணத்தால் தன்னின்தான் அலது ஒப்பிலாதான்" என்று மாருதியைக் குறிப்பிடுகிறார். அத்துடன், அனுமனுக்கு இராமன் தன் வாயால், "சொல்லின் செல்வன்" என்று பட்டமளிக்கிறான். இது மிகச் சிறந்த சொற்றொடராகும். இச்சொற்களில் ஆற்றல், நிறைவு, கல்வி

அமைதி (நிறைகுடம்) அறிவு, கல்லாத கலை (பொது அறிவு) வேதக்கடல் ஆகிய அனைத்தும் அடங்கும். "சொல்லின் செல்வன்" என்பதில் சொற்களின் வளம், செல்வம், ஆகியவைகளும் அடங்கியிருக்கின்றன.

இன்னும் மாருதியைப் பற்றி "தருமத்தின் தனிமை தீர்ப்பான்" என்றும் நீதி நலத்தின் வினை ஓர்வான் என்றும் " வினைப் பகையை வென்றான்" என்றும் " ஊழிதோறும் உயர்வுறும் கீர்த்தியான்" என்றும் " வேத நன்னூல் உய்த்துள காலமெல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பான்" என்றெல்லாம் கம்பன் குறிப்பிடுகிறார்.

வாலிக்கும் இராமனுக்குமிடையில் நடைபெறும் உரையாடல் கம்பனுடைய காவியத்தில் மிகச் சிறந்த காட்சியாக அமைந்திருக்கிறது. சிறந்த தமிழ்ச் சொற்களும் கருத்துக்களும் கருத்து வடிவங்களும் நிறைந்திருக்கின்றன.

வாலியும் சுக்கிரீவனும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டதைக் குறிப்பிடும்போது, உந்துவர், உதைப்பர், எற்றுவர், கடிப்பர், நின்று இடிப்பர், மரத்தினால் அடித்து உரப்புவர், ஒறுக்குவர், தெளிப்பர், தீவிழிப்பர், என்றெல்லாம் கம்பர் குறிப்பிடுகிறார்.

வாலி மீது இராமன் தனது கணையை ஏவினான். வாலி சோர்ந்து வீழ்ந்தான். தன் மீது பாய்ந்திருந்த அம்பை இழுத்துப் பிடித்து அது யாருடையது என்று உற்றுப் பார்த்தான். அதில்,

*"மும்மைசால் உலகுக்கெல்லாம்*
*மூலமந்திரத்தை, முற்றும்*
*தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்*
*பெரும் பதத்தைத் தானே*

*அம்மையே எழுமை நோய்க்கும்*
*மருந்தினை இராமன் என்னும்,*
*செம்மை சேர் நாமம் தன்னைக்*
*கண்களில் தெரியக்கண்டான்".*

என்னும் பாடலில் வரும் சொற்கள் கம்பன் கவிதையில் வெளிப்படுகின்றன. இந்தச் சொற்கள் எல்லாம் ஆழ்ந்த தத்துவ ஞானக் கருத்துகள் பொதிந்தவைகளாக இருப்பதைக் காண்கிறோம்.

இன்னும் இல்லறம் துறந்த நம்பி வில்லறம் துறந்த வீரன், வேத நூல் சொல்லறம் துறந்திலாத சூரியன் மரபு, நல்லறம் துறந்தது, வெள்கிட மகுடம் சாய்க்கும், வெடிபடச் சிரிக்கும், இறைதிறம்பினன், இழிந்துளோர் இயற்கை, முறை கிளம்பின், மறைதிறம்பா வாய்மை, மனுவில் சொல்லும் துறை திறம்பாமல், காக்கத் தோன்றினான், என்றும், இன்னும்,

"வாய்மையும் மரபும் காத்து மன் உயிர் துறந்த வள்ளல், தாய்மையும் அன்றி நட்பும் தருமமும் தழுவி நின்றாய்" என்றும், இன்னும், குலம், கல்வி, கொற்றம் உற்று நின்ற நல்ல நலம், புவனம், நாயகம், வலம் உலகம் தாங்கும் வன்மை, திண்மை, கோவியல் தருமம் (அரச நீதி – ஆட்சி அறம்) ஒலிகடல் உலகம், கலியது காலம், ஒழுக்கம், விழுப்பம், நாட்டொருகருமம், காட்டொருகருமம், ஆண்மைத் துறை, தொன்மையின் நன்னூல், மருமத்து எய்தல், வீரம், விதி, மெய்ம்மையின் வாரம், பாரம், பகை, அறம் காக்கின்ற பெருமை, நூல் இயற்கை, மன் அறவேலி, வீரம்பழுதுற, கல்வியின் மெய்ந் நெறி, மறம் திறம்பல், அறம்திறம் பல், ஏதிலார், எளியர், தீது தீர்த்தல், அருங்குலக் கற்பு, எய்தின் எய்தியதாக இயற்றினான், உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கல்,

கலங்கலா அறந்நெறி, பொறியின் யாக்கை புலன் நோக்கிய அறிவு, வீடு பெற்ற விலங்கு, சிந்தை நல்லறத்தின் வழி சேர்தல், நன்று தீதென்று இயல் தெரிநல்லறிவு, தக்கது இன்ன தகாதது இன்ன, என ஒக்க உன்னல், காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான், வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும் (இங்கு வினை என்பது செயல்) மனையின் மாட்சி, அறத்திறன் அழியச் செய்யால் புவியுடை அண்ணல், (ஆட்சியில் இருப்போர், அறத்தின் திறனை அழிக்கும் எந்தச் செயலையும் செய்யலாகாது). தாய் என உயிர்க்கு நல்கல், தருமம், தகவு, சால்பு, நெறியினின் நோக்கும் நேர்மை, என்றெல்லாம், புதிய பல கருத்துகளும் கருத்து வடிவங்களும் நிறைந்த சொற்களைக் கம்பன் எடுத்துக் காட்டுவதைக் காண்கிறோம். கம்பன் காவியத்தில் காணும் தமிழ்ச் சொல் வளத்திற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

"வாலியைச் சிறியன சிந்தியாதான்" என்று கம்பர் பாராட்டுகிறார். அறிவுத் தெளிவு பெற்ற வாலி, தனது விரிந்த மனப்பான்மைக்கும் அறிவு முதிர்ச்சிக்கும் எடுத்துக் காட்டாக ஆவிபோம் வேளையில் அறிவு தந்து உதவினாய், என்று கூறி, மூவர் நீ, முதல்வன் நீ, முற்றும் நீ, மற்றும் நீ, பாவம் நீ, தருமம் நீ, பகையும் நீ, உறவும் நீ, என்றெல்லாம் இராமாவதாரத்தின் அனைத்தளாவிய தன்மையை கம்பன் தனது சொற்குறிகளால் காட்டுகிறார்.

சமுதாய வளர்ச்சியின் ஒருகட்டத்தில் அரசுகள் தோன்றுகின்றன. பாரத நாட்டில் அரசுகள் தோன்றியது என்பது வரலாற்று காலத்திற்கு முந்திய செய்தியாகும். சமுதாய வளர்ச்சிக்கு, நாட்டில் அமைதியும், பொருள் பெருக்கமும், தொடர்ச்சியான சமூக மேம்பாடும் அவசியமாகிறது. அத்துடன் இசை, இசைக் கருவிகள், கூத்து, ஆடல்பாடல் கவிதை,

நுண்கலைகள் இன்பநுகர்வு, அழகியல் ரசனை, மகிழ்ச்சியான மனித வாழ்க்கைக்கு அவசியமான பல சாதனங்கள் ஆகியவைகளும் அவசியமாகி அவைகளும் அதிகரிக்கின்றன. இவைகளையெல்லாம் திருமாலின் இராமாவதாரத்தின் தொடக்கத்தில் காண்கிறோம்.

வளர்ந்து கொண்டிருக்கும் சமூகப் பொருளாதார தேவைகளுக்கேற்ப அவைகளை உற்பத்தி செய்யவும், உருவாக்கவுமான சாதனங்களும் கருவிகளும் உழைப்பின் மேன்மையும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. அதற்கேற்றவாறு மொழியின் வளர்ச்சியும் விரிவுபடுகிறது.

தமிழ் அறிஞர்களும் தமிழை இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாகப் பிரித்துத் தமிழ் மொழியை மேம்படுத்தியுள்ளனர். மூன்று துறைகளிலும் தமிழ் வளர்ச்சி பெற்றுவந்திருக்கிறது.

தொடர்ச்சியான சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு அமைதியான சமுதாய வாழ்வும் வாழ்க்கைத் தேவைகளின் சுய தேவைப் பூர்த்தியும் உபரியும் அவசியமாகிறது. இங்கு வாழ்க்கைத் தேவைகள் என்று கூறும்போது அது பொருளாயத லௌகீகத் தேவைகள் மட்டுமல்லாமல், அதில் அறிவுத் தேவைகளும், ஆன்மீகத் தேவைகளும் அடங்கும். அதற்கான முறையில் சமுதாய வாழ்க்கையை நெறிப்படுத்தவும் முறைப்படுத்தவும் மேற்பார்வை செய்யவும், அரசுகள் அவசியமாயிற்று. அத்துடன் உள்நாட்டுக் குழப்பங்களையும் சமூக விரோதச் செயல்களையும் ஒடுக்கி ஒழுங்கு படுத்தவும், அமைதியை நிலைநாட்டவும், வெளி நாட்டுப் படையெடுப்புகளிலிருந்து தற்காத்துக் கொள்ளவும், காட்டு மிருகங்களின் தாக்குதல்களிலிருந்து மக்களையும், கால்நடைச் செல்வங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு ஒரு காவல் அமைப்பு அவசியமாயிற்று. அதுவே அரசுகளின் தோற்றத்திற்குக்

காரணமாயிற்று.

பண்டைய பாரதத்தில் படிப்படியான சமுதாய வளர்ச்சியில் குறுநில அரசுகளும், பின்னர் சிறுநில அரசுகளும் அடுத்து பெருநில அரசுகளும் பேரரசுகளும் தோன்றி வளர்ந்துள்ளன. இந்த அரசுகளின் தலைமையில் இருந்த மன்னர்கள், சமுதாயத்தின் ஒரு பகுதியாகவும் அரசுகள் க்ஷேம நல அரசுகளாகவும், ராஜ நீதியில் கடமைகள் வகுக்கப்பட்டுச் செயல்பட்டனர். பாரத தேசத்தில் 56 பெருநில அரசுகள் இருந்ததாக நமது வரலாறு கூறுகிறது. சில காலங்களில் இந்தப் பெருநில அரசுகளில் சில, பேரரசுகளாக விரிவுப்பட்டும் செயல்பட்டிருக்கின்றன.

அவ்வாறு அரசுகள் தோன்றிச் செயல்படத் தொடங்கியபோது, அரசுகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றிய ராஜநீதி சாத்திரங்களும் தர்ம சாத்திரங்களும் தோன்றியுள்ளன. ஒரு அரசன் எவ்வாறு ஆட்சிநடத்த வேண்டும், எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிக் கம்பன் தனது மகாகாவியத்தில் பல இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக இராமனுக்குப் பட்டம், ஆட்சிப் பொறுப்பு கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டபோது தசரதன் வசிட்டனை அழைத்து இராமனுக்கு இராஜ நீதியை எடுத்துக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறான். அதில்:

கம்பன், அரசனுக்கு இருக்க வேண்டிய குணங்கள் பற்றி தமிழ்ச் சொற்களில் எடுத்துக் கூறுகிறான். அவையெல்லாம் தமிழ் மொழியின் சொற்களஞ்சியதில் சேரும் மணிகளாகும்.

"யாரொடும் பகை கொள்ளலன், என்னும்போது போர் ஒடுங்கும். புகழ் ஒடுங்காது– கோளும் ஐம்பொறியும் குறையப் பொருள் நாளும் கொண்டு நடுவுறு நோன்மையின் ஆளும் அரசே அரசு. ஆட்சிப் பொறுப்பு என்பது வாளின் மேல்வரும் மாதவம்

போன்றது. அமைச்சர் சொல்வழி ஆற்றுதல், அன்பின் அல்லதோர் ஆக்கம் இல்லை. வையம் மன்னுயிர், அம்மன்னுயிர் தாங்கும் உடல் அன்னமன்னன். அவன் இனிய சொல்லினன், ஈகையன், எண்ணினன், வினையன், தூயன், விழுமியன், வென்றியன். நினையும் நீதிநெறி கடவான். சீலம் அல்லன நீங்கினன், பொன் துலைத்தாலம் அன்ன தனி நிலை தாங்குதல் கொண்டவன். வாம மேகலை மங்கையரால் வரும் காமம் இல்லையெனில் கடும் கேடும் இல்லை என்று வசிட்டன் கூறியதைக் கம்பன் தமிழ் சொற்களில் எடுத்துக் கூறுகிறான்.

வாலி மாண்ட பின்னர், சுக்கிரீவன் கிட்கிந்தையின் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறான். இராமன் சுக்கிரீவனுக்குச் சில அரசியல் நல்லுரைகள் கூறுகிறான். அவைகளும் அரச நீதியின் பாற்பட்டதாகும்.

"வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திர மாந்தரோடும், தீமை தீர் ஒழுக்கின் வந்த திரத் தொழில் மரவரோடும், தூய்மைசால் புணர்ச்சி பேணித்துகள் அறு தொழிலையாகிச், சேய்மையோடு அணிமையின்றித் தேவரின் தெரிய நிற்றி"

"புகையுடைத்து என்னில் உண்டு பொங்கு அனல் அங்கு என்று உன்னும்மிகை உடைத்து உலகம், நூலோர் வினையமும் வேண்டல் பாற்றே, பகை உடைச்சிந்தை யார்க்கும், பயன் உறுபண்பின் தீரா நகையுறு முகத்தையாகி, இன்உரை நல்குநாவால்."

"செய்வன செய்தல் யாண்டும் தீயன சிந்தியாமை, வைவன வந்தபோதும் வசையில இனிய கூறல் மெய்யன வழங்கல் யாவும் மேவின வெஃகல் இன்மை, உய்வன வாக்கித் தம்மொடு உயர்வன உவந்து செய்வாய்"

என்று இராமன் சுக்கிரீவனுக்கு நல்லுரைகள் கூறியதைக் கம்பர் குறிப்பிடுகிறார்.

இன்னும் "யாரையும் சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல், மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல் சங்கையின்றி உணர்தி"என்றும்,

"நாயகன் அல்லன் நம்மை நனி பயந்து எடுத்து நல்கும் தாய் என இனிது பேணித் தாங்குதி தாங்குவாரை, ஆயது தன்மையேனும் அறவரம்பு இகவா வண்ணம், தீயன வந்த போது சுடுதியால் தீமையோரை" என்றும்

"இறத்தலும் பிறத்தல் தானும், என்பன இரண்டும் யாண்டும், திறத்துளி நோக்கின், செய்த வினை தரத்தெரிந்த அன்றே, புறத்தின் உரைப்பதென்னே! பூவின் மேல் புனிதற்கேனும், அறத்தினது இறுதி வாழ் நாட்டு இறுதி, அஃது உறுதி என்ப" என்று இராம பிரான் மேலும் சுக்கிரீவனுக்கு அரசியல் அறிவுரைகள் கூறுகிறார். இவையெல்லாம் தமிழ் மொழியின் சொற் களஞ்சியத்திற்கு மேலும் வந்து குவியும் சொற்களாகும்.

அரசியலில் அமைச்சர்களுக்கு முக்கியமான பங்கு உண்டு. அது பற்றியும் கம்பன் தனது மகாகாவியத்தில் அயோத்தியா காண்டம் மந்திரப்படலத்தில் அமைச்சர்களின் தகுதி திறமை பற்றிக் கூறுகிறார்.

- ★ உற்றது கொண்டு மேல் வந்து உறு
  பொருள் உணரும் கோளார்
- ★ மற்றது வினையின் வந்தது ஆயினும்
  மாற்றல் ஆற்றும் பெற்றியர்
- ★ பிறப்பின் மேன்மைப் பெரியவர்
- ★ அறிய நூலும் கற்றவர்

★ மானம் நோக்கின் கவரிமா
அனைய நீரார்

★ காலனும் இடனும் ஏற்ற கருவியும்
தெரியக் கற்ற நூல் உற நோக்கித்
தெய்வம் நுனித்து அறம் குனித்த மேலோர்

★ சீலமும் புகழ்க்கு வேண்டும் செய்கையும் தெளிந்து கொண்டு பால்வரும் உறுதியும் தலைவற்குப் பயக்கும் நீரார்.

★ தம் உயிர்க்கு உறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்

★ வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்று உரைக்கும் வீரர்

★ செம்மையின் திறம் பல் செல்லாத் தேற்றத்தார்

★ தெரியும் காலம் மும்மையும் உணர வல்லார்

★ ஒருமையே மொழியும் நீரார்

★ நல்லவும் தீயவும் நாடி நாயகற்கு எல்லையின் மருத்துவன் இயல்பின் எண்ணுவார்

★ ஒல்லை வந்து உறுவன உற்ற பெற்றியின் தொல்லை நல் வினையென உதவும் சூழ்ச்சியார் என்று கம்பர் பல சொற்களில் அமைச்சர்களின் தகுதி திறமை பற்றிக்குறிப்பிடுகிறார்.

வள்ளுவப் பேராசான் அருளிய திருக்குறள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தமிழ் மொழிச் சொற்களின் பெருக்கத்திற்கும் தமிழின் பெருமையை உயர்த்தவும் பெரிய அளவில் தனது பங்கைச் செலுத்தியிருக்கிறது என்பதை நன்கு அறிவோம்.

பாரதப் பண்பாட்டின் பாரத நாட்டின் சிந்தனையின் அடிப்படையாக மனிதனுடைய கடமைகளின் பயனீடுகளாக அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

"கடமையாவன தன்னைக் கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல், உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல், இந்நான்கே பூமியில் எவர்க்கும் கடமையெனப்படும். பயன் இதில் நான்காம் அறம், பொருள், இன்பம், வீடு எனும் முறையே தன்னையாளும் சமத்தெனக் கருள்வாய்" என்று பாரதியார் விநாயகர் நான் மணிமாலையில் அந்த ஆனைமுகனை வேண்டுகிறார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பயனீடுகளே வடமொழியில் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று கூறப்படும் புருஷார்த்தங்களாகும். இதுவே பாரத சிந்தனையின் பாரதப் பண்பாட்டின் வாழ்க்கை முறையின் அடிப்படையாகும்.

அதை அடிப்படையாகக் கொண்டே வள்ளுவப் பேராசான் அறம், பொருள், இன்பம், என்றும் மூன்றையும் எடுத்துக் கொண்டு முப்பாலாகத் தனித்தன்மையோடு தொகுத்து உலகிற்கே பொதுவான மறையைக் கூறியுள்ளார்.

தர்மம் என்னும் சொல் வடமொழியில் உள்ள ஒரு தனிச் சிறப்பான சொல்லாகும். இந்த சொல்லுக்கு ஈடாக உலகில் எந்த மொழியிலும் ஒரு சொல் இல்லை. இந்திய நாட்டிலுள்ள எல்லா மொழிகளிலும் தர்மம் என்னும் சொல்லே வழங்கப்படுகிறது. தமிழில் மட்டுமே தர்மம் என்னும் சொல்லுக்கு ஈடாக அறம் என்னும் சொல் கூறப்பட்டுள்ளது. அத்துடன் தர்மம் என்னும் சொல்லையும் நாம் பயன் படுத்திக் கொள்கிறோம். கம்பனுடைய மகா காவியத்தின் அடிப்படை லட்சியம் அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்பதை அறிவோம்.

வள்ளுவப் பெருந்தகை தனது திருக்குறளின் அறத்துப் பாலில் இல்லறம், துறவறம் என்னும் தலைப்புகளிலும் பொருட்பாலில் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்னும் தலைப்புகளிலும் இன்பத்துப் பாலில் களவியல், கற்பியல் என்னும் தலைப்புகளிலும் மிக்கச் சிறப்பான உலகம் போற்றும் குறட்பாக்கள் பாடியுள்ளார். திருக்குறள் தமிழ் மொழிக்குள்ள தனிச் சிறப்பாகும். வள்ளுவர் பாடியுள்ள "அ" என்னும் எழுத்தில் முதல் எழுத்தில் தொடங்கி "ன்" என்னும் கடைசி எழுத்தில் முடியும் 1330 குறட்பாக்களில் சரி பாதிக்கு மேல் 700 பாக்கள் பொருட்பாலில் உள்ளன. எனவே வள்ளுவப் பேராசான் முப்பாலிலும் பொருட்பாலில் அதிக கவனம் எடுத்துள்ளார் என்பது தெரிகிறது.

அரசுகள் அமைந்து அவை செயல் பட்டுக் கொண்டிருந்த காலத்தில் அரசியல், அங்கவியல் பற்றி அதிக கவனம் வள்ளுவர் எடுத்துக் கொண்டுள்ளது கவனிக்கத் தக்கதாகும்.

வள்ளுவர் தனது 1330 குறட்பாக்களில் ஒன்றில் கூட தமிழ் என்னும் சொல்லைப் பயன் படுத்தவில்லை. ஆயினும் அவர் தனது உலகம் போன்றும் இலக்கியமான திருக்குறள் மூலம் தமிழ் மொழியின் சொற் கழஞ்சியத்திற்கு சிறந்த பங்கைச் செலுத்தியுள்ளார்.

அரசு அதன் அங்கங்கள், அவைகளின் செயல்பாடு, சமுதாயத்தின் பொருள் பெருக்கம், செல்வச் செழிப்பு, சீரான வினியோகம் சமுதாய மேம்பாடு, நாட்டின் படைபலம், தற்காப்பு, அமைதி ஆகியவை தொடர்பான வள்ளுவர் கூறியுள்ள பல சொற்களும் தமிழ் மொழியின் வளத்திற்கு மேலும் அதிக உரம் சேர்க்கின்றன.

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடமை, இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல், காட்சிக்கு எளியன், கடுஞ்சொல்லன் அல்லன், இன்சொல்லன், முறை செய்து காப்பவன், கொடையாளி, செங்கோல், கொடுங்கோல், குடியோம்பல், கசடறக் கற்றல், எண், எழுத்து, தொட்டதனைத் தூறும் மணற்கேணி, அறிவு, ஒருமைக் கண் கற்ற கல்வி, கேடில் விழும் செல்வம், கல்லாதான், நுண்மாண் நுழைபுலம், எழில் நலம், மேல் பிறந்தார், கீழ் பிறந்தார், இலங்கு நூல், செவிச் செல்வம், செவிக்குணவு, இழுக்கல், உடையுழி, ஊற்றுக்கோல், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு, தினைத்துணை, பனைத்துணை, தன் குற்றம், பிறர் குற்றம், பற்றுள்ள வியவற்க, நயவற்க, இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன், எண்ணித் துணிக கர்மம், வினைவலி, தன்வலி, மாற்றான் வலி, நுனிக்கொம்பர், அளவறிந்து வாழுதல், காலம் கருதியிருப்பர், ஊக்க முடையான், குணம் நாடி, குற்றமும் நாடி, பொச்சாவாமை, வானோக்கி வாழும் உலகம், கோன் நோக்கி வாழும் குடி, ஒற்றாடல், தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி மெய்வருந்தக் கூலி தரும், இடுக்கண் அழியாமை, இடும்பை முதலிய எண்ணற்ற சொற்களை அரசியல் பகுதியில் காண்கிறோம்.

கருவியும் காலமும், தள்ளா விளையுள், உறுபசியும் ஓவாப் பிணியும், செறுபகையும் சேராது இயல்வது நாடு, பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும், பிணியின்மை, செல்வம், விளைவின்பம், உடுக்கை இழந்தவன் கைபோல, பெரியாரைப் பிழையாமை, சான்றாண்மை, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர், இவ்வாறு இன்னும் மற்றும் பல சொற்களை அங்கவியல், ஒழிபியல் பகுதியில் காண்கிறோம்.

தமிழ் மொழி வளர்ச்சியில் அடுத்ததாக சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெரும் காப்பியங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. அதில் சிலப்பதிகாரம் முதலிடம் பெறுகிறது. சிலப்பதிகாரம் மூன்று தமிழ் நாடுகளையும் மூன்று தமிழ் மன்னர்களையும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் இணைக்கிறது. சிலப்பதிகாரக் காப்பியத்தில் மூன்று நகரங்கள், அவைகளின் சிறப்புகள், அவைகளின் வளம், அங்கு வாழ்ந்த மக்களின் செல்வச் செழிப்பு, சந்தைகள், கடைகள், அவைகளில் குவிந்திருந்த பொருள்கள், பலவேறு துறையிலான பணியாளர்கள், வர்த்தகம், வாணிபம், வெளி நாட்டவர் குடியிருப்பு, துறைமுகம், கப்பல் போக்குவரத்து, அத்துடன் எல்லாவற்றிற்கும் மேலாக இலக்கியச் சிறப்புமிக்க மாதவியின் ஆடல் பாடல்கள், கூத்து, நாட்டியம் பல்வேறு கூத்து வகைகளின் விவரங்கள், அவைகளின் சிறப்புகள், ஆடல் அரங்குகள், அவைகளின் விவரங்கள், தமிழ் இசை, சுரங்கள், தாளங்கள், அவை பற்றிய தமிழ்ச் சொற்கள், இதர வகை இசைப் பிரிவுகள், ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, மூலமாக ஏராளமான தமிழ்ச் சொற்கள் தமிழ் மொழியின் சொற் களஞ்சியத்தில் சேருகின்றன, சேர்ந்து குவிகின்றன.

மணிமேகலை நூலில் அன்று பாரதத்தில், தமிழகத்தில் நிலவிய விவாதத்தில் இருந்த பலவேறு தத்துவ ஞானப் பிரிவுகள், அவைகள் பற்றிய தர்க்கங்கள், பட்டி மண்டபங்கள் முதலின தமிழ் மொழிக்கு புதிய சொற்களைச் சேர்க்கின்றன.

இனி தமிழ்மொழி வளர்ச்சியில் பக்தி இலக்கியங்களின் பங்கு மகத்தானது. தமிழகத்தில் பக்தி இயக்கத்தின், பக்தி இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் தமிழ் மக்களின், பாரத மக்களின் தவப்பயனாகும். சைவத்திருமுறைகள், அதில் தேவாரம் திருவாசகம், மூவாயிரம் அருங்கவிதைகளைக் கொண்ட தத்துவ

ஒளிவிளக்கு திருமந்திரம், பெரிய புராணம் முதலியனவும், வைணவ பக்தி இலக்கியங்கள் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், இராமானுஜ நூற்றந்தாதி, மற்றும் அவருடைய படைப்புகள், வேதாந்த தேசிகருடைய படைப்புகள்; முதலியன, தமிழ் மொழியை வளர்த்துச் செழுமைப் படுத்திய ஈடு இணையற்ற பேரிலக்கி –யங்களாகும். சங்கத் தமிழ் முப்பதும் என்று ஆண்டாள் தனது திருப்பாவைப் பாடலில் குறிப்பிடுகிறார்.

தமிழ்மொழியில் உள்ள பக்தி இலக்கியங்களின் விரிவும் ஆழமும், அவைகளின் வீச்சும், வேறு எந்த மொழியிலும் காணமுடியவில்லை. தமிழ்பக்தி இலக்கியங்களை உலகிலேயே தலை சிறந்த இலக்கியங்கள் என்று கூறலாம். அவைகளை உலகு தழுவிய அளவில் அறிமுப்படுத்த வேண்டியதும் பரப்ப வேண்டியதும், அவைகளின் பெருமைகளை உலகிற்கு உணர்த்த வேண்டியதும் தமிழ் கற்றறிவாளர்களின் கடமையாகும்.

பக்தி இலக்கியங்களைப் பற்றியும், அவை தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள மகத்தான பங்கு பற்றியும் இங்கு சில வரிகளில் கூறி விடமுடியாது. அதற்கான தனி கட்டுரையோ, நூலோ கூட போதாது. பக்தி இலக்கியங்கள் பற்றி தனி ஆராய்ச்சிகளும் தனி முயற்சிகளும் தேவை. நமது பல்கலைக் கழகங்களும் தமிழ்த்துறைகளும் அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். பக்தி இலக்கியங்கள் தமிழகம் முழுவதிலும் உள்ள திருக்கோயில்கள், திவ்ய தேசங்கள், அவைகளின் சிறப்புகள், அக்கோயில்கள் கொண்டுள்ள திருத்தலங்களின் செழிப்பும் வளமையும், நீர் வளமும், திருக்குளங்களும், நந்தவனங்களும், ஸ்தல விருக்ஷங்களும், சோலைகளும் மக்களின் நல்வாழ்வும் ஆட்சிகளின் சிறப்புகளும், திருவிழாக்களும் அத்திருவிழாக்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பேதமின்றி திரளாகக் கூடுவதும்,

ஆலயங்களில் வழிபாடு செய்வதும், திருக்குளங்களிலும் ஆறுகளிலும் நீராடுவதும், கண்ணுக்கினிய அருமையான காட்சிகளாகும். இவைகளைப் பற்றியெல்லாம் விரிவாக விளக்கிக் கூறும் இலக்கியங்களின் தமிழ் சொற்கள் தமிழ் மொழியைப் பெரிதும் வளப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம்.

இதேபோல இன்னும் ஏராளமான பல சிற்றிலக்கியங்களும் கிராமப்புற மக்களின் இலக்கியச் செல்வங்களும் தமிழ் மொழிக்கு உரமூட்டியுள்ளன.

சங்க காலத்தில் சேர, சோழ பாண்டிய மன்னர்களாகிய மூவேந்தர்கள், தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆதரவு கொடுத்தனர். அக்காலத் தமிழ் இலக்கியங்கள், தமிழின் பண்டயப் பெருமைகளை உலகுக்கு எடுத்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன என்பதைக் கண்டோம். அக்காலத்திய தமிழ் மொழியின் சொல்வளம், இலக்கியம் இலக்கணம் ஆகியவை நமது மொழியின் அடித்தளமாக அமைந்திருந்தது என்பதை அறிவோம்.

தொடர்ச்சியாக ஏற்பட்ட தமிழகத்தின் பொது வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும், பாரத நாட்டின் பொது வளர்ச்சியிலும், தென் கிழக்கு ஆசிய நாடுகளின் அரசியல் பொருளாதார சமுதாய வளர்ச்சியிலும் தமிழ் மொழிக்கும் வட இந்திய மொழிகளுக்கும், பாலி மற்றும் பிராகிருத மொழிகளுக்கும் சமஸ்கிருத மொழிக்கும் இடையில் ஏற்பட்ட உறவு, தொடர்பு, சேர்மானம், பரஸ்பர பரிமாற்றம் முதலியவற்றால் மத்திய காலத்தில் மிகப் பெரும் அளவிற்கு தமிழ் மொழியின் இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றுத் தமிழ் மொழியின் சொல்வளம் விரிவுபட்டது. இதற்கு எடுத்துக் காட்டாகக் கம்பனது மகா காவியத்தின் சொல்வளத்தின் அருஞ் –சுவையை சிறிது கண்டோம். திருக்குறளையும், ஐம்பெரும்

காப்பியங்களையும், பக்தி இலக்கியங்களையும் நினைவு கொண்டோம்.

இன்னும் அக்காலத்தில் இதர பல எண்ணற்ற தமிழ் இலக்கியங்களும் அறநூல்களும், சிற்றிலக்கியங்களும் கிராமப் புற இலக்கியங்களும் தமிழ் மொழியின் சொல்வளத்தைப் பெருக்குகின்றன என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

கவிதை வடிவங்களிலான இலக்கியங்கள் வளர்ச்சி பெற்ற காலத்தில் பல அடிப்படை நூல்களுக்கு உரை நூல்களும் தோன்றி நிலை பெற்றன. பேச்சு மொழிகள் எழுத்து மொழிகளாக, மக்கள் மொழி இலக்கிய மொழிகளாக இரண்டும் இணைந்தும், ஒவ்வொன்றும் சுயேச்சையாகவும், வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இலக்கியங்களை மக்களுக்கு விளக்கிச் சொல்லும் வகையில், விரிவுரைகள் ஆற்றும் முறைகளிலும் பேச்சு மொழிகள் வளர்ச்சி பெற்று அவையும் மொழியின் சொல்வளத்தின் வளர்ச்சிக்கு உதவியுள்ளன.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி (உற்பத்தி சாதனங்கள் உற்பத்திக் கருவிகள், மனித வளம் ஆகியவற்றின் வளர்ச்சியும் பெருக்கமும் விரிவாக்கமும்) அரசியல் மற்றும் ஆட்சி நிர்வாகங்களின் விரிவு, கல்வி கலாச்சார வளர்ச்சி, அரசியல் பொருளாதார சமூகக் கலாச்சார, சமூகவியல் அறிவியல் இலக்கியங்களின் வளர்ச்சி, ஆன்மீக இயக்க வளர்ச்சி, வெளித் தொடர்பு வாணிப வளர்ச்சி, மக்களுடைய சமுதாயப் பரிமாற்றம் தொழில் மற்றும் தொழில் நுட்பங்களின் வளர்ச்சி, குறிப்பாக கட்டிடக் கலை பெரிய கோவில்கள் கோபுரங்கள் கட்டும் கலை தொழில் நுட்பங்கள், நீர்நிலைகள் நிர்மாணிக்கும் தொழில் நுட்பங்கள், வைத்தியம், மருந்தியல் பற்றிய பல இலக்கியங்கள்

அவைகளின் வளர்ச்சியும் விரிவாக்கமும், ஆடல் பாடல் இசை ஆகியவற்றின் வளர்ச்சி, மற்றும் பரிமாற்றங்கள், பரஸ்பரத் தொடர்புகள், முதலியவையெல்லாம் மொழிகளின் சொல்வளப் பெருக்கத்திற்கு உதவியாக இருந்துள்ளன.

அந்த வகையில் தமிழ்மொழியும் இடம் காலம் சூழ்நிலைகள் சமுதாய வளர்ச்சி ஆகியவைகளின் மத்தியில் சிறந்த முறையில் சொல்வளம் பெற்றுத் தனது வலுவை வைரத் தன்மையை பலப்படுத்தியிருக்கிறது. அவைகள் மூலம் தமிழ் மொழியின் அடித்தளமும் மேல்கட்டுமானங்களும் மேலும் பலப்பட்டு விரிவடைந்துள்ளன.

## 4. உரைநடை காலத்தின் தொடக்கம்

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டு காலங்களிலும் அதற்குப் பின்னரும் ஐரோப்பிய நாடுகளின் அன்னிய வாணிபம், கடல் கொள்ளை, காலனி பிடித்தல், தொழில் புரட்சி, சுதந்திர வியாபாரம் முதலியவைகள் காரணமாக அந்நாடுகளில் செல்வம் பெருகி புதிய பல மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. புதிய நவீன எந்திரத் தொழில்கள் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தன. நீராவி சக்தியும் அதன் பயன்பாடும் கண்டுபிடிக்கப்பட்டு அவை செயல்பாட்டிற்கு வந்தன. புதிய விசைச் சக்திகள் உற்பத்தித்துறையில் செயல்பாடுகளுக்கு வந்தன. நீராவி எந்திரங்கள் செயல்பாட்டிற்கு வந்தன. உற்பத்தி சக்திகள் அபரிமிதமான அளவில் வளர்ச்சி பெற்றன. அச்சு எந்திரங்கள், பேப்பர் மற்றும் இதர கல்வி சாதனங்கள் பெருகின. நவீன விஞ்ஞானக் கலைகளும், சோதனைக் கூடங்களும் இலக்கியங்களும் சமூக அறிவியல் இலக்கியங்களும் பெருகின.

மேலை நாடுகளில் பலவற்றில் மன்னராட்சி முறைகள் மாறி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறைகள் தோன்றி நிலைபெறத் தொடங்கின.

கத்தோலிக்க கிறிஸ்தவ அமைப்பின் தலைமை ரோமாபுரியில் இருந்த தலைமை மதகுரு போப் அவர்களிடம் இருந்தது. அந்த மதத் தலைமைக்கு எதிராக ஐரோப்பாவில் பல நாடுகளிலும் அந்தந்த நாட்டின் தேசீய மதத் தலைமை நிறுவனங்கள் உருவாகி அந்தந்த நாடுகளில் நிலைபெற்றன. மன்னராட்சியுடன் இணைந்து கிறிஸ்தவ மத நிறுவனங்கள், மடாலயங்கள் ஆகியவை சேர்ந்து மக்களிடம் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த நிலைமை மாறத் தொடங்கியது. கிறிஸ்தவ மத நிறுவனங்கள் கிறிஸ்தவ மடாலயங்கள் குறிப்பாக கத்தோலிக்க சபைகளின் ஆதிக்கம்

குறைந்து மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் மதச் சார்பற்ற அரசுகள் தோன்றின. ஐரோப்பிய மக்களிடம் பெரிய அளவில் மறுமலர்ச்சி ஏற்பட்டு தீவிரமான கலாச்சார மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டிருந்தன. மக்களுக்கிடையில் மதச் சீர்திருத்தப் பிரச்சாரங்களும் பகுத்தறிவுப் பிரச்சாரங்களும், ஜனநாயகப் பிரச்சாரங்களும் மதக் கொலைகளுக்கும் எதேச் சதிகார ஆட்சிகளுக்கெதிரான பிரச்சாரங்களும் விழிப்புணர்வுகளும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்தன. புதிய பல கருத்துகளை மக்களிடம் நேரடியாகக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அச்சு எந்திரங்களும் துணையாக இருந்தன. உரை நடையும் உரைநடை இலக்கியங்களும் உரைநடைச் செய்திகளும் தகவல் தொடர்பு சாதனங்களும் பிரச்சார சாதனங்களும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெருகின. பத்திரிகைகள் (செய்தித்தாள்கள்) கதைகள், கட்டுரைகள், நவீனங்கள், மற்றும் பலவகை உரைநடை இலக்கியங்கள் பெருகின. அவைகள் மூலம் மொழிகளின் உரைநடை விரிவுபட்டு அவை புதிய பரிமாணங்களை எட்டின.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய உரைநடை வளர்ச்சிக்கு, செய்தித் தாள்கள், உரைநடை நூல்கள், பாட நூல்கள், அரசியல் மற்றும் அறிவியல் சமூகவியல் நூல்கள் முதலியவற்றின் வளர்ச்சியும் விரிவாக்கமும் விநியோக முறைகளும் அடிப்படைக் காரணங்களாக அமைந்திருந்தன. அத்துடன் புதிய விசை சக்தி எந்திரங்களும் அச்சு எந்திரங்களும் நவீன முறையில் பேப்பர் உற்பத்தியும், நவீனப் போக்குவரத்து சாதனங்களும் ரயில்வே போக்குவரத்தும் உந்து சக்தியாக விளங்கியது.

உற்பத்திமுறை அரசியல் சமூக செயல்பாடுகள், போக்குவரத்து வளர்ச்சி, விசை சக்தி வளர்ச்சி, நவீன எந்திரத் தொழில் வளர்ச்சி, கல்வி கலாச்சார வளர்ச்சி மற்றும், மனித

வாழ்க்கையின் இதர பல்வேறு துறைகளிலும் ஒரு புதிய நாகரிகம், ஐரோப்பிய நாகரிகம் ஆகியவை உலகம் முழுவதிலும் பரவத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து நவீன ஐரோப்பிய மொழிகளான ஆங்கிலம் பிரஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ் மொழிகளும் அவைகளின் நவீன இலக்கியங்களும் பரவியன. இந்த ஐரோப்பிய மொழி வழியிலான ஐரோப்பியக் கல்வி முறையும் பரவியது. இந்திய நாட்டில் ஆங்கிலக் கல்வி முறை பரவியது. ஆங்கிலக் கல்வி படித்தவர்களிடம் ஆங்கில இலக்கியங்களும் ஆங்கில உரைநடையும் பேச்சுநடையும் மொழிநடையும் ஆங்கில நாகரிகமும் பரவியது.

## 5. இந்தியாவில் அன்னியர் ஆட்சி

இந்திய நாட்டில் அன்னியர் ஆட்சி பரவியது. 18, 19-ம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர் ஆட்சி நிலை பெற்றது. 1757-ம் ஆண்டில் நடைபெற்ற பிளாசி யுத்தம் தொடங்கி 1857-ம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது சுதந்திரப் போராட்டப் பேரெழுச்சி வரை நூறாண்டு காலத்தில் ஆங்கிலேயர்கள் நடத்திய ஆக்கிர -மிப்புப் போர்கள், படுகொலைகள், கொள்ளைகள் மூலம் இந்த பாரத புண்ணிய பூமியைக் கைப்பற்றினார்கள். அதன் பின்னர் 1947-ம் ஆண்டு வரை ஆங்கில அரசின் நேரடி ஆட்சியை நடத்தினார்கள். அன்னிய ஆட்சியின் காரணமாக பாரத நாட்டின் பழம் பெரும் நாகரிகம் சேதமடைந்து சிதைவுற்றது. அன்னிய ஆட்சியின் கொள்ளை இந்திய நாட்டில் மிகப் பெரிய அளவில் சேதங்களையும் படு காயங்களையும் பதித்தன. நமது நாட்டின் பழைய உற்பத்தி முறை, நீர்ப்பாசனமுறை, சாகுபடி முறை, உலகப் புகழ் பெற்றிருந்த நெசவுத் தொழில், கைவினைத் தொழில்கள், துறைமுகங்கள், ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம், போக்குவரத்து எண்ணற்ற தொழில் நுட்பங்கள் படிப்படியாக பெரும் அளவில் சிதைந்து சேதப்பட்டன. நாட்டில் வேலையின்மையும், ஏழ்மையும், வறுமையும், பசி, பட்டினியும் பட்டினிச்சாவுகள், கல்லாமை, படிப்பறிவின்மையும் அதிகரித்தது.

பழைய ஆட்சி முறைகள், அரசியல் மற்றும் நிர்வாக முறைகள் அழிந்து புதிய அன்னிய ஆங்கிலேயே ஆட்சி நிர்வாகம் ஏற்பட்டது. நீதி நிர்வாகம், வர்த்தகம், வாணிபம் ஆகிய பல துறைகளும் ஆங்கில மயமாக்கப்பட்டது,. இந்திய நாட்டின் மொழிகள் கல்வி கலாச்சாரம், ஆலயங்கள் வழிபாடுகள், வாழ்க்கை முறைகள், இலக்கிய வளர்ச்சி, பயிற்சி, முதலிய அனைத்தும் தேக்கமடைந்தன, இன்னும் பின்னுக்குத் தள்ளப் பட்டன.

பாரத நாட்டின் பாரம் பரியமான பழைய சிறந்த கல்விமுறை, பயிற்சி முறை, ஆரம்பக்கல்விக்கான திண்ணைப் பள்ளிக் கூடங்கள், குருகுலங்கள், அடிப்படைக்கல்வி முறை, எழுத்தறிவு, படிப்பறிவு, இலக்கியப் பயிற்சி, வேதப்பயிற்சி முதலியனவெல்லாம் அநேகமாக முற்றிலும் படிப்படியாகச் சிதைந்தன. பழைய பண்டைய விரிவான பல்கலைக் கழகங்களும் உயர் கல்வியும், தனிக் கல்வியும் அறிவியல் கல்வியும், தொழில் நுட்பக் கல்வியும், பயிற்சியும் அநேகமாக மறைந்து போயின.

பழைய பாரம்பரியமான தனிக்கல்விமுறை, கட்டிடக்கலை சிற்பம், கப்பல் கட்டுதல், நீரியல், நீர்ப்பாசனமுறை, இசை, ஆடல், பாடல், நாட்டியம், வைத்தியம், மருந்தியல், நெசவு, கைவினைத் தொழில் கல்வி முறைகள் பயிற்சி முறைகள் எல்லாம் சிதைவுற்று குடும்பத் தொழில்களாகக் குற்றுயிராக நீடித்தன.

அன்னிய ஆட்சியாளர்களின் ஆதரவிலும் நிழலிலும், அவர்களுடைய ஏற்பாட்டிலும் சில கிறிஸ்தவப் பாதிரிமார்களும், கிறிஸ்தவ மதபோதகர்களும் இந்திய நாட்டிற்கு வந்து கடலோரங்களில் தங்கள் மத அமைப்புகளை உருவாக்கியும், மாதா கோவில்களைக் கட்டியும் தங்கள் மதப் பிரச்சாரங்களைத் தொடங்கினார்கள். அச்சு எந்திரங்கள் மூலம் கிறிஸ்தவ மத நூல்களை மொழியாக்கம் செய்தும், அவைகளை தமிழ் மற்றும் வேறு பல இந்திய மொழிகளிலும் வெளியிட்டும் மக்களிடம் பரப்பினர். அப்போது அதையொட்டி தமிழ் மொழியிலும் அந்தத் துறையிலும் உரைநடை தோன்றி வளர்ச்சி பெறத் தொடங்கியது.

ஆங்கிலக் கல்வி, ஆங்கிலேயர் வியாபாரம், போக்குவரத்து (கப்பல் மற்றும் இரயில்வே) ஆங்கிலேயர் ஆட்சி, நிர்வாகம் ஆகியவை மூலம் இந்திய மொழிகளின் உரைநடை, தமிழ் மொழியின் உரைநடை மற்றும் பத்திரிகை, பாட நூல்கள் மூலமும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சற்று அதிகமான அளவில் வளர்ச்சி அடையத் தொடங்கியது.

பேராசிரியர் பெருந்தகை டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் தனது ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதல் தொகுதியில் கட்டுரைக் கலை என்னும் தலைப்பிலான கட்டுரையில், "இவ்வாறு சங்க காலத்தில் அருவியாய்ப் பிறந்து சமய காலத்தில் ஆறாய்ப் பெருகி சமுதாய காலமாகிய கடந்த இருநூறு ஆண்டுகளில் பொதுவாகத் தமிழ் உரைநடையும் சிறப்பாகக் கட்டுரைக் கலையும், கடலாய்ப் பொங்கத் தொடங்கிய காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டேயாகும்" என்று மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

இனி தமிழில் உரை நடையையும் கட்டுரைக் கலையையும், கையாண்ட வளர்த்தத் தமிழ்ப் பெரியார்கள் பலரைப் பற்றி தமிழ்ப் பெரியார் பேராசிரியர் பெருந்தகை டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், ஆறுமுக நாவலர், சங்கத் தமிழ் வளர்த்தத் தமிழ்த் தாத்தா உ.வெ.சாமிநாதய்யர், மறைமலை அடிகள், தமிழ்ச் சான்றோர் திரு.வி.கல்யாண சுந்தர முதலியார், பெருங்கவிஞர் பாரதியார் மற்றும் பல தமிழ் அறிஞர்களையும் பேராசியர் பெருந்தகை குறிப்பிடுகிறார்.

உரை நடையில், கட்டுரைகள், கருத்துரைகள், கதைகள், நவீனங்கள், ஆராய்ச்சித் தொகுதிகள், ஆய்வு உரைகள், அறிவியல் தொகுதிகள், இலக்கியத் தொகுதிகள் மூலம் இப்பெரியார்கள் தங்கள் கருத்துக்களை மக்களிடையில் எளிய நடையில் பரப்பினார்கள். இப் பெரியார்களில் பலரும், தமிழ் மட்டுமல்ல இதர பல மொழிகளையும், குறிப்பாக வடமொழி (சமஸ்கிருதம்) ஆங்கிலம், பிரஞ்சு முதலிய மொழிகளிலும் வல்லுனர்களாவார்கள். எனவே அவர்களுடைய உரைநடையில் இதர மொழிகளின் தொடர்பும் தாக்கமும் செல்வாக்கும் இருப்பதையும் காணலாம். அதே சமயத்தில் தனித் தமிழுக்கான முயற்சிகளும் நடைபெற்றிருக்கின்றன.

## 6. அருள் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்

வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் தமிழ் மொழி மட்டுமே நன்கறிந்தவர். அவர் வாழ்ந்த காலம், தமிழகத்தில் ஆங்கிலேயர்கள் சகல துறைகளிலும் வலுவாக நிலை பெற்று ஆட்சியில் இருந்த காலம். ஆங்கிலேயர்களுடைய ஆட்சியின் தலைமை நகரமாக தெற்கில் சென்னை நகரம் இருந்தது. வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் சென்னையிலும் பல ஆண்டுகள் வசித்து ஆங்கிலேயர் ஆட்சியை நேரடியாகக் கண்டவர்.

பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதிலும், தமிழ் நாட்டிலும் பாரத நாட்டின் தென் பகுதியிலும் ஆங்கிலேயர்கள் பல ஆக்கிர –மிப்புப் போர்களை நடத்தி இப்பகுதி மக்கள் கடுமையான துன்ப துயரங்களுக்குள்ளாகியிருந்தார்கள். கருணையில்லாத ஆட்சி கடுகி ஒழிக என்று அமைதியின் சின்னமான வள்ளலாரே பொங்கி எழுந்து கூறும் அளவிற்கு ஆங்கிலேயர்கள் கொடுங்கோலாட்சி நடந்து கொண்டிருந்தது.

ஆங்கிலேயர்களின் படைகள் பிரஞ்சுப்படைகள், மைசூர் நாட்டின் ஹைதர் அலி திப்பு சுல்தான் படைகள், ஆர்க்காட்டு நவாபின் படைகள், பாளையக்காரர்கள் வீரமிகு ஆயுதப் போராட்டங்கள், முதலியவற்றால் பல போர்களும் போர் நாசங்களும், அழிவுகளும் ஏற்பட்டிருந்தன. அன்னியப்படைகளும் (பிரிட்டிஷ், பிரஞ்சு படைகள்) நவாபின் படைகளும் மக்களைச் சூறையாடியும் பலகொடுமைகள் நடத்தியும் பெரும் சேதம் ஏற்பட்டிருந்தது. ஆடுமாடுகளையெல்லாம் அன்னியப் படைகளும் நவாபின் படைகளும் கொன்று தின்று தீர்த்தனர். அதனால் கிராமங்களில் சாகுபடியே நடைபெற முடியாமல் மக்கள் பசி பட்டினியால் செத்து மடிந்தனர். இந்தப் பகுதியில் வளர்ச்சியடைந்திருந்த நெசவுத்

தொழில், மற்றும் இதர கிராமத் தொழில் எல்லாம் நசிந்து போயின. அந்த மக்கள் எல்லாம் வேலையிழந்து தொழில் இழந்து குடி பெயர்ந்து பல ஊர்களுக்கும் சென்று வாழ வழியில்லாமல் செத்து மடிந்தார்கள்.

அன்னிய ஆட்சியின் வரிக் கொடுமைகளையும், ஜப்தி கொள்ளைக் கொடுமைகளையும் தாங்க முடியாமல் மக்கள் தங்கள் சொந்த ஊர்களை விட்டு வெளியேறி குடி பெயர்ந்தனர். பல கிராமங்கள் காலியாகி விட்டன. கோயில்கள், ஆலயங்கள் எல்லாம் கவனிப்பார் அற்று பூஜைகளும் இல்லாமல் பாழடைந்து போயின. சாதாரண மக்களுடைய வாழ்க்கை சீரழிந்து பஞ்சத்தால், பசி பட்டினியால் குறிப்பாக வட தமிழ் நாட்டில் பல லட்சக்கணக்கான மக்கள் செத்து மடிந்தார்கள்.

இவ்வாறு அன்னிய ஆட்சியின் கொடுமைகளாலும், ஆக்கிரமிப்புப் போர்களாலும் மக்கள் எண்ணற்ற துன்ப துயரங்களுக்கு ஆளாகியிருந்தார்கள். ஆடு, மாடுகள், கால்நடைகள் எல்லாம் அழிந்து போயின. மக்களுடைய உடைமைகள் எல்லாம் பறிபோயின. சாகுபடித் தொழில் சரியாக நடைபெறவில்லை. நீர்ப்பாசன முறைகள் (ஏரிகள், குளங்கள், இதர நீர் நிலைகள்) எல்லாம் நிலை குலைந்து கடுமையாகச் சேதப் பட்டிருந்தன. நெசவுத் தொழில் மற்றும் இதர பல கிராமத் தொழில்கள் எல்லாம் சிதைந்து போயின. கோவில் குளங்கள் எல்லாம் சேதப்பட்டுப் போயின. பல கோயில்களில் பூசைகள் கூட நின்று போயின. கல்வி நிலையங்கள், கிராமப் பள்ளிக் கூடங்கள் எல்லாம் செயல் இழந்து போயின. ஆட்சியின் கொடுமைகள் அதிகரித்து கொண்டேயிருந்தன. அன்னிய ஆட்சியின் கொள்ளை மக்களை மேலும் மேலும் வறுமைக் குழியில் தள்ளிக் கொண்டிருந்தது. கல்வி அறிவு குறைந்து

மக்களிடம் கண் மூடிப் பழக்க வழக்கங்கள் எல்லாம் அதிகரித்து சமுதாய சீரழிவுகளும் பெருகிக் கொண்டிருந்தன. மக்களுடைய வாழ்க்கை இருள் சூழ்ந்திருந்தது.

இந்தப் பின்னணியில் மக்கள் மிகவும் அதிகமாக அவதிப்பட்டுக் கொண்டிருந்த வட தமிழ் நாட்டில் அருட் பெரும் ஜோதியாக வடலூர் இராமலிங்க சுவாமிகள் தோன்றினார். சென்னை நகரிலும் சுற்றுப் புரங்களிலும் அவருடைய செல்வாக்குப் பரவியது.

மிகப்பெரிய சமூக சீர்திருத்த வாதியாக வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் தமிழகத்தில் தோன்றி அருட்பெரும் ஜோதியாக தனிப் பெரும் கருணையாக விளங்கினார். கருணையில்லாத ஆட்சி கடுகி ஒழிக என்றும், கண் மூடிப் பழக்கங்கள் எல்லாம் மண் மூடிப் போகட்டும் என்றும், அவர் எழுப்பிய குரல் தமிழகமெங்கும் பரவியது.

வள்ளலார் காலத்தில் தமிழ் மொழியில் வடமொழிச் செல்வாக்கும், ஆங்கில மொழிச் செல்வாக்கும் ஊடுருவலும் பரவியிருந்தது. வள்ளலார் தனது கவிதைகள், உரைநடைக் கருத்துரைகள் மூலம் மக்களுக்குத் தலை சிறந்த நல்லுரைகளை வழங்கியுள்ளார். வள்ளலாருடைய திருமுறைகள் தமிழ் இலக்கி–யத்திலும் இலக்கிய வரலாற்றிலும் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. அவருடைய ஜீவகாருண்ய ஒழுக்கத்தில்,

"உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடைய வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

இந்த ஆன்ம லாபம் என்பது பற்றி அவர் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

“எல்லா அண்டங்களையும் எல்லாப் புவனங்களையும் எல்லாப் பொருட்களையும் எல்லா ஜீவர்களையும், எல்லா ஒழுக்கங்களையும், எல்லாப் பயன்களையும், நமது பூரண இயற்கை விளக்கமாகிய “அருட் சக்தியால்” தோன்றி விளங்க விளக்கம் செய்விக்கின்ற இயற்கை உண்மை வடிவினராகிய ‘கடவுளின்’ பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடை படாமல் வாழ்கின்ற ஒப்பற்ற வாழ்வே இந்த மனிதப் பிறப்பினால் அடையத் தக்க ஆன்ம லாபம் என்று உண்மையாக அறிய வேண்டும்” என்று கூறுகிறார்.

இந்த உரையில் வள்ளலாரின் தத்துவ ஞானக் கருத்துக்களும் கொள்கையும், தமிழும், தமிழ் நடையும் வெளிப்படுகிறது. அவர் அக்காலப் பண்டித நடையில் எழுதவில்லை. சாதாரண மக்களுடைய மொழியிலேயே அவர் சொற் பொழிவுகள் நிகழ்த்திய தமிழிலேயே அவருடைய உரை நடையும் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. வள்ளலாருடைய உரைநடைக்கு மற்றொரு எடுத்துக் காட்டாக :–

“உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும் இருப்பதற்கு இட –மில்லாமலும், உழுவதற்கு நிலமில்லாமலும், பொருந்துவதற்கு மனைவியில்லாமலும் விரும்பியபடி செய்வதற்கு பொருள் முதலிய வேறு வேறு கருவிகள் இல்லாமலும் துன்பப்படுகின்ற ஜீவர்கள் விஷயத்தில் ஜீவகாருண்யம் தோன்றி, உடுப்பதற்கு நிறைய வஸ்திரம், இருப்பதற்கு இடம், உழுவதற்கு நிலம், பொருந்துவதற்குப் பெண், விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலானவை கொடுத்த போது பெற்றுக் கொண்டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்ப விளக்கமும் கடவுள் கரணத்தில் ஏக தேசமும், ஜீவ கரணத்திற் பூரணமுமாகத் தோன்றுகின்றவையாக உள்ளதால் அது அபர இன்பம் என்று

அறிய வேண்டும்'' என்று குறிப்பிடுகிறார். இந்த உரைநடையில் நல்ல தமிழும் தமிழ்த் துடிப்பும் இருப்பதைக் காண்கிறோம். வள்ளலார் சுவாமிகள் புராணச் சொற்பொழிவுகள் நடத்தி அனுபவப் பட்டவர், அவருடைய உரைநடையில் துடிப்பும், வேகமும் இருப்பதைக் காண முடிகிறது.

ஜீவகாருண்ய ஒழுக்கம் இரண்டாம் பிரிவில், "மனிதப் பிறப்பில் தேகத்திலும், கரணங்களிலும், புவனத்திலும் போகங்களிலும், குறைவின்றி நல்ல அறிவுள்ளவர்களாய் பசி, பிணி, கொலை முதலிய தடைகள் இல்லாமல், உறவினர், சிநேகர், அயலார், முதலியருந்தழுவ, சந்ததி விளங்கத்தக்க சற்குணமுள்ள மனைவியோடு விடயங்களைச் சிலநாள் அனுபவிக்கின்றதை இம்மை இன்ப லாபம் என்றறிய வேண்டும்'' என்றும்,

"அன்பு, தயை, ஒழுக்கம், அடக்கம், பொறுமை, வாய்மை, தூய்மை முதலிய சுபகுணங்களைப் பெற்று, விடய இன்பங்களை வருந்தி முயன்று அனுபவித்துப் புகழ் பட வாழலென்று அறிய வேண்டும்'' என்றும்,

" பசி, கொலை, பிணி, ஆபத்து, தாகம், பயம், இன்மை, இச்சை இவைகளால் ஜீவர்கள் துக்கத்தை அனுபவிக்கக் கண்ட போதும் ஆன்ம உருக்கம் உண்டாகுமென்றறிய வேண்டும்'' என்றும் கருணை மிக்க வள்ளலார் சுவாமிகள் கூறுகிறார்.

ஜீவகாருண்ய ஒழுக்கம் மூன்றாம் பிரிவில் ஜீவஒழுக்கம் என்னும் தலைப்பில், "ஆண்மக்கள், பெண்மக்கள், முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேச மார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லோரும் தம்மவர்களாய்

சமயத்திற் கொள்ளுதல் ஜீவஒழுக்கம் என்பதாகும்" என்று குறிப்பிடுகிறார்.

வள்ளலார் பெருமானின் உரைநடையின் தமிழ், தமிழ்ச் சொற்கள் அக்காலத்தில் தமிழகத்தில் தமிழ் மொழியில் பழக்கத்தில் இருந்த இதர மொழிச் சொற்கள், அவர் கையாண்டுள்ள சொற்களின் பொருள், கருத்து, கருத்துவடிவம், ஆகியவை உயிரோட்ட முள்ளவைகளாக அமைந்துள்ளன. அவை அக்காலத்தின் மக்கள் நிலையை அறிந்து கொள்ள உதவுகின்றன. தமிழ் மொழியின் உரைநடைக்கும் வள்ளலார் ஆற்றியுள்ள பங்கு மிகவும் முக்கியமானதும், போற்றுதற்குரியதுமாகும்.

## 7. பாரதியின் உரைநடை மொழி

பாரதியின் உரை நடை மொழியைப் பற்றி, ஆராயுமுன் வரலாறு பூர்வமான பின்னணியைக் கண்டோம். பாரதியின் உரைநடை, வேகமும் உயிர் துடிப்பும் கொண்டிருக்கிறது. உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்று பாரதியே கூறுகிறார் அல்லவா? பாரதியின் உள்ளத்தில் ஒளி வீசியது. பாரத நாட்டில் அன்னியர் ஆட்சி, மக்களின் அடிமை நிலை அவல நிலை, விடுதலைப் போரட்டத்தின் விடிவெள்ளியின் தோற்றம், நாடெங்கும் புதிய ஆதர்சத்தின் தொடக்கம், பாரதியின் கண் முன் பாரதத்தின் பெரு வடிவின் தோற்றம், பாரதத்தின் எதிர் காலச் சிறப்புகளின் மீது நம்பிக்கை இவையெல்லாம் பாரதியின் உள்ளத்தில் ஒளி வீசி, அந்த மகாகவியின் வாக்கிலிருந்து தமிழ்ச் சொற்கள் ஒளி வேகத்தில் புறப்படுகின்றன.

பாரதியின் எழுத்துரைகள் பெரும்பாலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்தவை. அன்னிய ஆட்சியும் பாரதி காலத்திற்கு முந்திய கால இலக்கியங்களும் அவருடைய பின்னணியாகும்.

பேராசிரியர் பெருந்தகை டாக்டர் ந.சஞ்சீவியவர்கள் தனது கட்டுரைக் கலை பற்றிய கட்டுரையில் பாரதியாரின் உரைநடை பற்றிக் குறிப்பிடுகிறார். பாரதியாரின் அந்தக் கட்டுரைப் பகுதியை பேராசிரியர் பெருந்தகை அவர்களும் மேற்கோள் காட்டியுள்ளார்கள். பாரதியின் அந்தக் கட்டுரைப் பகுதியை முழுமையாகக் காண்போம். அது அவருடைய உரைநடைத் தமி ழுக்கு எடுத்துக் காட்டாக உள்ளதையும் காணலாம்.

“தமிழா தெய்வத்தை நம்பு, பயப்படாதே! உனக்கு நல்ல காலம் வருகிறது.”

"உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள்"

"தெய்வம் கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்வான்கள், கை தேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றியிருக்கிறார்கள், தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப் பார்.

"நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி சக்தி, வலிமை, வீரியம், கவிதை, அழகு, மகிழ்ச்சி, நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

"தமிழா, பயப்படாதே! ஊர் தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்களைப் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

"ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே! 'ஜாதியிரண்யொழிய வேறில்லை' என்னும் பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்"

"பெண்ணை அடிமையென்று கருதாதே! முற்காலத்துத் தமிழர் மனைவியை" வாழ்க்கைத் துணை என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும், பெண்ணும் சமம்.

"வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களை கேட்டு பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே.

"தமிழா! உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மித மிஞ்சி விட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதீக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடம் கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கி விடு. வீட்டிலும், வெளியிலும் தனிமையிலும் கட்டிடத்திலும் எதிலும் எப்போதும் நேர்மை இருக்க வேண்டும். உண்மை இருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. நீ இயன்ற வரை அதைத் தடுக்க வேண்டும். எல்லாப்பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை, தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை, சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா எல்லாச் செய்திகளிலும், உண்மை நிலவும் படி செய்.

"தமிழா எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை, எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. முந்திய சாஸ்திரம் தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய்" என்று தீர்மானம் செய்து கொள்ளாதே! காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு எற்பட்டிருக்கிறா? "தகப்பன் வெட்டிய கிணறு" என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள் என்று பஞ்ச தந்திரம் நகைக்கிறது.

"இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள்" என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

"இவற்றுள் அறமாவது கடமை, அது உனக்கும், உனது சுற்றத்தாருக்கும் பிறர்க்கும் நீ செலுத்த வேண்டிய கடமை "பிறர்"

என்பதனுள் வையகம் முழுவதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்கள் எல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

"பொருள் என்பது செல்வம், நிலமும், பொன்னும், கலையும் புகழும் நிறைந்திருத்தல். நல்ல மக்களைப் பெறுதல், இனப்பெருமை சேருதல் இவையெல்லாம் செல்வம். இச்செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு நான் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

"இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பன. பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸ வஸ்துகளை அனுபவிப்பது, இவ்வின்பங்களெல்லாம் தமிழா! உனக்கு நன்றாக அமையும் படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்கள் எல்லாம் தீர்க. உன்னுடைய வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகும் உடைய வஸ்துக்கள் எல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

"வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. வீடு என்ற சொல்லுக்கு விடுதலை என்று பொருள். மேற் கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேரிய பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலை அருள் செய்வான் தமிழா! உனது புருஷார்த்தங்கள் கை கூடுக" என்று பாரதி கூறுகிறார்.

பாரதியின் இந்த உரை நடைக் குறிப்பை மீண்டும் மீண்டும் பல முறை படிப்போமாக. இதிலுள்ள ஆழ்ந்த கருத்துக்கள் அவைகளின் உள்ளடக்கம் ஆகியவைகளின் சிறப்புத் தன்மைகள் ஒரு புறமிருக்க, அதன் தமிழ் நடை, தமிழ் சொற்கள், அவர் கையாண்டுள்ள தமிழ் மொழி நடையின் ஆற்றல், வேகம், துடிப்பு கூறிய சொற்களின் ஓட்டம், அந்த சொற்களில் பொதிந்துள்ள உண்மைகள், அவை படிப்போரின் உள்ளங்களில் ஏற்படுத்தும்

எழுச்சி வேகம், அதில் பாரதியின் கட்டளைகள், ஆகியவைகளை நாம் தெளிவுப்படக் காண முடிகிறது.

தமிழ் மொழியின் உரைநடையில் பாரதியின் உரைநடை ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவிக்கிறது. பாரதி ஒரு மகாகவியாகத் தான் அதிகமாகத் தமிழ் மக்கள் கண்டி–ருக்கிறார்கள். பாரதி தமிழ்க் கவிதை உலகிற்கு ஒரு புதிய சகாப்தத்தைப் போலேவே தமிழ் உரைநடைக்கும் ஒரு புதிய திசை வழியைக் காட்டியுள்ளார்.

பாரதியின் காலத்தில் தமிழ் மொழியின் உரைநடையில் ஏற்கனவே கலந்திருந்த வடமொழிச் சொற்களுடன் ஆங்கில மொழிச் சொற்களின் கலப்பும் சேர்ந்து கொண்டிருந்தது. மக்கள் பேசும் தமிழ் மொழியில் கூட வடமொழிச் சொற்களும், ஆங்கில மொழிச் சொற்களும் கலந்திருந்தன. இன்றும் கூட நகரங்களில் வாழும் மக்களிடையில் குறிப்பாக நடுத்தர மேல் தட்டு மக்களிடையில் ஆங்கிலச் சொற்களின் கலப்பு அதிகமாக இருப்பதைக் காண்கிறோம்.

பாரதி தனது தமிழ் உரைடையில் தேவைப்படும் போது பிறமொழிச் சொற்களை குறிப்பாக வடமொழி மற்றும் ஆங்கில மொழிச் சொற்களை எடுத்துக் கொள்ளத் தயங்கவில்லை. ஆயினும் அவருடைய குறிக்கோளாக "*இயன்ற வரை தமிழே பேசுவேன், தமிழே எழுதுவேன், சிந்தனை செய்வதும் தமிழிலிலேயே செய்வேன்*" என்று குறிப்பிடுகிறார்.

தமிழ் உரை நடைக்கு தமிழ் சிந்தனை அடிப்படை அவசியமானதாகும். எப்பொருளைப் பற்றியும் நாம் பேசவோ, எழுதவோ முயலும் போது தமிழில் சிந்திப்பது என்பது அவசியமானதாகும்.

மூடபக்தி என்னும் தலைப்பில் பாரதி எழுதியுள்ள ஒரு கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"நம்முடைய ஜனங்களுக்கிடையே இந்த நிமிஷம் வரை நடைபெறும் மூட பக்திகளுக்கு கணக்கு வழக்கே கிடையாது. இதனால் நம்மவர்களின் காரியங்களுக்கும், விவரங்களுக்கும் ஏற்படும் விக்கினங்களுக்கு எல்லை இல்லை.

"இந்த மூட பக்திகளிலே மிகவும் தொல்லையான அம்சம் யாதெனில் எல்லாச் செய்கைகளுக்கும் நாள் நட்சத்திரம் லக்னம் முதலியவை பார்த்தல். க்ஷவரம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்றால் கூட, அதற்கும் நம்மவர், மாசப் பொருத்தம், பக்ஷப்பொருத்தம் திதிப் பொருத்தம், நாட் பொருத்தம் இத்தனையும் பார்த்தாக வேண்டியிருக்கிறது. க்ஷவரத்திற்கே இப்படியென்றால் இன்னும் கல்யாணங்கள், சடங்குகள்,வியாபாரங்கள், யாத்திரைகள், விவசாய ஆரம்பங்கள் முதலிய முக்கிய காரியங்கள் பல்லாயிரத்தின் விஷயத்திலே நம்மவர் மேற்படி பொருத்தங்கள் பார்ப்பதில் செலவிடும் கால விரயத்திற்கும் பொருள் விரயத்திற்கும் வரம்பே கிடையாது. சகுனம் பார்க்கும்வழக்கங்களும் கார்யங்களுக்கு பெருந்தடையாக வந்து மூண்டிருக்கிறது. இதில் நேரும் அழிவுகளும் அவற்றால் பொருள் அழிவுகளும் எவ்வளவு உண்டாகின்றன என்பதை நம்மவர் கவனிப்பதே கிடையாது. சகுனம் பார்ப்பதனால் காரிய நஷ்டம் மாத்திரம் உண்டாகிறது. நாட் பொருத்தம், லக்னப் பொருத்தம் முதலியன பார்க்குமிடத்தே கார்ய நஷ்டம் மட்டுமின்றி மேற்படி லக்னம் முதலியன பார்த்துச் சொல்லும் சோதிடருக்கு வேறு பணம் செலவாகிறது" என்று எழுதுகிறார்.

பாரதியின் இந்த உரைநடையில் வடமொழிச் சொற்கள் பல கலந்திருப்பினும் மொழி சரளமாகவும் அக்காலப் பேச்சு நடையிலும் இணைந்திருப்பதைக் காண்கிறோம்.

## 8. பாரதியின் உரைநடைக்கு இன்னும் ஒரு எடுத்துக்காட்டு

"சிதம்பரம்"என்னும் தலைப்பிலான கட்டுரையில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

"காலை பத்துமணி இருக்கும் நான் ஸ்நானம் செய்து, பூஜை முடித்து, பழம் தின்று, பால் குடித்து, வெற்றிலை போட்டு, மேனிலத்திற்கு வந்து நாற்காலியின் மேல் உட்கார்ந்து கொண்டு இன்ன காரியம் செய்வதென்று தெரியாமல் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஜன்னலுக்கு எதிரே வானம் தெரிகிறது. இளவெயில் அடிக்கிறது. வெயிற்பட்டு மேகம் பகற் சந்திரன் நிறங் கொண்டு முதலையைப் போலும் ஏரிக்கரையைப் போலும் நானா விதமாகப் படுத்துக் கிடந்தது. எதிர் வீட்டில் குடியில்லை. அதற்குப் பக்கத்து வீட்டில் இருந்து சங்கீத ஓசை வருகிறது. வீதியிலிருந்து குழந்தைகளின் சப்தம் கேட்கிறது. வண்டிச்சப்தம், பக்கத்து வீட்டு வாசலில் விறகு பிளக்கிற சப்தம், நான்கு புறத்திலும் காக்கைகளின் குரல், இடை, இடையே குயில், கிளி, புறாக்களின் ஓசை, வாசலிலே காவடி கொண்டு போகும் மணியோசை, தொலையிலிருந்து வரும் கோவிற் சங்கின் நாதம், தெருவிலே சேவலின் கொக்கரிப்பு, இடையிடையே தெருவில் போகும் ஸ்திரிகளின் பேச்சொலி, அண்டை வீடுகளில் குழந்தை அழும் சப்தம், "நாராயணா கோபாலா" என்று ஒரு பிச்சைக்காரனின் சப்தம், நாய் குரைக்கும் சப்தம், கதவுகள் அடைத்துத் திறக்கும் ஒலி, வீதியில் ஒருவன் "ஹீக்கும்" என்று தொண்டையை லேசாக்கி இருமித்திருத்திக் கொள்ளும் சப்தம், தொலைவிலே காய்கறி விற்பவன் சப்தம், "அரிசி, அரிசி" என்று அரிசி விற்றுக் கொண்டு போகிற ஒலி, இப்படிப் பலவிதமான ஒலிகள், ஒன்றன் பின் மற்றொன்றாக வந்து செவியில் படுகின்றன. இந்த ஒலிகளையெல்லாம் பாட்டாக்கி இயற்கை தெய்வத்தின் மகா

மௌனத்தைச் சுருதியாக்கி என்மனம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது" என்று எழுதுகிறார்.

இதில் சிறிய சிறிய வாக்கியங்கள் சேர்ந்த பெரிய வாக்கியங்கள் பொருள் பொதிந்த வர்ணனைகள், எளிய நடை, ஓசை, சப்தம், குரல் ஒலி, நாதம், போன்ற இணையான பொருள் கொண்ட பல சொற்கள் முதலியவற்றைக் காண முடிகிறது. தற்கால தமிழ் உரைநடையின் தொடக்கமாக பாரதியின் இந்த உரைநடையை எடுத்துக் கொள்ளலாம். இந்த மரபு சிறந்த வழி காட்டுதலாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

மயிலாப்பூரில் ஸ்ரீகலவல கண்ணன் செட்டியார் ஏற்படுத்திய புதிய சமஸ்கிருத கலாசாலையின் க்ருஹப்பிரவேசத்தை ஒட்டி நீதிப்ர வீண ஸ்ரீசுப்பிரமணிய ஐயர், செய்த ஆசி வசனங்களிடையே ராமானுஜா சாரியாருடைய மகிமையைப் பற்றி சில வார்த்தைகள் சொன்னார். ஸ்ரீமான் நீதி மணி ஐயர், பிரம்ம வேதாந்தியாகையால் இவருக்கு த்துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்ற மூன்று கட்சியும் சம்மதம். சத்யம் ஒன்று. அதனை ஆராதனை செய்யும் வழிகள் பல. அத்வைத ஸ்தாபனம் செய்த சங்கராசாரியரே ஷண்மத ஸ்தாபனமும் செய்ததாக அவருடைய சரித்திரம் சொல்கிறது" என்று நம்பிக்கை என்னும் தலைப்பில் பாரதி எழுதுகிறார். இந்த உரைநடை மணிப் பிரவாளத்தை ஒத்திருப்பதைக் காணலாம்.

"ஆரிய சம்பத்து" என்னும் தலைப்பில் வடமொழி தமிழ் மொழிகளின் சொல்லிணைப்புகளை மற்றும் கருத்தி –ணைப்புகளை பாரதி முன் வைக்கிறார்.

"ஸம்பத்து" என்பது சம்ஸ்கிருதச் சொல்.. இதன் பொருள் செல்வம். ஆனால் இங்கு செல்வம் என்பது திரவியத்தையும்,

பூஸ்திதியையும் ஆடு,மாடுகளையும் மாத்திரமே குறிப்பிடுவதன்று.

"1) அறிவுச் செல்வம், 2) ஒழுக்கச் செல்வம், 3) பொருட் செல்வம்" ஆகிய மூன்றையும் குறிப்பிடும். "ஆர்ய சம்பத்து" என்பது ஹிந்துக்களுடைய அறிவு வளர்ச்சி என்று குறிப்பிடுகிறார்.

கம்பன் தனது காவியத்தில்

*"சவியுறத் தெளிந்து தண்ணென்*
*றொழுக்கமும் தழுவிச் சான்றோர்*
*கவியெனக் கிடந்த கோதாவரியினை*
*வீரர் கண்டார்"*

என்று குறிப்பிட்டுள்ளதை பாரதி எடுத்துக் காட்டி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"சவி" என்பது ஒளி, இது வடசொல். கம்பன் காலத்தில் அதிக வழக்கத்தில் இருந்தது போலும். "ஒளி பொருந்தும் படி தெளிவு கொண்டதாகி தண்ணென்ற (குழிர்ந்த) நடையுடையதாகிய மேலோர் கவிதையைப் போலக் கிடந்த கோதாவரி நதி" என்று கம்பன் வர்ணனை செய்கிறார், எனவே கவிதைகளில் "ஒளி, தெளிவு, குளிர்ந்தநடை" மூன்றும் இருக்க வேண்டும் என்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை என்று பாரதி குறிப்பிட்டு மேலும் தொடர்கிறார்.

மேலும் நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப் பட்ட நூல்கள், அக்காலத்து பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற பாஷை மாறிக் கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவன் அந்தக்காலத்து ஜனங் –களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க

வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை. ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாக புலவர்களும், சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அசாதாரண அலௌகீக அந்தகார நடையில் எழுதுவது தான் உயர்ந்த கல்வித் திறமை என்று தீர்மானம் செய்து கொண்டார்கள்.''

இந்தப் பகுதியில் பாரதியின் நல்ல உரைநடை வடிவமும் அத்துடன் மொழிநடை பற்றிய அவருடைய கொள்கையின் உள்ளடக்கமும் அடங்கியுள்ளதைக் காணலாம். அத்துடன் பாரதியாரின் உரைநடையில் இலக்கண விதிவிலக்குகளையும் காண்கிறோம்.

பாரதியாரின் உரைநடையில் மொழி பெயர்ப்புகளும் ஒரு பகுதியாகும். "அடங்கி நட'' என்னும் கட்டுரை வங்க பாஷையில் ஸ்ரீமான் சர்.ரவீந்திரநாத் தாகூர் அவர்களால் எழுதப் பெற்று, "மாடர்ன் ரிவியூ'' பத்திரிகையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு அதனின்றும் ஸ்ரீமான் சி.சுப்பிரமணிய பாரதியால் மொழி பெயர்க்கப்பட்டது.

"மழை கொஞ்சம் தூற ஆரம்பித்தால் எங்கள் சந்திலும் அது போய்ச் சேரும். சித்பூர் ரஸ்தாவிலும் நீர் வெள்ளமாய் விடுகிறது. நான் தலை நரைத்த கிழவனாகி விட்டேன். சிறுபிராயம் முதல் இதுவரை ஒரு முறை கூட தவறாமல் வருஷந்தோறும் இப்படி நடப்பதைப் பார்க்கும் போது இவ்வுலக வாழ்க்கையில் நீரில் பாதி நிலத்தில் பாதி குடியிருக்கும் ஜந்துக்களுக்குள்ள யோக்கியதை தான் நமக்கும் இருக்கிறது என்ற எண்ணம் என் மனதில் அடிக்கடி உதிப்பது உண்டு.

இங்ஙனம் அறுபது வருஷங்கள் ஆகி விட்டன. இதற்கிடையே உலகத்தில் நடந்த மாறுதல்கள் பல. கலியுகத்தின் குதிரையாக இருந்த நீராவியை இப்போது மின்சக்தி கண்டு நகைக்கிறது. கண்ணுக்கு எட்டாதிருந்தது பரமாணு. இப்போது மனத்துக்கு எட்டாதிருந்த சித்தாந்தம் உண்டாயிருக்கிறது. சாகப் போகிற எறும்பைக் போல மனிதனும் சிறகு முளைத்துப் பறக்கிறான். வானத்தில் இடம் உனக்கா எனக்கா? என்று நீதி ஸ்தலத்தில் வியாஜ்யங்கள் விரைவாக வரக் கூடிய காலத்தை வக்கீல்கள் எதிர் பார்க்கிறார்கள். ஒரே நாள் இரவில் சீனர் எல்லோரும் தங்கள் பன்றிக்குடுமியை நறுக்கி எறிந்தனர். ஐநூறு வருஷத்தாவுதலை ஜப்பான் ஐம்பது வருஷத்தில் தாவி விட்டது. ஆனால் இந்த சித்பூர் ரஸ்தாவில் மழை பெய்தால் சேறு உண்டாகாமல் செய்ய வழியில்லை. அதன் ஸ்திதிக்கு மாறுதல் இல்லை. காங்கிரஸ் என்ற பெயர் உண்டாவதற்கு முன்பு நமது ஜாதிப் பாட்டு எத்தனை எத்தனை சோகமாயிருந்ததோ அத்தனை சோகமாகத்தான் இப்போது ஸ்வராஜ்யம் நெருங்கி வரும் தருணத்திலும் இருக்கிறது'' என்பது பாரதியின் மொழியாக்கத் தமிழ் நடையாகும்.

பொதுவாக மொழி பெயர்ப்புப் பணி மிகவும் கடினமான பணிகளில் ஒன்று. மொழி பெயர்ப்பாளருக்கு முதலாவதாக இரு மொழிகளிலும் நல்ல பயிற்சியும் பாண்டித்யமும் இருக்க வேண்டும். அதற்கு ஈடாக மொழியாக்கம் செய்யப்பட வேண்டிய பொருளைப் பற்றிய ஞானம் குறைந்தபட்சம் இருக்க வேண்டும். இரண்டாவது மொழியாக்கம் செய்து எழுதப்படும் மொழியில் பொருள் குறையாமலும் சரளமான நடையிலும் உரைநடை அமைய வேண்டும். அக்கலையில் கை தேர்ந்து விளங்குகிறார் பாரதியார். கருத்தும் பொருளும் சுவையும் குன்றாமல் சிறந்த தமிழ் நடையில் பாரதியாரின் மொழி பெயர்ப்புகளைக் காண முடிகிறது.

அவருடைய தலை சிறந்த மொழி பெயர்ப்புகளில் பல கட்டுரைகளும் தமிழ் உரை நடையில் வெளியாகியுள்ளன. அத்துடன் பாரதியாரின் பகவத்கீதை மொழி பெயர்ப்பு ஒரு தலை சிறந்த மொழியாக்கமாகும். பாரதியாரின் பகவத் கீதை மொழி பெயர்ப்பு நூல் பல லட்சம் பிரதிகள் மக்களிடம் செல்ல வேண்டும். அத்துடன் பகவத்கீதை மொழியாக்க நூலுக்கு பாரதியார் தன்னுடைய முன்னுரை ஒன்றை மிகவும் சிறப்பான கருத்தாழத்துடன் எழுதியிருக்கிறார். அதுவே தலை சிறந்த உரைநடை இலக்கியமாகவும் அமைந்துள்ளது.

ஒரு கருத்தை மிகவும் உறுதியாகப் படிப்போர் மனதில் பதியும் படி எடுத்துக் கூறுவதில் பாரதியாரின் உரைநடை, தமிழ் மொழி வளர்ச்சியில் சிறந்த பங்கை ஆற்றியிருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக

“பல நூற்றாண்டு நாம் வாயை மூடிக்கொண்டு அவமானப் பட்டதெல்லாம் ஒன்று சேர்ந்து கடைசியில் அன்னிய ராஜ்யமாகப் பரிணமித்தது. கை எப்போதும் உடம்பில் நோயுள்ள இடத்தைப் போய் தீண்டுவது போலவே நம்முடைய கருத்தை முழுவதும் நம்மை ஆளும் மேற்கு திசையாருடைய ராஜ்ய நெறியில் செல்லுகிறது”என்று பாரதியாரின் மொழியாக்க உரைநடையில் காண்கிறோம்.

## 9. வசன நடை பற்றி பாரதியார்

தமிழ் வசன நடை பற்றி பாரதியார் மிகவும் சிறப்பான கருத்துக்களைத் தனது உரைநடைப் பகுதியில் கூறியுள்ளார். அதில் மொழி பற்றிய அவருடைய கருத்தும் தெளிவாக வெளிப்படுகிறது.

தமிழில் வசன நடை இப்போது தான் பிறந்து பல வருஷமாக வில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும் படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடிய வரை பேசுவது போலவே எழுதுவது தான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி. ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும், வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது.

"பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து அதாவது ஜனங்களுக்குச் சற்றேனும் பழக்கமில்லாமல் தனக்கும் அதிக பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும். சந்தேகமில்லை ஆனாலும் ஒரு வழியாக முடிக்கும் போது வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப் பார்த்துக் கொள்ளுதல் நல்லது, அல்லது ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக் கொள்ள வேண்டும். சொல்ல வந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்றுமில்லாமல் நடை நேராகச் செல்ல வேண்டும். முன் யோசனையில்லாமல் நேராக எழுதும் திறமையை வாணி கொடுத்து விட்டால் பின்பு சங்கடமில்லை. ஆரம்பத்தில் மனதிலே கட்டி முடித்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே

நேர்மையும் தைர்யமும் இருந்தால் கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைரியம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும், சண்டிமாடுபோல் ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும். வாலைப் பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது. வசனநடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்கும் உடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ் சக்தியை நிலை நிறுத்திக் கொண்டால் கை நேராக தமிழ் நடையெழுதும்" என்று உரைநடை மொழி பற்றி மிகவும் அழுத்தமான சிறந்த கருத்துக்களை பாரதி இந்த வரிகளில் முன் வைத்துள்ளதைக் காணலாம்.

உரைநடை பற்றி பாரதி கூறியுள்ள இந்தக் கருத்துகள் மிகவும் ஆழ்ந்து படிக்கத்தக்கவை. தெளிவு, ஒளி, தண்மை ஒழுக்கம் ஆகியவை எழுத்திலும் இருக்க வேண்டும் என்பதை பாரதி மிகவும் அழுத்தமாகக் கூறுகிறார். அத்துடன் பாரதி ஏற்கனவே கூறியுள்ள படி எழுத்துக்கு உண்மையும் நேர்மையும் அவசியமாகும்.

## 10. தமிழ் விழாக்கள் பற்றி

ஆந்திர தேசத்தில் போத்தன்னா என்னும் பிரபலமான தெலுங்கு கவிஞர் பாகவதத்தைத் தெலுங்கு மொழியில் எழுதியுள்ளார். அந்தக் காவியம் தமிழ்நாட்டில் கம்பராமாயணம் மிகவும் பிரபலமாக இருப்பதைப் போல ஆந்திர தேச மக்களிடையில் மிகவும் பிரபலமாக இருக்கிறது. அந்த போத்தன்னா மகாகவிக்கு ஜன்ம விழா எடுக்க வேண்டும் என்னும் முயற்சியைப் பாராட்டி, பாரதி , அது போல் தமிழ் நாட்டில் பெரிய கவிஞர்களுக்கும் இதர பெரியார்களுக்கும் விழாக்கள் எடுக்க வேண்டும் என்னும் கருத்தை வெளியிட்டு எழுதியுள்ளார்.

ஆனால் தமிழ் நாட்டில் இது போன்ற விஷயங்களை கவனிப்பார் இல்லை. தமிழ் நாட்டு வீரர்களுக்கும், கவிஞர்களுக்கும் லோ கோபகாரிகளுக்கும் இ,துவரை எவ்விதமான திருவிழாவையும் காணவில்லை. பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமாகப் பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித் தவறி ஓரிருவர் தோன்றினாலும் அவர்களுக்குத் தக்க மதிப்பு இராது. பண்டைக் காலத்து சக்திமான்களை வியப்பதும் அவர்களுடைய தொழிற் பெருமையை உலகறிய முழங்குவதும் கூடியவரை பின்பற்ற முயலுவதுமாகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சக்திமான்களை என்ன வகையில் கணிப்பார்கள்?

எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது. எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்து போகும். பழக்கத்தில் இல்லாத திறமை இழந்து விடப்படும். அறிவுடையோரையும், லோ கோபகாரியையும், வீரரையும் கொண்டாடாத தேசத்தில் அறிவும் லோ கோபகாரமும் வீரமும் மங்கிப் போகும். தமிழ் நாட்டில் இப்போது புதிய உயிர்

தோன்றியிருப்பதால் நாம் இவ்விஷயத்தில் தமோகுணம் செலுத்தாமல் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவிகளுக்கு ஞாபகச்சிலைகளும், வருடோத்சவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். திருவள்ளுவர் மைலாப்பூரில் பிறந்தவர். அங்கே திருவள்ளுவர் கோயில் இப்போது இருக்கிறது. ஜன்ம தினம் நிச்சயமாகத் தெரியவில்லை. ஒருவேளை அந்தக் கோயில் பூசாரிக்குத் தெரியக் கூடும்.

ஐந்து மகாகாவியங்களிலே சிறந்ததாய், "சிலப்பதிகாரம்" செய்த இளங்கோ முனிவர் வஞ்சி நகரத்தில் பிறந்தவர். இந்த வஞ்சி நகரம் இப்போது திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள கரூர் என்று பண்டித மு.ராகவய்யங்கார் தீர்மானம் செய்கிறார். இந்த ஆசிரியரது ஜன்ம தினத்தையும் நிச்சயமாகச் சொல்வதற்கு வழியில்லை.

மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயிலைச் செம்மையாகக் கட்ட வேண்டும். இப்போது மிகவும் ஏழ்மை நிலைமையில் இருக்கிறது. திருவழுந்தூரிலும் கரூரிலும் ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டும். ஜன்ம தினங்கள் நிச்சயிக்கப்பட வழியில்லை. ஆதலால் சரஸ்வதி பூசைக்கு முன்பு அல்லது பின்பு குறிப்பிட்டதொரு தினத்தில் இந்த மகான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுதல் பொருத்தமுடைய செய்கையாகும். நவராத்திரி உத்சவங்கள் நமக்குள் வழக்கமாக உள்ளதால் அந்த சமயத்தை ஒட்டி நமது மகாகவிகளுக்குத் திருவிழாக் கொண்டாடுதல் சுலபமாக இருக்கும்.

"பண்டித சபைகளையும் பொதுஜன ஆரவாரங்களையும் கோலா ஹலமாக நடத்தி எல்லா வருணத்தாரும் எல்லா மதஸ்தரும் சேர்ந்தால் சந்தோஷமும் அறிவுப் பயனும் உள்ள மாண்பும் பெற இடமுண்டாகும். மத பேதங்கள் பாராட்ட இடமில்லாத

திருவிழாக்கள் தமிழ் நாட்டில் எவ்வளவு அவசியம் என்பதை ஒவ்வொரு அறிவாளியும் எளிதாக ஊகித்துக் கொள்ளலாம்,'' என்று பாரதி தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறை வேற்றவும் அதற்குரிய செயல்பாடுகளையும், கடமைகளையும் வகுத்துக் கொள்ளவும், ஆலோசனைகளைத் தெரிவிக்கும் வகையில் பாரதியின் கருத்துக்கள் இந்த உரை நடைப் பகுதியில் வெளியிடப் பட்டுள்ளன.

பாரதி சிந்தித்த இந்த வழியில் பாரதி வழி காட்டிய இந்த வழியில் பாரதி இலக்கிய பரம்பரையினர் பலரும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டார்கள். தமிழகத்தில் பல நல்லவர்களும் அறிவுடையோரும், தமிழ் வளர்ச்சியிலும், தமிழக வளர்ச்சியில் அக்கரை கொண்டவர்களும் தமிழ் ஆர்வலர்கள் பலரும் சேர்ந்து பல நகரங்களிலும் பல ஊர்களிலும், வள்ளுவர் மன்றங்களும், கம்பன் கழகங்களும் இளங்கோவடிகள் மன்றங்களும், இராமலிங்கர் சபைகளும், பாரதி மன்றங்களும் மற்றும் பல இலக்கிய அமைப்புகளையும் நிறுவியும் அந்த மகான்களின் பெயரில் விழாக்களும் சிறப்புக் கூட்டங்களும் இப்போது நடைபெற்று வருகின்றன. தைப் பொங்கல் நாளையொட்டி மூன்றாம் நாள் வள்ளுவர் தினமாக அரசு சார்பிலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் திருவள்ளுவர் நினைவாக வள்ளுவர் கோட்டமும், காரைக்குடியில் கம்பன் நினைவாக தமிழ் தாய் கோயிலும், எட்டயபுரத்தில் பாரதி நினைவாக மணி மண்டபமும் நிறுவப் பட்டிருக்கின்றன. இந்தப் பெரியோர்களுக்கு பல இடங்களில் சிலைகளும் நினைவுச் சின்னங்களும் எழுப்பப்பட்டிருக்கின்றன. தெருக்களுக்கும், குடியிருப்புப் பகுதிகளுக்கும் அவர்களுடைய பெயர்கள் சூட்டப் பட்டிருக்கின்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் விழாக்கள் எடுக்கப் படுகின்றன.

ஆயினும் பாரதியின் கனவின் படி அவை மக்களிடம் இன்னும் அதிகமாக விரிவாகப் பரவ வேண்டும். பிரபலமடைய வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும். அதற்காக அரசாங்க விடுமுறை அவசியமில்லை. ஏற்கனவே நமது நாட்டில் அரசாங்க விடுமுறை தினங்கள் அதிகரித்துள்ளன. அதனால் பணிக்கலாச்சாரம் பாதிக்கப் பட்டிருக்கிறது.

நமது பெரும் புலவர்கள், பெரியார்கள், மகான்கள், வீரர்கள் பெயரில் ஊர்தோறும், அமைப்புகளையும் விரிவாக நிறுவ வேண்டும். கூட்டங்களையும், பல நினைவு நிகழ்ச்சிகளையும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும், அவர்களுடைய கருத்துக்களை மக்களிடம் பரப்ப வேண்டும். அவர்களைப் பற்றிய நூல்கள் வெளியிட வேண்டும்.

பள்ளிகளில், கல்லூரிகளில், அலுவலகங்களில் தொழில் நிறுவனங்களில் கிராமங்களில் மாலை நேரங்களில் இவ் –விழாக்களை நடத்தலாம். இப்பெரியார்களின் படைப்புகளைப் பிரபலப்படுத்தி மக்கள் மனதில் பதியச் செய்ய வேண்டும்.

## 11. தமிழின் நிலை

தமிழின் நிலை என்னும் தலைப்பில் பாரதியார் தனது உரைநடையில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக நாம் ஆற்ற வேண்டிய பல கடமைகளைப் பற்றி விரிவாக விவரித்துக் கட்டுரையாக எழுதியுள்ளார். அக்கட்டுரை பாரதியின் உரைநடைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. அக்கட்டுரையில் அவர் கூறியுள்ள பல கருத்துக்களும் இன்றும் கூட பொருத்த முடையனவாக அமைந்துள்ளன. அக்கட்டுரைப் பகுதி வருமாறு.

“கல்கத்தாவில் ‘ஸாகித்ய பரிஷத்’(இலக்கிய சங்கம்) என்றொரு சங்கம் இருக்கிறது. அதைத் தென்னாட்டிலிருந்து ஒருவர் சிறிது காலத்திற்கு முன்பு போய் பார்த்து விட்டு வந்து அச்சங்கத்தார் செய்யும் காரியங்களைப் பற்றி ஹிந்து பத்திரிகையில் ஒரு விஸ்தீரணமானலிகிதம் எழுதியிருக்கிறார். மேற்படி பரிஷத்தின் நிலைமையையும் காரியங்களையும் அவர் நமது மதுரைத் தமிழ் சங்கம் முதலிய தமிழ் நாட்டு முயற்சிகளுடன் ஒப்பிட்டுக் காட்டி நம்மவரின் ஊக்கக் குறைவைப் பற்றி மிகவும் வருத்தப் படுகிறார். தெலுங்கர், மலையாளத்தார், கன்னடர் எல்லாரும் தத்தம் பாஷைகளின் வளர்ச்சியின் பொருட்டு வருஷாந்திரப் பெருங் கூட்டங்கள் நடத்தி வருகிறார்கள். அவற்றால் விளையும் பயன் நமது சங்கத்தாரின் காரியங்களால் தமிழ் நாட்டிற்கு விளையவில்லை. வங்காளத்திலுள்ள ஸாஹித்ய பரிஷத்தின் நோக்கமென்னவென்றால் எல்லாவிதமான உயர்தரப் படிப்புகளும் வங்காளப் பிள்ளைகளுக்கு வங்காளி பாஷையில் கற்றுக் கொடுக்கும் காலத்தை விரைவில் கொண்டு வந்து விட வேண்டும் என்பது. விரைவாகவே இந்த நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றி விடுவார்கள் என்பது பல அடையாளங்களினால் நிச்சயமாகத் தோன்றுகிறது என்று அந்த லிகிதக்காரர் சொல்லுகிறார்.

வங்காளிகளின் விஷயம் இப்படியிருக்க, மயிலாப்பூரில் சிறிது காலத்திற்கு முன்னே நடந்த ஸ்ரீவைஷ்ணவ சபைக் கூட்டத்தில் பெரும்பான்மையோர், இங்கிலிஷ் தெரியாத வைதீகப் பிராமணராக இருந்தும் அதிலே சில இங்கிலீஸ் உபந்நியாசங்கள் நடந்ததை எடுத்துக் காட்டி மேற்படி லிகிதக்காரர் பரிதாபப்படுகிறார். நமது ஜனத் தலைவர்கள் இங்கிலிஷில் யோசிப்பதையும், பேசுவதையும் நிறுத்தினால் ஒழிய நமது பாஷை மேன்மைப்பட இடமில்லை என்று அவர் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

மேற்படி லிகிதக்காரர், தமது கருத்துக்களை இங்கிலிஷ் பாஷையில் எழுதி வெளியிட்டிருப்பது போலவே தமிழில் எழுதித் தமிழ் பத்திரிகைகளில் பிரசுரப்படுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். சபைகள், சங்கங்கள், பொதுக் கூட்டங்கள், வருஷோத்சவங்கள், பழஞ்சுவடிகள் சேர்த்து வைத்தல், அவற்றை அச்சிடல், இவையெல்லாம் பாஷை வளர்ச்சிக்கு நல்ல கருவிகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தமிழ் மக்கள் தமது மொழியை மேம்படுத்த விரும்பினால், அதற்கு முதலாவது செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டு. அதாவது கால விசேஷத்தால் நமது தேசத்தில் விசாலமான லௌகீக ஞானமும் அதனைப் பிறருக்கு உபயோகப்படும் படி செய்வதற்கு வேண்டிய அவகாசம் பதவி முதலிய சௌகரியங்களும் படைத்திருப்பவராகிய இங்கிலிஷ் படித்த வக்கீல்களும், இங்கிலிஷ் பள்ளிக் கூட வாத்தியார்களும் நமது நீதி ஸ்தலங்களையும் பள்ளிக் கூடங்களையும் விட்டு வெளியேறினவுடனே இங்கிலிஷ் பேச்சை விட்டு தாம் தமிழர் என்பதை அறிந்து நடக்க வேண்டும். பந்தாடும் போதும் சீட்டாடும் போதும் ஆசாரத்திருந்த சபைகளிலும் வருணா சிரமசபைகளிலும் எங்கும் எப்போதும் இந்தப் பண்டிதர்கள் இங்கிலிஷ் பேசும் வழக்கத்தை நிறுத்தி விட்டால் உடனே தேசம் மாறுதல் அடையும். கூடிய வரை இவர்கள் தமிழ் எழுத்து கற்றுக் கொள்ள வேண்டும்.

இவர்கள் அத்தனைபேரும் தமிழ்ப் பத்திரிகை வாங்கிப் படிக்க வேண்டும். *புத்தக ரூபமாகவும் பத்திரிகைகளில் லிகிதங்களாகவும் இவர்கள் எழுதுகிற கதை, காவிய, விளையாட்டு வார்த்தை, வினை வார்த்தை சாஸ்திர விசாரணை, ராஜ்ய நீதி எல்லாவற்றையும் தமிழில் எழுத வேண்டும்.*

தமிழ்ப் பத்திரிகைகள் நடத்துவோர் இப்போது படும் கஷ்டம் சொல்லும் தரமல்ல. வெளியூர் வர்த்தமானங்களைத் தவிர மற்றபடி எல்லா விஷயங்களும் பத்திராதிபர்கள் தாமே எழுதித் தீர வேண்டியதிருக்கிறது. வெளியூர்களிலுள்ள ஜனத்தலைவரும் ஆங்கிலப் பண்டித சிகாமணிகளும் தமிழ் பத்திரிகைகளை சரியானபடி கவனிப்பதில்லை. அந்தந்த ஊரில் நடக்கும் பொதுக் காரியங்களையும் அவரவர் மனதில் படும் புது யோஜனைகளையும், தெளிந்த தமிழிலே எழுதி தமிழ்ப் பத்திரிகைகளுக்கு அனுப்புதல் மிகவும் சுலபமான காரியம். ஜனத் தலைவர்களால் இக்காரியம் செய்ய முடியாத பக்ஷத்தில் பிறருக்கு சம்பளம் கொடுத்தாவது செய்விக்க வேண்டும்'' என்று எழுதுகிறார்.

பாரதியின் உரைநடை இந்தக் கட்டுரையில் மிகவும் தெளிவாகவும், எவரும் சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடிய முறையிலும் அமைந்திருக்கிறது. இதில் பாரதி தன் காலத்திற்குத் தேவையானதோடு எக்காலத்திற்கும் தேவையான சில சிறந்த கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சிறந்த பல நடைமுறைக்குச் சாத்தியமான அவசியமான ஆலோசனைகளைக் கூறுகிறார். தமிழ் உரை நடையிலேயே எவ்வாறு சிறந்த கருத்துகளையும், நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான –வைகளையும் எடுத்துக் கூற முடியும் என்பதையும் நாம் இக்கட்டுரை மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

தமிழில் கல்வி கற்பிப்பது, தமிழ் மொழியில் ஆட்சி நிர்வாகத்தை நடத்துவது, தமிழிலேயே படித்தவர்களும் மற்றவர்களும் பேசுவது, உரையாடுவது, சொற்பொழிவுகள் செய்வது, தமிழில் எழுதுவது, பத்திரிகைகளுக்கு எழுதுவது முதலிய பல முயற்சிகளிலும் தமிழ் மொழியைப் பயன் படுத்துவதன் மூலம் தமிழ் வளர்ச்சி ஏற்படுகிறது என்பதைக் குறிப்பிடுகிறார் பாரதி.

பாரதி காலத்திலிருந்து இன்று மொழி வளர்ச்சியில் எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழ் பத்திரிகைகள் அதிகமான அளவில் மாத இதழ்கள் வார இதழ்கள் நாளிதழ்கள் அவைகளின் பதிப்புகளும் விற்பனைகளும் சுற்றுகளும் அதிகரித்துள்ளன. பத்திரிகைகளுக்கும் மக் -களுக்கும் இடையில் தொடர்புகளும் அதிகரித்து வருகின்றன. எழுத்தாளர்கள், கவிஞர்களின் எண்ணிக்கைகள் அதி -கரித்துள்ளன. தமிழ் நூல்களும் அதிகமான அளவில் வெளி -யிடப்படுகின்றன. தமிழ் உரைநடை வளர்ச்சி பெற்று விரிவடைந்து வருகின்றன. பல்கலைக் கழகங்களின் தமிழ் துறைகள் விரிவடைந்துள்ளன. தமிழுக்கென தனிப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இவைகள் எல்லாம் நல்ல பணிகள் ஆற்றி வருகின்றன. தமிழ் பற்றிய பல ஆராய்ச்சிகள் நடை பெற்று வருகின்றன. தமிழ் மொழியின் தொன்மை, செழுமை, வளம் பற்றி வேறு பலரும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். பாரத நாட்டின் வேறு பல நகரங்களிலும், உலகின் பல நகரங்களிலும் தமிழ் இலக்கிய அமைப்புகள் உருவாகின்றன. உலகில் சுமார் முப்பது நாடுகளில் தமிழ் மொழி பேசும் மக்களிடம் தமிழார்வம் ஏற்படத் தொடங்கியிருக்கிறது.

தமிழிசை கர்நாடக இசை, தமிழ்ப்பாடல்கள், கீர்த்தனைகள்

நாடெங்கும் உலகெங்கும் பரவி வருகிறது. தமிழ் சினிமா (இயல் இசை நாடகம்) இந்திய நாட்டில் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. தமிழ்க் கலைஞர்கள் உலகப் புகழ் பெற்றிருக்கிறார்கள். தமிழ் நாட்டின் சிற்பக்கலை உலகப் புகழ் பெற்று வருகிறது.

தமிழ் மொழி செம்மொழியாக இந்திய அரசால் அறிவிக்கப் பட்டிருக்கிறது. விரைவில் நாடு முழுவதிலும் உலகம் முழு –வதிலுமுள்ள பல பல்கலைக் கழகங்களிலும் தமிழ் மொழி இடம் பெறும். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அமைந்திருக்கிறது.

ஆயினும் தமிழ் மொழி அதன் உரைநடை, அதன் கவிதைகள், காவியங்கள், அதன் இசை, பாடல்கள், அதன் நுட்பமான கலை அதன் இலக்கியம் இலக்கணம் தமிழின் தொன்மையான அறிவியல் துறைகள் வைத்திய முறை, மருந்தியல், நீரியல், கட்டிடக்கலை மற்றும் பல துறைச் சாதனைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். நவீன இன்றைய கால அறிவியல் தொழில் நுட்பக்கலைகள் அனைத்தும் தமிழில் வரவேண்டும். தமிழனாக உள்ள டாக்டர்கள் (வைத்தியர்கள்) என்ஜினியர்கள் (பொறிஇயல் வல்லுனர்கள்) அறிவியல் தொழில் நுட்ப வல்லுனர்கள், விஞ்ஞானிகள், முதலிய அனைவரும் அவர்கள் கற்ற கல்வியை கலைகளை தொழில் நுட்பங்களைப் பற்றிய நூல்களையெல்லாம் தமிழ் மொழியில் கொண்டு வருவதற்கும் தமிழில் கற்பிப்பதற்கும் முயற்சிகள் எடுக்க வேண்டும். அப்பணிகளில் அவர்கள் உதவ வேண்டும். தமிழ் கலைகளையெல்லாம் உலகமெலாம் பரப்புவதற்கு உதவி செய்ய வேண்டும். உலகில் உள்ள வளர்ச்சியடைந்த மொழிகளுக்கு ஈடாகத் தமிழ் மொழியை உயர்த்த வேண்டும்.

தமிழ் இலக்கியங்கள் பண்டைய இலக்கியங்களும் சரி, இன்றைய சிறந்த படைப்புகளும் சரி, இதர இந்திய மொழிகளிலும் உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்யவும், இதர மொழிகளின் சிறந்த படைப்புகள் தமிழ் மொழியில் கொண்டு வரவும் வேண்டும். அதற்கு தமிழ் அறிஞர்கள் முயற்சிகள் செய்ய வேண்டும்.

தமிழ் நூல்களும் தமிழ் பத்திரிகைகளும் உலகம் எல்லாம் செல்ல வேண்டும். உலகின் அறிவையெல்லாம் தமிழகத்திற்குக் கொண்டு வர வேண்டும். தமிழகத்தின் அறிவையெல்லாம் உலகம் முழுவதிலும் கொண்டு செல்ல வேண்டும்.

இன்று தமிழகத்தின் தலை சிறந்த மனித ஆற்றல் உலகமெங்கும் சென்றிருக்கிறது. உலகின் பல பல்கலைக் கழகங்களிலும், நிறுவனங்களிலும் தமிழகத்தைச் சேர்ந்த வல்லுனர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய ஆற்றல் திறமை நிபுணத்வம் எல்லாம் உலக மக்கள் அனைவருக்கும் பயன் பட வேண்டும். இது பாரதியின் கனவு. அந்த மகாகவியின் கனவுகள் பலிக்க வேண்டும். செயலுக்கு வர வேண்டும். தமிழர்களின் நிலை உயர வேண்டும்.

## 12. தமிழ்ப் பத்திரிகைகள் (இதழ்கள்)

அச்சு எந்திர வளர்ச்சியும், அச்சுக்கலையின் அபி விருத்தியும் மொழிகளின் உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாகவும் துணையாகவும் இருந்தன என்பதை ஏற்கனவே பார்த்தோம். இந்த வளர்ச்சி காரணமாக உரைநடை நூல்களும் பத்திரிகைகளும் வளர்ச்சி பெற்றன. த்மிழகத்திலும், தமிழ், ஆங்கில மொழி நூல்களும், பத்திரிகைகளும் தமிழ் உரைநடை நூல்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் பாதியில் தொடங்கி இருபதாம் நூற்றாண்டில் பெரிய அளவில் வளர்ச்சியும் அபிவிருத்தியும் பெற்றுள்ளன என்பதையும் அறிவோம்.

பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் பத்திரிகைத் துறையில் பெரிதும் ஈடுபட்டு தமிழ் உரைநடையை வளர்ப்பதில் தனது சீரிய பங்கைச் செலுத்தியுள்ளார்.

பாரதி "சுதேசமித்திரன், இந்தியா, கர்மயோகி, விஜயா, சக்கரவர்த்தினி, தர்மம், சூரியோதயம்" முதலிய இதழ்களில் முக்கிய பணிகளை ஆற்றியுள்ளார்.

மேலும் பல இதழ்களிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். அதன் மூலம் பாரதி அக்காலப் பத்திரிகைத் தொழிலில் நல்ல அனுபவங்களைப் பெற்றிருந்தார். பத்திரிகைத் தொழிலில் உள்ள கஷ்டங்களைப் பற்றி நன்கு அறிந்தவராக இருந்தார். அதன் காரணமாக நூலாசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோரின் சிரமங்கள், அல்லல்கள் பற்றியெல்லாம் பாரதி தனது கட்டுரைகளில் குறிப்பிடுகிறார். அத்துடன் பாரதி பல்வேறு துறைகளைப் பற்றியும் தனது சரளமான உரைநடை மூலம் பல அரிய கருத்துக்களை வெளிப்படுத்தி எழுதியுள்ளார்.

“பத்திரிகாதிபரின் கஷ்டங்கள், அதிகமென்று சொன்னேன். இக்காலத்தில் தமிழ் நூலாசிரியர் படுங்கஷ்டங்களை ஈசனே தீர்த்து வைக்க வேண்டும். உண்மையான கவிதைக்குத் தமிழ் நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலிஷ் பாஷையிலிருந்து கதைகள் மொழி பெயர்க்கப்பட்டுப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறார்கள். அல்லது இங்கிலிஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புது நாவல்கள் எழுதுகிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் லாப மேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் சிலர் தோன்றியிருக்கிறார்கள். இவர்களுடைய தொழிலை அச்சடிப்பார்கள் இல்லை. அச்சிட்டால் வாங்குவாரில்லை. அருமை தெரியாத ஜனங்கள் புதிய வழியில் ஒரு நூலைக் காணும் போது அதில் ரஸம் அனுபவிக்க வழியில்லை. இங்கிலிஷ் படித்த ‘ஜனத்தலைவர்’ காட்டும் வழியையே மற்றவர்கள் பிரமாணமென்று நினைக்கும் படியான நிலைமையில் தேசம் இருக்கிறது. இந்தப் பிரமாணஸ்தர்கள் தமிழ் நூல்களில் புதுமையும், வியப்பும் காணுவது சாத்தியமில்லை என்ற நிச்சயத்துடனிருக்கிறார்கள். ஆகவே நூலாசியர் தமக்கு தெய்வம் காட்டிய தொழிலிலே மேன்மேலும் ஆவலுடன் பாடுபட வழியில்லாமல் வேறு தொழில் செய்யப் போய் விடுகிறார்கள்.

“ஆகையால் இங்கிலிஷ் படித்த தமிழ் மக்கள் முக்கியமாக வக்கீல்களும், பள்ளிக்கூடத்து வாத்தியார்களும் தமது வாக்கிலும் மனதிலும் தமிழரசியைக் கொலுவிருக்கும் படி செய்து வணங்க வேண்டும் என்றும் அதுவே இப்போதுள்ள ஸ்திதியில் தமிழ் வளர்ப்புக்கு மூல ஸாதனமாகுமென்றும் அறிக்கையிட்டுக் கொள்கிறேன்” என்று பாரதி எழுதியுள்ளார்.

தமிழ் உரைநடை வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதை பாரதி வலியுறுத்திக் கூறி வந்துள்ளார். பத்திரிகைகள் என்பது மக்களுடன் நெருக்கமாக உள்ள ஒரு ஊடு சாதனமாகும். பத்திரிகைகளுக்கும் பொது மக்களுக்கும் ஜனத் தலைவர்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும். வக்கீல்கள், ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், டாக்டர்கள், என்ஜினியர்கள், விஞ்ஞானிகள் மற்றும் படித்தவர்கள் கிராமத்தலைவர்கள், மக்களுக்கு சேவை செய்யும் பொது நல ஊழியர்கள், அரசியல் அனுபவம் உள்ளவர்கள் ஆகியோர் எல்லாம் பொது வாழ்க்கையில் அனுபவம் மிக்கவர்கள். அவர்கள் எல்லாம், தங்களைச் சுற்றியுள்ள மக்களின் பிரச்னைகளைப் பற்றி தங்களைச் சுற்றி நிகழும் பலவேறு நிகழ்ச்சிகளைப் பற்றி, மற்றும் அரசியல் விமர்சனம், இலக்கிய விமர்சனம், வாணிபம், பொருளாதாரம், தொழில் விவசாயம் பற்றிய பிரச்னைகள், கல்வி சுகாதாரம், விளையாட்டு, கலை, ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகள், விஞ்ஞானச் செய்திகள் மற்றும் இவ்வாறான சமூக முக்கியத்துவம், சமூக அக்கரை நலன் சம்பந்தமான பல செய்திகளை பத்திரிகைகளுக்கு அனுப்ப வேண்டும். அப்போது பத்திரிகைகள் மக்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டதாக இருக்கும். சமூகப் பொதுவாழ்வில் மக்களுடைய ஈடுபாடு அதிகரிக்கும். இதன் மூலம் மக்களுடைய ஜனநாயகச் செயல்பாடுகள் அதிகரிக்கும் என்பது பாரதியின் கருத்தாகும். இத்தகைய வெகு ஜனத் தொடர்பு மிகுந்த பத்திரிகைகளின் செயல் பாடுகள் மொழியின் உரைநடை வளர்ச்சிக்கு பெருந்துணையாக இருக்கும்.

## 13. தமிழ் நாட்டில் விழிப்புணர்வு

இத்தலைப்பில் பாரதியார் மிகவும் அருமையானதொரு எடுத்துக்காட்டுடன் ஒரு கட்டுரையில் சிறந்த கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார். இராமாயணக் கதையில் கும்பகருணன் ஒரு விசித்திரமான பாத்திரமாகும். நீண்ட உறக்கத்திற்கு எடுத்துக் காட்டாகத் தமிழ் இலக்கியங்களில் கும்ப கருணனைப் பற்றிக் குறிப்பிடுவதுண்டு. அது போல திருமாலின் காட்சிகளில் ஒன்று அறிதுயிலும் அனந்த சயனமுமாகும். இத்தகைய உறக்க நிலை நமது நாட்டு மக்களின் பிரதி பலிப்பாகும். இத்தகைய தூக்கத்திலிருந்து நாட்டு மக்களை விழிப்படையச் செய்வதற்காகத் தான் பாவைப் பாடல்களும் பள்ளியெழுச்சிப் பாடல்களும் நமது இலக்கியங்களில் தோன்றியுள்ளன. பாரதியார் கூட ஆழ்வார்களின் பள்ளியெழுச்சிப் பாடல்களைத் தொடர்ந்து நீண்ட உறக்கத்தில் இருந்த பாரத தேச மக்களை எழுப்புவதற்காக பாரத மாதா திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

பாரதியார் தனது உரைநடையில் கும்பகருணனின் உறக்கத்தை எடுத்துக் காட்டித் தமிழ் நாட்டின் விழிப்புக்கு வழி காட்டுகிறார்.

“கும்பகருணன் தூங்கினானாம் இலங்கையில் சண்டை நடக்கிறது. மூன்று லோகமும் நடுங்குகிறது. “ராம–ராவண யுத்தத்திற்கு ராம ராவண யுத்தமே நிகர்” என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட சண்டையின் அதிர்ச்சியிலே கூடக் கும்பகருணனுடைய தூக்கம் கலையவில்லை. ஆயிரக்கணக்கான ஆடு, மாடு, குதிரைகளின் காலில் கூர்மையான கத்திகளைக் கட்டி அவன் மேலே நடக்கச் சொன்னார்கள். தூக்கம் கலையவில்லை. ஏழெட்டு மேகங்களை

அவன் காதுக்குள்ளே போய் இடி இடிக்கச் சொல்லி இராவணன் கட்டளையிட்டானாம். மேகங்கள் போய் இடித்தனவாம். கும்பகருணனுடைய குறட்டை நிற்கவேயில்லை.

மேற்படி கும்ப கருணனைப் போல சில தேசங்கள் உண்டு. அண்டங்களத்தனையும் இடிந்து விழுந்தாலும் காது கேட்காத செவிடர் வாழும் தேசங்கள் சில உண்டு. அந்த தேசங்களிலே வாசம் செய்வோர் மஹா பாவிகள். மாதுர் துரோகம், பிதுர்துரோகம், சகோதரதுரோகம், தெய்வத்துரோகம், சுதேசதுரோகம் முதலிய பெரிய பாதகங்கள் செய்து சீரழிந்த மானுடர் அப்படிப் பட்ட தேசங்களில் வாழ்கிறார்கள்.

"ஆனால் ஹிந்து தேசம் அப்படி இல்லை. இங்கு தமிழ் நாட்டைப் பற்றி முக்கியமாகப் பேச வந்தோம். தமிழ்நாடு மேற்படி மஹா பாதக ஜாபிதாவைச் சேர்ந்ததன்று அன்று!

"இராமலிங்க சுவாமிகளும், சுதேசமித்திரன், சுப்பிரமணிய அய்யரும் இவர்களைப் போன்ற வேறு சில மகான்களும் தமிழ் நாட்டில் புதிய விழிப்புக்கு ஆதிகர்த்தாக்களாக விளங்கினர். ஹிந்து தர்மத்தின் புதுக் கிளர்ச்சிக்கு விவேகானந்தர் ஆரம்பம் செய்தார். அவரைத் தமிழ் நாடு முதலாவது அங்கீகாரம் செய்து கொண்ட பிறகுதான், வங்கம், மகாராஷ்டிரம் முதலிய ஹிந்து தேசத்து மாகாணங்கள் அவருடைய பெருமையை உணர்ந்தன. விவேகானந்தருடைய எழுச்சி மிக்க ஹிந்து விழிப்புணர்வு உலகத்தையே உலுக்கியது.

"பூமண்டலம் முழுவதிலும் பெரிய விழிப்பொன்று வரபோகிறது. அதற்காதாரமாக ஹிந்துஸ்தானம் கண்ணை விழித்து இருபதாண்டுகள் ஆயின. ஹிந்துஸ்தானத்திற்குள்

தமிழ்நாடு முதலாவது கண் விழித்தது. ஆனால் இன்னும் புத்தி சரியாகத் தெளியாமல் கண்ணை விழிப்பதும் கொட்டாவி விடுவதுமாக இருக்கிறது.''

“ஒரு தேசத்தின் பொது புத்தியை அளந்து பார்க்க வேண்டுமானால் அதற்கு எத்தனையோ அறிகுறிகள் உண்டு. அந்த தேசத்து ராஜாங்க நிலை, தர்ம ஸ்தாபனங்களின் நிலை, கோவில்களின் நிலை முதலிய எத்தனையோ அடையாளங்களால் ஒரு தேசத்தின் பொது ஞானத்தை அளவிடலாம். இவற்றுள்ளே சமாச்சாரப் பத்திரிகைகளையும் ஓர் அடையாளமாகக் கருதத்தகும். ஆனால் ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் நடக்கும் பத்திரிகைகளுடன் தமிழ் நாட்டுப் பத்திரிகையை ஒப்பிட்டுப் பார்த்து இவற்றின் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு “ஆஹா இப்படிப்பட்ட தமிழ் நாடு எங்கே, பிழைக்கப் போகிறது'' என்று எண்ணிப் பாழும் நெஞ்சு உடைந்து போக வேண்டாம். ஏன் என்றால் வர்த்தமானப் பத்திரிகை நாமாக உண்டாக்கிய கருவியன்று. பிறரிடமிருந்து கற்றுக் கொண்ட தந்திரம். சென்ற முப்பது வருஷங்களாகத் தான் தெரிந்து கொண்டிருக்கிறோம். இன்னும் சரியாக முதிர்ச்சியடையவில்லை. தவிரவும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் உதவி கிடையாது. பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் எத்தனைக்கெத்தனை மதிப்புக் கொடுக்கிறார்களோ அத்தனைக்கத்தனை நாட்டில் மதிப்பேறி அதனால் பத்திரிகைகளுக்குத் தகுந்த லாப முண்டாகும். அதிலிருந்து சரியான வித்வான்களின் கூட்டம் யதேஷ்டமாய்ச் சேர்ந்து அந்தத் தொழில் மேன்மையடைய இடமுண்டாகும்.

“தமிழ் நாட்டில் இப்போது நடைபெறும் ராஜாங்கம் தமிழ் பாஷையில் தேர்ச்சியுடையதன்று. தமிழ் பாஷையை முதலாக மதிப்பதன்று. “தமிழ் முழு நாகரிகமுடையதா இல்லையா''

என்பதைப் பற்றியே சந்தேகங்களுடையது. ஆதலால் தமிழ் படிப்பில்லாமலும் தமிழ் மணமில்லாமலும் சந்தோஷமடைந்திருக்கும் இயல்புடையது" என்று பாரதி எழுதுகிறார்.

பாரதி காலத்தில் நவீன அறிவியல் (விஞ்ஞானம்) நூல்களெல்லாம் மிகப் பெரும்பாலும் இந்தியாவில் ஆங்கில மொழிகளிலேயே இருந்தன. வைத்தியம் பொறியியல் முதலிய தொழில் நுட்ப சாத்திரங்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே இருந்தன. அத்துடன் சட்டவியல், பொருளியல், வணிகவியல் முதலிய சமூக அறிவியல் கலைகள் பற்றிய நூல்களும், மேல் படிப்பிற்கான நூல்களும் ஆங்கில மொழியிலேயே இருந்தன. இன்றும் கூட பெரும்பாலும் அந்த நிலை நீடிக்கிறது. தமிழில் அறிவியல் நூல்கள் எழுதப்பட வேண்டும் என்னும் கருத்துக்களை பாரதி தனது கட்டுரைகளில் முன் வைத்துள்ளார். பாரதியாரின் இந்தக் கட்டுரைகள் எல்லாம் அக்காலத்திய தமிழ் உரைநடையின் தரத்தை உயர்த்தியிருக்கிறது. அதன் பிரபலத்தை உண்டாக்கியிருக்கிறது.

"பஞ்ச புதங்களின் இயற்கையைப் பற்றிய ஆராய்ச்சிகளிலே நம்மைக் காட்டிலும் ஐரோப்பியர் முன்னேறி நிற்பது தெரிந்த விஷயம். ஆதலால் ஐரோப்பாவில் வழங்கும் லௌகீக சாஸ்திரங்களைத் தமிழில் எழுத வேண்டும் என்று பல பண்டிதர் மிகவும் ஆவல் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே சில பகுதிகளின் ஆரம்பம் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது. இந்த முயற்சி மேன்மேலும் வளரும். வளர்ந்து தீர வேண்டும். அந்த சாஸ்திரங்களையெல்லாம் ஏக காலத்தில் தமிழில் எழுதி முடிப்பதற்காக ஒரு பண்டித சங்கம் ஏற்படக்கூடும். நமது இராஜாக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் செட்டிகளுக்கும் நல்ல புத்தியுண்டாகித் தமிழில் நவீன சாஸ்திரம் சேர்ப்பதாகிய காரியத்தை அவர்கள் தக்க பண்டிதர்கள் உதவி கொண்டு

விரைவில் நிறை வேற்றி மேன்மை பெறக் கூடும்'' என்று பாரதி தனது உரைநடைக் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

தற்காலத்தில் குறிப்பாக நாடு விடுதலை பெற்ற பின்னர் ஏற்பட்ட வளர்ச்சியில் கல்வி நிலையங்கள் உயர் கல்வி நிலையங்கள் பல்கலைக்கழகங்கள் ஆகியவை எண்ணிக்–கையிலும் தரத்திலும் பலதுறைகளிலும் வளர்ச்சி பெற்றிரு–க்கின்றன. இவைகளில் படித்துப் பட்டம் பெற்றும், ஆராய்ச்சிகள் பல செய்தும் பலவேறு நிறுவனங்களில் பணியாற்றி அனுபவம் பெற்றும் நமது நாட்டில் தமிழ் நாட்டிலும் பல்லாயிரக்கணக்கான அறிஞர்களும், விஞ்ஞானிகளும், நிபுணர்களும் ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறார்கள். மனித வளத்துறையில் பாரதமும் உலக நாடுகளின் முன் வரிசையில் உள்ளது.

இயற்கை அறிவியல், சமூக அறிவியல் நூல்கள், நமது மொழிகளில் அவ்வகையில் தமிழ் மொழியில் வெறும் மொழி பெயர்ப்பு நூல்களாக இல்லாமல் பாரதப் பாரம்பரியம் கொண்ட அறிஞர்கள் சொந்த அனுபவத்திலிருந்து மூலநூல்களாகவே தமிழ் மொழியிலும் இதர இந்திய மொழிகளிலும் எழுதப்பட்டால் ஒளியும் தெளிவும் ஓட்டமும் வளமும் இருக்கும். இதுவே பாரதியின் கனவும் விருப்பமுமாகும்.

## 14. தமிழிசையைப் பற்றி

தமிழ் மொழியை, இயல், இசை, நாடகம் ஆகிய முத் –தமிழாகப் பயின்றனர் அறிஞர் பெருமக்கள். இசையும் கூத்தும், ஆடலும் பாடலும் தமிழ் பண்பில் ஒன்றிணைந்ததாகும்.

பாரதியின் கட்டுரைகளில் தமிழிசையைப் பற்றி சிறந்த கருத்துக்களை வெளியிட்டுத் தனது சரளமான தமிழில் நகைச்சுவை ததும்ப எழுதுகிறார். பாரதியார் நல்ல இசை ஞானம் உள்ளவர். மெட்டு வைத்து ராகம் தாளத்தோடு நன்கு பாடவும் வல்லவர். அவருடைய கவிதைகள் பாடல்கள் பலவற்றிற்கு இராகம், தாளம், ஆகியவற்றையும், பல பாடல்களுக்கு மெட்டுகளையும் குறிப்பிட்டுள்ளதை அறிவோம். அவர் தமிழிசையைப் பற்றிக் குறிப்பிடும் போது "சங்கீத வித்வான்கள் பாடும்போது நவரசங்களும் வெளிப்பட வேண்டும். பாடல்களும் பொருள் தெரிந்து கேட்போரின் உள்ளத்தை ஈர்க்கும் படி பாட வேண்டும் என்று குறிப்பிடுகிறார். தமிழிசைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பது அவருடைய கட்சியாகும்.

"நாட்டிலே சங்கீதத்திற்கு போஷனை செய்யும் ராஜாக்களும் பிரபுக்களும் இல்லை. எங்களுக்கு ஜீவனமே மனக் கஷ்டம் இல்லாமல் இருந்தாலன்றோ ரச ஞானத்தை வளர்த்துக் கொண்டு போகலாம். சில வருஷங்களுக்குள்ளே சில கீர்த்தனங்களை வரப்படுத்திக் கொண்டு ஜீவனத்திற்கு வழி தேட வேண்டிய ஸ்திதி ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்யலாம்? என்று நினைத்து மன முடைந்து போக வேண்டாம்.

இந்த உலகம் முழுவதிலுமே ராஜாக்களையும், பிரபுக்களையும் நம்பி வித்தை பழகும் காலம் போய் விட்டது. பொது ஜனங்களை நம்ப பேண்டும். இனிமேல் கலை

–களுக்கெல்லாம் போஷணையும் ஆதரவும் பொது ஜனங்களிட மிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருசி உண்டாக்கிக் கொடுப்பது வித்வான்களுடைய கடமை. பிறகு நல்ல போஷணை கிடைக்கும்" என்று எழுதியுள்ளார்.

இன்னும் "வித்வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணி புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளின் பழம் பாட்டுக்களை மீண்டும் மீண்டும் சொல்லுதல் நியாயாமில்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும் படி நேரிடும்" என்று குறிப்பிடுகிறார்.

"சங்கீதத்திற்கு சாதகம் அவசியம் என்பதைக் குறித்து நம்மவர் தொண்டையை நேரே பழகுவதில்லை. காட்டு வெளிகளிலே போய் கர்ஜனை செய்ய வேண்டும். நதி தீரங்கள், ஏரிக்கரை, கடற்கரைகளிலே போய்த் தொண்டையைப் பழக்க வேண்டும். சாஸ்திரப்படி அகார சாதனம் செய்யும் பழக்கம் தென்னாட்டில் குறைவு பட்டிருக்கிறது.

"தவிரவும் உள்ளத்திலே வீரம் இருக்க வேண்டும். உள்ளத்திலே சத்து இல்லாதவர்களுக்கு ஒரு தொழிலும் நேரே வராது. கலைகள் நேர்ப்படுவதைப் பற்றிப் பேச வேண்டியது இல்லை. உள்ளத்தில் தைரியம் சந்தோஷம், வலிமை முதலிய சுபலக்ஷணங்கள், தமிழைக் காட்டிலும் வடநாட்டு ஜனங்களிடம் சிறிது அதிகமாகத் தோன்றுகிறது. முன்னெல்லாம் தமிழ் நாட்டிலேதான் இந்த குணங்கள் மிகவும் விசேஷமாக விளங்கின. இப்போது சில வருஷங்களாகக் குறைவு பட்டிருக்கின்றன. இந்தக் குணங்களை நமது ஜனங்கள் எல்லோருமே பயிற்சி செய்து கொள்ள வேண்டும். சங்கீத வித்வான்கள் இவற்றைப்

பழக்கப்படுத்தினால் தான் அவர்கள் கஷ்டத்திலே உவகையும் வீரமும் பிறக்கும். பாட்டிலே கலையுண்டாகும்.

"கன்னியாகுமரி முதல் சென்னை வரை தமிழ் நாட்டில் உள்ள ஜில்லாக்களிலே ஒவ்வொன்றிலும் இக்காலத்திலும் கருவிகளிலும் வாய்ப் பாட்டிலும் புகழ் பெற்ற வித்வான்கள் பலர் இருக்கின்றனர்.

"காலத்தின் சீர் கேட்டாலும், சம்பிரதாய பங்கத்தினாலும், நவரசங்களுக்கும் பாட்டுக்கும் உள்ள தொடர்பை மறந்து விட்ட போதிலும் இவர்களிலே சிலர் (ஆணும், பெண்ணும்) சரஸ்வதி கடாக்ஷத்தினால் தம்மை அறியாமலே அற்புதமான வேலை செய்கிறார்கள். சில சமயங்களில் ஓரிரண்டு ரசங்களைத் தெரிந்தே பாட்டில் இசைக்கிறார்கள். அப்போது இவர்களுடைய பாட்டு அல்லது வாத்தியம் மிகவும் உயர்ந்த நிலையடைகிறது,.

ஆனால் இவர்கள் நான் முன்னிரண்டு பகுதிகளில் குறிப்பிட்ட செய்திகளையும் தயவு செய்து கவனிக்கும் பக்ஷத்தில் தமிழ் நாட்டிற்கு இவர்கள் செய்து வரும் உபகாரம் பல மடங்கு அதிகப்படும் என்பதும், அப்படி அதிகப் பட வேண்டும் என்பதும் என்னுடைய கருத்து. அதைத் தெரிந்து கொண்டேன்" என்று பாரதி தனது உரைநடையில் பேசுகிறார்.

மேலும் பாரதி செம்மொழி இசையோடு சாதாரண மக்கள் பாடும் இசை வடிவங்களைப் பற்றியும் தமிழ் நாட்டின் சிறப்புச் செய்தியாகத் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

"கும்மிப்பாட்டு, பள்ளுப்பாட்டு, கிளிப்பாட்டு, நலங்குப்பாட்டு, பள்ளியறைப்பாட்டு, அம்மானைப்பாட்டு, தாலாட்டுப்பாட்டு" முதலிய பெண்களுடைய பாட்டெல்லாம் மிகவும் இன்பமான வர்ணமெட்டு. தமிழர்களின் தாய், அக்காள், தங்கை, காதலி முதலிய இவர்கள் பாடும் பாட்டு மறக்கக் கூடிய இன்பமா? ஞாபகம் இல்லையா?

"தமிழ்ப் பெண்களின் பாட்டைக் கையெடுத்து வணங்குகிறோம். ஆனால் அதில் ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள் பல இருக்கின்றன" என்று பாரதி குறிப்பிடுகிறார்.

தமிழகத்தின் பாரம் பரியக் கலை வடிவங்களில் கூத்து என்பது ஒரு முக்கியமான, பிரபலமான மக்களுக்கிடையில் செல்வாக்கு பெற்ற கலை வடிவங்களில் ஒன்றாகும். ஆடலும் பாடலும் இணைந்தது கூத்தாகும். இசை, தாளம், அபிநயம் முதலியவற்றின் இணைப்பே கூத்தாகும். அபிநயமே கூத்தின் உயிர் என்று பாரதி குறிப்பிடுகிறார். நாட்டிய சாஸ்திரத்தின் இலக்கணங்கள் பற்றி ரச பண்டாரம்" என்னும் சமஸ்கிருத சாஸ்திரம் விவரித்துக் கூறுவதைப் பற்றி பாரதி குறிப்பிட்டு,

"லோக நடையினாலே சாஸ்திரம் பிறக்கிறது. அந்த சாஸ்திரத்தைப் பயிற்சியினாலே விஸ்தாரப் படுத்துகிறார்கள். ரச திருஷ்டி ஏற்படுவதற்கு இயற்கையே மூலம். ரச வான்களுடைய பழக்கத்தாலும், பக்தி வழிகள் அனுசரிப்பதானாலும் ஒருவன் ரசக் காட்சியை வருவித்துக் கொள்ளலாம்.

"ராகத்து வேஷங்களை ஜயிப்பதானாலே ஒருவர் சித்த சமாதியடைகிறார். அப்போது ஞான திருஷ்டி உண்டாகிறது. அந்த ஞான திருஷ்டியுடையவர்கள் புறப்பயிற்சியில்லாமலே சாத்திரங்களுக்குக் கண்ணாடி போல் விளங்குவார்கள்" என்று பாரதி கூறுகிறார். பாரதியாருடைய இந்த உரைநடைப் பகுதியில் வடமொழிச் சொற்கள் நிறைந்த ஓட்ட நடையைக் காணலாம்.

பாரதி அறிவுக் கூர்மை மிக்கவர். அவர் ஒரு தெளிந்த ஞானி. பத்திரிகையாளர் என்னும் முறையில் சகல துறை ஞானமும் பெற்றவர். அவருடைய மொழிநடை இயல்பானது.

அதில் செயற்கைக் கோணல்கள் எதுவும் இல்லை. அவர் எந்தப் பொருளை எடுத்துக் கொள்கிறாரோ அதற்குரிய சொற்களை இயல்பாகவே கையாளுகிறார். அதனால் அவருடைய உரைநடையில் ஓட்டத்தையும் வேகத்தையும் உண்மையையும் காணலாம்.

தமிழிசையைப் பற்றிய பாரதியாருடைய உரைநடைக் கட்டுரை மிகவும் சிறப்பானது. புதுமையானது. இசைத்துறைக்குப் புதிய வழிகாட்டியாக அமைந்துள்ளது. பாரதியின் இந்தக் கட்டுரை போற்றுதலுக்குரியது.

## 15. பெண் விடுதலை பற்றி

பெண் விடுதலை, மத பேதங்களை நீக்குதல் ஆகியவை பற்றி தமிழ் நாட்டில் ஒரு புதிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது பற்றியும் தமிழகம் முன்பே வழி காட்டி வந்துள்ளது பற்றியும் பாரதியார் தமது கட்டுரை ஒன்றில் எடுத்துக் கூறுகிறார். அதுவும் அவருடைய சிறந்த உரைநடைத் தமிழுக்கு எடுத்துக்காட்டாகும். அது வருமாறு

“இன்று தமிழ் நாட்டில் மாத்திரமேயல்லாது பூமண்டலம் முழுவதிலும் பெண் தாழ்வாகவும், ஆண் மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம். அந்திகளுக்கெல்லாம் கோட்டை. கலியுகத்திற்குப் பிறப்பிடம்.

இந்த விஷயம் தமிழ் நாட்டில் பல புத்திமான்களின் மனதிலே பட்டு பெண் விடுதலைக் கட்சி தமிழ் நாட்டின் கண்ணே பல மடைந்து வருவதை நோக்குமிடத்தே எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியுண்டாகிறது. இந்த விஷயத்தில் தமிழ்நாடு பூமண்டலத்துக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை” என்று குறிப்பிடுகிறார்.

தமிழ்நாட்டில் பெண் விடுதலை இயக்கத்திற்கு பாரதியாரின் கவிதைகளும் கட்டுரைகளும் ஒரு விடிவெள்ளியாகும். ஆணும், பெண்ணும் அனைத்திலும் சமம் என்பது மட்டுமல்ல, பெண்மையை மேன்மைப்படுத்தியே பாரதி பேசுகிறார். அவருடைய பாடல்கள் முழுவதும் சக்திமயமானது. அவர் தமிழில் எழுதிய காவியமும் பாஞ்சாலி சபதமாகும்.

பாரதியாரின் கவிதைப் பகுதியில் பெண் விடுதலை பற்றியது தனிப் பகுதியாகும். உரைடைப் பகுதியிலும் பெண் உரிமை, பெண் விடுதலை பற்றி அவர் கூறியிருப்பது நடையும் கருத்தும் சிறப்புமிக்கது.

## 16. மத பேதங்களைக் குறித்து

மத பேதங்களைக் குறித்து பாரதி மிகவும் சிறப்பான முறையில் தனது கட்டுரைகளில் எடுத்துக் கூறுகிறார். இதில் பாரத தேசம் முக்கியமாகத் தமிழ்நாடு இன்று புதிதாக அன்று நெடுங்காலமாகத் தலைமையொளி வீசி வருதல் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ராமானுஜர் தமிழ் நாட்டில் பிறந்தவர் அன்றோ? ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவதாரம் புரிந்தது தமிழ் நாட்டிலன்றோ? பறையனைக் கடவுளுக்கு நிகரான நாயனாராக்கிக் கோயிலில் வைத்தது தமிழ் நாட்டிலன்றோ? சிதம்பரம் கோயிலுக்குள்ளே நடராஜருக்கு ஒரு சந்நிதி, பெருமாளுக்கு ஒரு சந்நிதி, ஸ்ரீரங்கத்திலே பெருமாளுக்கு ஒரு துலுக்கப் பெண்ணை தேவியாக்கித் துலுக்க நாச்சியார் என்று பெயர் கூறி வணங்குகிறார்கள். "எம்மதமும் சம்மதம்"என்கிறார் ராமலிங்க ஸ்வாமி.

"உலகத்தில் உள்ள மத பேதங்களையெல்லாம் வேருடன் களைந்து சர்வ ஸமய ஸமரசக் கொள்கையை நிலை நாட்ட வேண்டுமானால் அதற்குத் தமிழ் நாடே சரியான களம். உலகம் முழுவதும் மதவிரோதங்களில்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உஜ்ஜீவிக்கும் படி செய்யவல்ல மஹான்கள் இப்போது தமிழ் நாட்டில் தோன்றியிருக்கிறார்கள். அது பற்றியே பூமண்டலத்தில் புதிய விழிப்பு தமிழகத்தில் தொடங்குமென்கிறோம்" என்று பாரதியார் எழுதுகிறார். இதில் சரளமான உரைநடையினைக் காண்கிறோம்.

பாரதி தனது கவிதைகளில் கூறுவதைப் போலவே தனது உரை நடையிலும் சில வலுவான கருத்துக்களை உறுதிப் படக் கூறுகிறார். அதிலுள்ள சொற்கள் கூர்மையானவை. சிந்தனையைத் தூண்டுபவை. நேரடியானவை., எடுத்துக் –காட்டாக,

"இந்தக் காலத்தில் பல பொய்கள் இடறிப் போகின்றன. பல பழைய கொள்கைகள் தவிடு பொடியாகிச் சிதறுகின்றன. பல அநீதிகள் உடை படுகின்றன. பல அநியாயக்காரர்கள் படு பாதாளத்தில் விழுகிறார்கள்.

இந்தக் காலத்தில் யாருக்கும் பயந்து நாம் நமக்குத் தோன்றுகின்ற உண்மைகளை மறைக்கக் கூடாது. பத்திரிகைகள் தான் இப்போது உண்மையைச் சொல்ல சரியான கருவி. பத்திராதிபர்கள் இந்தக் காலத்தில் உண்மைக்குப் புகலிடமாக விளங்குகிறார்கள்.

நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நோக்கம் நிறை வேறாது. அச்சத்தினால் மனுஷ்ய ஆத்மா வெளிக்கு அடிமை போல நடித்தாலும் உள்ளே துரோகத்தை வைத்துக் கொண்டிருக்கும்.

"அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது." என்று பாரதி தனது உரைநடையில் எழுதுகிறார்.

## 17. கதை வடிவம்

பாரதியாரின் உரைநடையில் கதையும் ஒரு வடிவமாகும். கதை என்பது பெரும்பாலும் கற்பனைக் கதையேயாகும். பாரதியார் ரயில்வே ஸ்தானம் என்னும் தலைப்பில் ஒரு சிறிய கதை எழுதியுள்ளார். அதன் தொடக்கமாக அவர் எழுதியுள்ள கதை வரிகள், அவருடைய உரைநடைக்கு மற்றொரு சிறந்த எடுத்துக் காட்டாகும். அவருடைய ரயில்வே ஸ்தானத்தின் வர்ணனை மிகவும் அற்புதமாகவும் கருத்துச் செரிவுடனும், கிண்டலும், நகைச்சுவையும் கொண்டதாகவும் அமைந்திருக்கிறது. பாரதியாரின் உரைநடை அவருடைய கவிதைகளைப் போலவே எந்தக் கருத்திலும் தாக்குதல் தன்மையே அதிகரித்துக் காணப்படுகிறது. நல்லனவற்றைப் பாராட்டியும், அல்லனவற்றைத் தாக்கியும் அவருடைய கருத்துக்கள் கூர்மையாகவே அமைந்துள்ளன. அவருடைய வார்த்தைகள் சுரீர் என்று அம்புபோல் வேகமாகச் செல்கின்றன. வைத்த குறி தவறு –வதில்லை. கருத்துக்கள் துல்லியமாகவும் தெளிவாகவும் அமைந்துள்ளன. தமிழுக்கு சரளமான உரைநடை புதிது என்றாலும், அது பாரதியின் வரிகளில் மெருகுடன் மிளிர்கிறது. ஒரு புதிய அடிப்படையை, வழிமுறையை வகுத்து விட்டிருக்கிறது. உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்னும் பாரதியின் வாக்கு சத்திய வாக்காகும்.

இப்போது அவருடைய கதையில் உள்ள உரைநடையைக் காண்போம்.

“வஸந்த காலம். காலை நேரம் தென்காசி ஸ்டேஷன். இது பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்தது. இதற்கு மேற்கேயுள்ள அடுத்த ஸ்டேஷன் செங்கோட்டை. இது திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தது. தெற்கே இரண்டு மைல் தூரத்தில் கீர்த்தி பெற்ற

குற்றாலத்தருவி விழுகிறது. பக்கமெல்லாம் மலையகிரிச்சாரல் கொஞ்சம் மேற்கே போனால் செங்கோட்டை ஸ்டேஷன் முதல் திருவனந்தபுரம் வரை பாதையிலே பத்து ஸ்டேஷன் மட்டும். இரண்டு பக்கங்களிலும் செங்குத்தான மலைகளும் ஆழமான பள்ளங்களும், மலையை உடைத்து ரயில் வண்டி ஊடுருவி செல்லும் பொருட்டாக ஏற்படுத்தப் பட்ட நீண்ட மலைப்புழைகளும் இரு பாரிசத்திலும் இயற்கையாய்ப் பச்சை உடுத்தி சால மிகப் பெருஞ் செழிப்புடனே களி கொண்டு நிற்கும் பல வகைப்பட்ட வனக்காட்சிகளும் ஒரு முறை பார்த்தால் பிறகு எக்காலத்திலும் மறக்க முடியாதன.

இந்தத் தென்காசி ஸ்டெஷன் வெளிப்புறத்தில் காலை நேரத்திலே திருநெல்வேலிப்பக்கம் கிழக்கே போகும் ரயில் வரப்போகிற சமயத்தில் சுமார் நூறு பிரயாணிகள் வந்து கூடியிருந்தார்கள்.

“இவர்களிலே சிலர் பிராமண வைதீகர் நீர்க்காவி அழுக்கு நிறமாக ஏறிப்போன மிகப் பழைய வெள்ளைத்துணி உடுத்தி உடல் வேர்க்க உட்கார்ந்து கொண்டு இன்ன ஊரில் இன்ன தேதி இன்னாருக்கு சீமந்தம் என்ற விஷயங்களைப் பற்றிச் சம்பாஷணை செய்து கொண்டிருக்கிறார்கள்.

“பிராமண விதவைகள் சிலர் ஒரு புறத்திலே இருந்து தமக்குள் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். சுமங்கலிப் பிராமணத்திகள் ஒரு பக்கத்தில் தலை குனிந்து நின்று கொண்டு போவோர் வருவோரைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சில உத்தியோகஸ்தர், தலைப்பாகை கோட்டு, கெடிகாரச் சங்கிலி சகிதமாக உலாவுகிறார்கள். சில போலீஸ்காரர்கள் சக்கர வர்த்திகளைப் போல தலை நிமிர்ந்து

நடக்கிறார்கள். சில முகமதிய ஸ்திரீகள் முட்டாக்கு போட்டு தலையையும் முகத்தையும் மூடிக் கொண்டு திசைக் –கொருத்தியாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுருட்டு, பீடி, பொடிப்பட்டை, முறுக்கு, தேங்குழல், சுசியன், காப்பி முதலியன வியாபாரம் செய்யும் ஓரிரண்டு பிராமணரும் சூத்திரரும் பகற் கொள்ளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதாவது காசு பெறாத சாமான்களுக்கு மும்மடங்கு நான்மடங்கு விலை வைத்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள்" என்று பாரதி எழுதுகிறார். நல்ல அற்புதமான வேடிக்கையான, சிறப்புமிக்க வர்ணனையான உரைநடை. யாரும் சுலபமாகப் படித்துப் புரிந்து கொள்ளும் படியான எளிய நடையிலான உரைநடை.

கதை வர்ணனையில் பாரதி மிகவும் நுட்பமாக, இலை மறைவு காயாக, பல அரசியல், அன்னிய ஆட்சி, சமூக சீர்திருத்தம், மூடப் பழக்க வழக்கங்கள், வியாபாரக் கொள்ளை, இயற்கைக் காட்சி, சிறந்த இயற்கை வர்ணனை முதலிய வற்றை மிகவும் சாதாரணமான சரளமான எளிய நடையில் பாரதியாரின் உரைநடை மிகவும் சிறப்பாகவும் முன்னுதாரணமாகவும் அமைந்திருக்கிறது. பாரதியாருடைய அனுபவ ஞானம் இதில் பளிச்சிடுகிறது.

## 18. தேசியக் கல்வி பற்றி

தமிழ் நாட்டில் தேசியக் கல்வி என்பதான ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையைப் பிரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலிஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால் அது "தேசியம்"என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியும் என்பதில் ஐயமில்லை. தேச பாஷையே பிரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை. இதை மறந்து விடக் கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ் நாட்டிலிருந்து பரிபூரண சகாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால் இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற் கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதை தம்பட்டம் செய்து அறிவிக்க வேண்டும். இங்ஙனம் தமிழ் பிரதானம் என்று நான் சொல்லுவதால் டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் கக்ஷியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி, ஆர்ய பாஷா விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது. தமிழ் நாட்டிலே தமிழ் சிறந்திடுக. பாரத தேசம் முழுதிலும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க. இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூரணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வட மொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்குக. எனினும் தமிழ் நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக" என்று பாரதி எழுதியிருக்கிறார்.

*"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்*
*வாழிய பாரத மணித்திரு நாடு!"*

என்பது பாரதியின் உறுதிப் பாடான கொள்கையாகும்.

வேத கால சரித்திரம், புராண கால சரித்திரங்கள், பௌத்த கால சரித்திரம், ராஜ புதானத்தின் சரித்திரம் இவை மிகவும்

சிரத்தையுடன் கற்பிக்க வேண்டும். பள்ளிக் கூடம் ஏற்படுத்தப் போகிற கிராமம் அல்லது பட்டணம் எந்த மகாணத்தில் அல்லது எந்த ராஷ்டிரத்தில் இருக்கிறதோ அந்த மகாணத்தின் சரித்திரம் விசேஷமாகப் பயிற்றுவிக்கப் பட வேண்டும். (இங்கு நான் மாகாணம் அல்லது ராஷ்டிரம் என வகுத்திருப்பது சென்னை மாகாணம் அல்லது பம்பாய் மாகாணம் முதலிய தற்காலப் பகுதிகளைக் குறிப்பதன்று. பாஷைப் பிரிவுகளுக்கு இசைந்தவாறு வகுக்கப்படும் தமிழ்நாடு, தெலுங்குநாடு, மலையாளநாடு முதலிய இயற்கைப் பகுதிகளைக் குறிப்பது). இந்த சரித்திரங்களில் மஹா கீர்த்தி பெற்று விளங்கும் பருவங்களை உபாத்தியாயர்கள் மிகவும் உற்சாகத்துடனும், ஆவேசத்துடனும், பக்தி சிரத்தையுடனும் கற்பிக்கும் படி ஏற்பாடு செய்ய வேண்டும். அதி பால்ய பிராயத்தில் மனதில் பதிக்கப்படும் சித்திரங்களே எக்காலமும் நீடித்து நிற்கும் இயல்புடையன. ஆதலால் பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆரம்ப வகுப்பிலேயே நம்முடைய புராதன சரித்திரத்தின் அற்புதமான பகுதிகளை யூட்டி, அசோகன், விக்கிரமாதித்தன், ராமன், லக்ஷ்மணன், தர்மபுத்திரன், அர்ஜுனன் இவர்களிடமிருந்த சிறந்த குணங்களையும் அவற்றால் அவர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கும் ஏற்பட்ட மஹிமைகளையும் பிள்ளைகளின் மனதில் பதியும் படி செய்வது அந்த பிள்ளைகளின் இயல்பைச் சீர்திருத்தி மேன்மைப் படுத்துவதற்கு நல்ல சாதனமாகும்.

தேச பாஷையின் மூலமாகவே இந்தச் சரித்திரப் படிப்பு மட்டுமேயன்றி மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கப் பட வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். தேச பாஷையின் மூலமாகப் பயிற்றப் படாத கல்விக்கு தேசியக் கல்வி என்ற பெயர் சொல்லுதல் சிறிதளவும் பொருந்தாது போய்விடுமன்றோ?" என்று பாரதி கூறுகிறார்.

"தமிழ் நாட்டில் தேசியக் கல்வி கற்பிக்க வேண்டுமானால் அதற்குத் தமிழே தனிக் கருவியாக ஏற்படுத்த வேண்டு -மென்பதைச் சொல்லவும் வேண்டுமா?" என்பதைப் பாரதி மிகவும் தெளிவாகவே குறிப்பிடுகிறார்.

"தமிழ் நாட்டு ஸ்திரீகளையும் சேர்த்துக் கொண்டு அவர்களுடைய யோசனைகளைத் தழுவி நடத்தாவிடின் அக்கல்வி சுதேசியம் ஆக மாட்டாது. தமிழ்க் கல்விக்கும் தமிழ்க் கலைகளுக்கும் தொழில்களுக்கும் தமிழ் ஸ்திரீகளே விளக்குகளாவர். தமிழ்க் கோவில், தமிழரசு, தமிழ்க் கவிதை, தமிழ்த் தொழில் முதலியவற்றுக்கெல்லாம் துணையாகவும் தூண்டுதலாகவும் நிற்பது தமிழ் மாதரன்றோ" என்று சுதேசிக் கல்வியைப் பரப்புவதில் மாதர்களின் பங்கு பற்றி பாரதி மிகவும் சிறப்பாகவே குறிப்பிடுகிறார்.

பாரதியாருடைய உரைநடை அவர் கையாளும் பொருளுக்கேற்றவாறும் கூட சில சமயம் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. எடுத்துக் காட்டாகக் கீழ்க்கண்ட பகுதியைக் குறிப்பிடலாம்.

"அநாவசியமான தண்டத்திற்கெல்லாம் தமிழர் பணத்தை வாரி இறைக்கிறார்கள். "கான்பரன்ஸ்"என்றும்"மீட்டிங்"என்றும் கூட்டங்கள் கூடி விடிய விடிய வார்த்தைகள் சொல்லுகிறார்கள். கிராமங்கள் தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போடுவதற்கு யாதொரு வழியும் செய்யாமல் இருக்கிறார்களே! படிப்பு இல்லாத ஜனங்கள் மிருகங்களுக்கு சமானமென்று திருவள்ளுவர் பச்சைத் தமிழிலே சொல்லுகிறார். நமக்குள் எத்தனையோ புத்திமான்கள் இருந்தும் நம்மில் முக்கால் பங்குக்கு மேலே மிருகங்களாக இருக்கும் அவமானத்தைத் தீர்க்க ஒரு வழி பிறக்கவில்லையே? ஏன்? எதனாலே? காரணந்தான் என்ன? என்று குறிப்பிடுகிறார்.

"பணம், பொதுக்கல்வி, விடுதலை மூன்றும் இல்லாவிட்டால் அந்த நாட்டில் மானமேது?" என்று பாரதி மிகவும் தெளிவாகவே குறிப்பிடுகிறார்.

"நமது பூர்வீகர், சயன்ஸ் தேர்ச்சியிலே நிகரில்லாது விளங்கினார்கள். அந்தக் காலத்து லௌகீக சாஸ்திரம், நமக்குத் தெரிந்த மாதிரி வேறு யாருக்கும் தெரியாது. இந்தக் காலத்து சங்கதி தான் நமக்குக் கொஞ்சம் இழுப்பு" என்று குறிப்பிடுகிறார்.

"எவனும் உடம்பை உழைப்பினாலும் அசைவினாலும் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். மனதை உற்சாக நிலையில் வைத்துக் கொண்டால் உடம்பிலே தீவிரம் உண்டாகும். உடம்பை தீவிரமாகச் செய்து கொண்டால் மனது உத்சாகத்துடன் இருக்கும். மனத்தளர்ச்சிக்கு இடம் கொடுக்கலாகாது. கவலை மனிதனை அரித்துக் கொன்று விடும். பயத்தை உள்ளே வளர்ப்பவன் பாம்பை வளர்க்கிறான்.

"எனவே மன உறுதி, சந்தோஷம் உலகை நடத்தும் சக்தி, நமக்கு நன்மை செய்யும் என்ற நம்பிக்கை, சரீர உழைப்பு, முதலிய நற் குணங்களைக் கைக்கொண்டு ஊக்கத்தை வழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும்.

"உடம்பிலே நோயில்லாமல் வலிமையுடன் இங்கே நூறாண்டு வாழலாம்" என்று ஒரு சிறந்த கருத்தை உறுதியாகவும் மகிழ்ச்சியுடனும் தனது உரைநடைப் பகுதியில் பாரதி கூறுகிறார்.

ஆங்கிலக் கல்வியில் உள்ள கேடுகள், தீமைகள், சுதேசியக் கல்வி அல்லது தேசியக் கல்வியின் அவசியம் ஆகியவற்றில் பாரதி தனது கவிதைகளிலும் உரைநடைக் கட்டுரைகளிலும் தனது கருத்துகளை மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துக் கூறுகிறார்.

## 19. பாரதி தன்னுடைய கவிதைகளுக்கு எழுதியுள்ள சில முன்னுரைகள்

பாரதி தான் எழுதியுள்ள கவிதைகளுக்கும், கவிதைத் தொகுப்பு வெளியீடுகளுக்கும் முன்னுரைகள் எழுதியுள்ளார். அவை அவருடைய உரைநடைக்கும் எடுத்துக் காட்டாக உள்ளன. அவைகளில் சிலவற்றை இங்கே காணலாம்.

பொய்யோ மெய்யோ என்னும் தலைப்பில் பாரதி எழுதியுள்ள பாடலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரை அல்லது விளக்கவுரை அல்லது காரண உரையை இங்கு காண்க.

“எல்லா சாஸ்திரங்களும் ஏறக்குறைய உண்மைதான். ஆனால் எல்லாருக்கும் எப்போதும் ஒரே சாஸ்திரம் ஒத்து வராது. சின்ன திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்.

“ஒரு செல்வர், கிழவனார் ஒரு வேளை ஆகாரம் செய்து கொண்டு லௌகீக விஷயங்களைத் தான் கவனியாமல் பிள்ளைகள் கையிலே கொடுத்து விட்டு, நியம நிஷ்டைகள், ஜப தபங்களுடன் சுந்தர காண்டத்தையும், கடோ பநிஷதையும் பாராயணம் செய்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதே மேலான வழியென்ற கொள்கை இந்தக் கிழவனாருக்கு சரிப் பட்டு வரும்.

“ஒரு 16 வயது ஏழைப்பிள்ளை தகப்பனில்லை. வீட்டிலே தாயாருக்கும் தங்கைக்கும் தனக்குமாக எங்கேனும் போய் நாலு பணம் கொண்டு வந்தால்தான் அன்றன்று அடுப்பு மூட்டலாம். இவன் மேற்படி சுந்தரகாண்ட வழியைப் போய் பிடித்தால் நியாயமாகுமா?

"இந்த உலகமே பொய்" என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கி வருகிறது. ஸந்நியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கட்டும். இதைப்பற்றி இந்த நிமிஷம் எனக்கு வருத்த மில்லை. குடும்பத்தில் இருப்போருக்கு இந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவச்சொல்லன்றோ? நமக்குத் தந்தை வைத்து விட்டுப்போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலைபோல் நிற்கிறாள் மனைவி. நமது துயரத்திற்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள். நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள். நமது குழந்தைகளை வளர்த்தாள். அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குல தெய்வம் பொய்யா?

வீடுகட்டிக் குடித்தனம் பண்ணுவோருக்கு மேற்படி சாஸ்திரம் பயன்படாது. நமக்கு இவ்வுலகில் வேண்டியது நீண்ட வயது, நோயில்லாமை, அறிவு, செல்வம் என்ற நான்கும் இவற்றைத் தரும்படி தத்தம் குல தெய்வங்களை மன்றாடிக் கேட்க வேண்டும். எல்லா தெய்வங்களும் ஒன்று. அறம் பொருள் இன்பம் என்ற மூன்றிலும் தெய்வ ஒளி காண வேண்டும். தெய்வத்தின் ஒளியைக் கண்டால் நான்காம் நிலையாகிய வீடு தானே கிடைக்கும்" என்று பாரதியார் தனது வலுவான தத்துவ ஞானக் கருத்தை இவ்வுரைநடை வாசகங்கள் மூலம் வெளிப் படுத்தியுள்ளார்.

"ஸ்வதேச கீதங்கள்" என்னும் நூலிலுள்ள சமர்ப்பணமும் முகவுரையும்

இனிய நிலவின் ஒளியால் விழுங்கப்பட்டு உலகம் அவாங்க மன கோசரமாகிய ஸௌந்தர்யத்தைப் பெற்றிருக்கும் சமயத்தில் ஒவ்வொரு கவிஞனுடைய உள்ளமும் தன்னையறியாத

குதூஹலமடைகின்றது. சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரகிருதி மட்டுமேயன்றி அசதேனப் பிரகிருதியும், புதிய ஜீவனையும் உல்சாகத்தையும் பெற்றுத் திகழ்கிறது. இவற்றினையொப்பவே நாட்டில் ஓர் புதிய ஆதர்சம் – ஓர் கிளர்ச்சி – ஓர் தர்மம் – ஓர் மார்க்கம் தோன்றுமேயானால் மேன் மக்களின் நெஞ்சமனைத்தும் இரவியை நோக்கித் திரும்புகின்றன.

சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில் சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய "தேசபக்தி" என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின, நல்லோருடைய குணங்களிலே குறைவுடைய –வனாகிய யானும் தேவியினது கிருபையால், அப்புதிய சுடரிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருடம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்.

"நான் எதிர் பார்த்திராத வண்ணமாக மெய்த் தொண்டர்கள் பலர் "இம்மலர்கள் மிக நல்லன" என்று பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். மாதாவும் அதனை அங்கீகாரம் செய்து கொண்டாள். இதனால் துணிவு மிகுதியுறப் பெற்றோனாகி மறுபடியும் தாயின் பாத மலர்க்கு சில புதிய மலர்களைக் கொணர்ந்திருக்கிறேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்குமென்றே நினைக்கிறேன். "குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்"என்பது வேதமாதலின் என்று பொருள் பொதிந்த ஒரு முகவுரையை பாரதி எழுதியுள்ளார். இதில் அவருடைய தெளிவான உரைநடை வடிவத்தைக் காணலாம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையில் அதன் இயக்கத்திலும் அமைப்பு

நிலையிலும் நிதானக்கட்சியார் என்றும் தீவிரக் கட்சியார் என்றும் பிளவு ஏற்பட்டது. நிதானக் கட்சியாருக்கும் (மிதவாதப்பிரிவு) பெரோஷ் ஷா மேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே முதலியோர் தலைமையாக இருந்தார்கள்.

தமிழகத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா, பாரதியார் ஆகியோர் தீவிரவாதப் பிரிவுக்கும் திலகர் தலைமைக்கும் ஆதரவு கொடுத்து வந்தார்கள். பாரதி திலகரை ஆதரித்து, மேத்தா திலகருக்கு புத்தி சொல்வதாகவும், கற்பித்துப் பாடல்கள் பாடியுள்ளார். அப்பாடல்களில் நந்தனார் சிதம்பரம் செல்வதற்குப் பிடிவாதமாக இருந்ததாகவும், சேரியிலிருந்த நிதானக் கூட்டத்தார், நந்தனார் செயலை ஆட்சேபித்ததாகவும் கற்பித்து அதை ஒப்பிட்டுப் பாடியுள்ள பாடல்களுக்கு பாரதி விளக்கவுரையாக ஒரு சிறிய முன்னுரை எழுதியுள்ளார். அவை வருமாறு:

“மேத்தா திலகருக்குச் சொல்வதாக,” ஓய்! திலகரே நம்ம ஜாதிக்கடுக்குமோ? செய்வது சரியோ? சொல்லும் என்னும் தொடர் பாடலுக்கு முன்னுரையாக:

“சிதம்பரப் பதவியாகிய முக்தியிலே நந்தனார் அடங்காத தாகம் கொண்டிருந்தார். அது அவரை அடிமை கொண்டிருந்த ஆண்டைக்கு மனமில்லை. அவர் நந்தனாரைப் பலவித இம்சைகளுக்கு உட்படுத்தினார். அதுவுமின்றிச் சேரியிலிருந்த நிதானப் பறையர்கள் பலர் நந்தனார் சிதம்பரத்தைப் பற்றி நினைக்கலாகாதென்றும், போதனை செய்தார்கள். அந்த நிதானஸ்தர்களிலே ஒருவர் பாடிய பாட்டின் கருத்தையுடைய வர்ண மெட்டையும் தழுவிப் பின்வரும் பாடல் செய்யப் பட்டிருக்கிறது” என்று பாரதி குறிப்பிட்டுள்ளார்.

“நிதானக் கட்சியார் கூட்டம்” என்னும் தலைப்பிலான பாடலுக்கு முன்னுரையாக பாரதி எழுதியுள்ளது :

"நந்தனார் சரித்திரத்திலே சேரிப் பறையர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து நந்தனாரையும் அவரது கட்சியாரையும் பழிக்கிறார்கள். சேரியிலே மாட்டிறைச்சியுண்டு புலை வாழ்வு வாழ்ந்து கொண்டு ஆண்டைப் பார்ப்பானுக்கு அடிமை செய்வதே சுவர்க்க மென்றறியாமல் சிதம்பரப் பயித்தியம் கொண்டலையும் நந்தனாராலும், அவர்களுடைய சீடர்களாலும், பெரிய கேடுகள் விளையக் கூடுமென்று வருத்தம் கொண்டு "நாம் என்ன செய்வோம் புலையரே இந்தப் பூமியில் இல்லாத புதுமையைக் கண்டோம்" என்று யோசிக்கிறார்கள். அந்தப் பாட்டின் கருத்தையும் வர்ணமெட்டையும் தழுவிப் பின்வரும் பாடல் எழுதப்பட்டிருக்கிறது. மேத்தா, கோகலே முதலிய நிதானஸ்தர்கள் நமது தேச விமோசனமென்னுஞ் சிதம்பரத்தை எண்ணி ஆசை கொண்டு பரவச நிலையிலிருக்குந் திலக முனிவராலும், அவரது கட்சியாராலும் நாட்டிற்குக் கெடுதி விளையுமென்று பேசும் விஷயங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன என்று பாரதியார் கூறியுள்ளார்.

"ஸ்வசரிதை" என்னும் பாடல் தொகுப்பின் முகவுரையில் பாரதி பின்வருமாறு எழுதியிருக்கிறார் :

"இச்சிறிய செய்யுள் - நூல் விநோதார்த்தமாக எழுதப் பட்டது. ஒரு சில பாட்டுக்கள் இன்பமளிக்கக் கூடியவானாலும் பதர் மிகுதியாகக் கலந்திருக்கக் கூடும். இதன் இயல்பு தன் கூற்றெனப்படும்: அதாவது கதாநாயகன் தன் சரிதையைத் தான் நேராகவே சொல்லும் நடை. இக்காவிய முறை நவீனமானது. இஃது தமிழ் அறிந்த நூலோர்கள் அங்கீகரிக்கத் தக்கதுதானா என்று பார்த்திடும் பொருட்டுச் சிறிய நூல் ஒன்றை முதலில் பதிப்பிடுகிறேன். இதனைப் பதம் பார்த்து மேலோர் நன்றென்பாராயின் இவ்வழியிலே வேறு பல வெளியாக்குவேன்.

அனுபவக் குறையினாலும் ஆற்றல் குறைவினாலும் நேரும் பிழைகளைப் பொருத்தருள் செய்க'' என்று குறிப்பிடுகிறார்.

பாரதி கூறும் இந்தக் கருத்துக்கள் இலக்கியத்தில் ஒரு புதிய கருத்தாகும். இக்கருத்தின் உரைநடையாக இம்முகவுரை அமைந்திருக்கிறது.

"பாஞ்சாலி சபதம்'' என்னும் காவியத்திற்கு பாரதி எழுதியுள்ள முகவுரை வருமாறு :-

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும் படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும்.

"காரியம் மிகப் பெரியது. எனது திறமை சிறிது. ஆசையால் இதை எழுதி வெளியிடுகிறேன். பிறருக்கு ஆதர்சமாக அல்ல, வழிகாட்டியாக.

இந்நூலிடையே திருதராஷ்டிரனை உயர்ந்த குணங் –களுடையவனாகவும் சூதில் விருப்பமில்லாத வனாகவும் துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும் காட்டியிருக்கிறேன். அவனும் மகனைப் போலவே துர்க்குணங்களுடையவன் என்று கருதுவோருமுளர். எனது சித்திரம் வியாச பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக இந்நூலை வியாச பாரதத்தின் மொழி பெயர்ப்பென்றே கருதி விடலாம். அதாவது 'கற்பனை'

திருஷ்டாந்தங்களில் எனது சொந்த சரக்கு அதிகமில்லை. தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி.

தமிழ் ஜாதிக்கு புதிய வாழ்வு தர வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாளாதலின் இதன் நடை நம்மவர்க்குப் பிரியந்தருவதாகும் என்றே நம்புகிறேன். ஓம், வந்தே மாதரம்'' என்று பாரதியார் எழுதி முடிந்துள்ளார்.

பாரதியாரின் கவிதைகளில் மிகவும் முக்கியமான ஒரு பகுதி ''பாஞ்சாலி சபதம்'' என்னும் சிறு காவியமாகும். இது அளவில் தான் பாடல் எண்ணிக்கையில் தான் சிறுகாவியம். இந்தக் காவியம் மகாபாரதக் கதையில் வரும் உள்ளத்தை உருக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். மகாபாரதப் பெருங்கதை பாரத மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் ஆழப் பதிந்துள்ள ஒரு பெருங் கதையாகும். மகாபாரதமும், இராமாயணமும் எத்தனை தடவை படித்தாலும் எத்தனை தடவை கேட்டாலும் நமது நாட்டு மக்களுக்கு அலுப்புத் தட்டுவதில்லை. இவ்விரு இதிகாசங்களும் பாரத நாட்டு மக்களின் பண்பாட்டையும், சிந்தனைப் போக்குகளையும், பாரம்பரியங்களையும் உருவாக்கி அவைகளுக்கு ஒரு அடிப் படையையும் உருவாக்கியிருக்கிறது. பாரதியார் ''பாஞ்சாலி சபதம்'' என்னும் நிகழ்ச்சியை தனது காவியத்திற்குக் கருவாக எடுத்துக் கொண்டிருக்கிறார். அதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு என்பதை அறிவோம்.

பாஞ்சாலியின் சபதம் பாரதப் போரிலும் போர்க்களத்திலும் நிறைவேற்றப் படுகிறது. சீதா பிராட்டியின் துயரம் இலங்கைப் போர் மூலம் தீர்க்கப்படுகிறது. பாரத நாட்டின் விடுதலைக்கான சூளுரை அதன் விடுதலை வேள்வியிலும், போராட்டக் களத்திலும்

நிறைவேற்றப் படுகிறது. பாரதியார் தனது பாஞ்சாலி சபதம் என்னும் காவியத்தில் பல புதிய அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

நமது நாட்டில் தோன்றியுள்ள நூல்கள் பலவற்றிற்கும் உரை நூல்கள் எழுதப்படுவதும் விளக்க நூல்கள் வருவதும் நமது இலக்கிய மரபும் வரலாறுமாகும். பாரதி தனது பாஞ்சாலி சபதம் காவியத்தில் வரும் சில வரிகளுக்கு விளக்கமும் விரிவுரையும் அவரே எழுதியுள்ளார். அவையும் பாரதியாரின் சிறந்த உரைநடையாகவும் அமைந்துள்ளது.

பாரதியின் பாஞ்சாலி சபதம் காவியத்தில், "சிந்தையில் அறமுண்டாம், – எனிற், சேர்ந்திடுங் கலி செயுமறமுமுண்டாம்" என்னும் பாடல் வரிகள் வருகின்றன. அதற்கான விளக்கமாக பாரதி ஒரு முக்கியமான கருத்தை முன் வைக்கிறார். ஒரு முக்கியமான வரலாற்று விவரத்தையும் முன் வைக்கிறார்.

மக்களுடைய சிந்தனையில் அறநெறிகள் வெளிப் –படுகின்றன. அதே சமயத்தில் கலியும் சேர்ந்திருப்பதால் மறமும் வெளிப் படுகிறது. அறத்திற்கு மாறான கொடும் செயல்களும் சேர்ந்து வெளிப்படுகின்றன. இது பற்றிய விளக்கமாக பாரதி

"ஒரு சங்கத்தின் ஒரு ஜாதியின் – ஒரு தேசத்தின் – அறிவு மழுங்காதிருக்கும் வரை அதற்கு நாச மேற்படாது. பாரத தேசத்தில் முற்காலத்திலே பாரத ஜாதி முழுமையின் அறிவுக்குப் பொருப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல்களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பார்களானால் மற்ற குலத்தவரும் நெறி தவறியிருக்க மாட்டார்கள். மகா பாரதப் போர் நடந்திராது பாரத தேசத்தில் பெரியதொரு க்ஷத்திரிய நாசமும்

கலியும் வந்திருக்க மாட்டாது. ஒரு தேசத்திற்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத்தேசத்திலுள்ள பிராமணர்களே பொருப் –பாளிகளென மேலே குறித்திருப்பதை விளக்கும் பொருட்டு மஹாபாரதப் போர் நடக்கு முன்பாகவே முதற்படப்பாவம் பிராமணர்களுக்குள் புகுந்ததென்பதை நூல் தெரிவிக்கிறது'' என்று பாரதி எடுத்துக் கூறுகிறார்.

பாஞ்சாலி சபதத்தின் 69,70–ம் பாட்டுகளின் கருத்தாகக் கீழ்க் கண்டவாறு பாரதி விளக்கம் கூறுகிறார்.

''சகுனி சொல்கிறான், நமக்கு ஏற்கனவே அளவிறந்த செல்வம் இருக்கும் போது இன்னும் அதிக செல்வத்தை ஏன் விரும்ப வேண்டும்? இருப்பதை வைத்துப் பாதுகாத்தால் போதாதா? என்று ஒரு வேளை நீ நினைக்கிறாய் போலும். ஆனால் இவ்வித நினைப்பு நின் போன்ற ஆரிய மன்னர்களுக்குத் தகாது. ஏனென்றால் நித்தம் ஏராளமான செல்வத்தைத் தானம் முதலியவற்றால் ஒரு பக்கத்திலே செலவிட்டு மற்றொரு பக்கத்திலே போர் முதலியவற்றால் மிக்க பொருள் சேகரித்துக் கொண்டிருப்பதாகிய இரட்டைத் தொழில் ஆரிய மன்னர்களால் அனுசரிக்கப் படுவது. இருப்பதை மூடிமறைக்க விரும்புவோன் அரசனல்லன். கிழச்செட்டி எது போலெனில் கங்கை நதி நாள்தோறும் அளவில்லாத ஜலத்தைக் கடலிலே கொண்டு போய்க் கொட்டுகிறது. என்ன வீண் செலவு. இந்த வீண் செலவு செய்யாவிட்டால் ஜீவனின்றி அழுகிப் போய்விடும். மலை மீதிருந்து அதற்கு ஓயாத ஊற்று வரவு இருக்கிறது. அதனை உலகுக்கெல்லாம் வழங்குவது இன்றிக் கடலிலும் கொண்டு பொழிகிறது. ஆம்'மேலே' செல்வரிடமுள்ள பொருளைக் கவர்ந்து 'கீழே' ஸாமானிய ஜனங்களுக்குப் பல வழிகளிலே பயன் படுத்த வேண்டும். அப்போதுதான் ராஜா, கங்கை நதியைப் போல ஜீவ

நதியாக இருக்கலாம். கங்கை நதியைப் போல ஆரியர்களும்,

*"செல்வம் வளர்வதற்கே – தொழில்*
*ஆயிரம் நித்தம் புதியன – கண்டு*
*வாரிப் பழம் பொருளெற்றுவார்"*

இங்ஙனமில்லாது சத்த மற்ற நெடுங்காட்டில், மலையடிக் கீழ்ப் பட்ட இருட் குகையில் நீரை வைத்துப் பாசியால் மூடிக் காக்கும் சுனைகளைப் போன்ற ஒழுக்கம் ஆரியர்களால் வெறுத்துதற்குரியது என்று பாரதி தனது விளக்கவுரையில் கூறுகிறார். எந்த ஒரு நாட்டிலும் செல்வமும், அறிவும் பெருகிக் கொண்டேயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது நாடல்ல. அதில் அரசனுடைய கடமையும், அரசாங்கத்தினுடைய கடமையும் முதன்மையானது. இந்த ஒழுக்கம் அனைவருக்கும் பொருந்தும். ஒவ்வொரு தனி நபருக்கும் பொருந்தும்.

பாஞ்சாலி சபதம் காவியத்தில் கவிஞர் மாலை வருணனை கூறுகிறார். கவிஞரின் உள்ளத்திலிருந்து எழும் அற்புதமான இயற்கை வருணனை. அவை சிறப்பு மிக்க கவிதை வரிகளாகும். அதைப்பற்றி பாரதியார் ஒரு தனியான கட்டுரையும் எழுதியுள்ளார். அது ஒரு அற்புதமான உரைநடை இலக்கியமாக அமைந்திருக்கிறது.

*"சீரடியாற் பழ வேத முனிவர்*
*போற்றும் செழுஞ் சோதி*
*சீர்களும் அடிகளும் இயைந்த*
*மந்திரங்களால் முன்னைய*
*வேதரிஷிகள் போற்றிய ஞாயிறு."*

இங்கு சூரியாஸ்தமன வர்ணனை கூறப்படுகிறது. இப்பாடல்களின் கருத்து நன்கு விளங்கும் பொருட்டு நமது "கர்மயோகி"ப் பத்திரிகையிலே இவ்விஷயத்தைப் பற்றி எழுதியுள்ள வியாசமொன்றை இங்கு தருகிறோம்

## ஸூர்யாஸ்தமனம்

உலகத்தில் எங்கு பார்த்தாலும் நிறைந்து கிடக்கும் லாவண்யங்களைத் தமிழர்கள் கவனிப்பது கிடையாது. சனிக்கிழமை சாயங்காலந்தோறும் குளக்கரைகளில் போய் கருடன் பார்ப்பதற்கென்றால் நம்மவர்கள் கூட்டம் கூட்டமாக ஓடுகிறார்கள். ஸூர்யாஸ்தமன காலத்தில் வானத்திலே தோன்றும் அதிசயங்களைப் பார்க்க ஒருவர் கூட போவதில்லை. அப்போது வானத்திலே இந்திர ஜாலம் மகேந்திர ஜாலங்களெல்லாம் நடக்கின்றன. இந்த க்ஷணம் இருந்த தோற்றம் அடுத்த க்ஷண –மிருக்காது.

உலகத்திலுள்ள திரவிய முழுவதையும் செலவிட்டு வர்ணக் காட்சிகள் ஏற்படுத்திப் பார்ப்போமானாலும் அது ஸூர்யாஸ்தமன காலத்தில் வானத்திலே நாம் பொருட் செலவில்லாமல் பார்க்கக் கூடிய காட்சிகளிலே கோடியில் ஒரு பங்கு கூட காணாது. வான வேடிக்கைகள் பார்க்க ஒரு செல்வன் பதினாயிரக்கணக்கான திரவியம் செலவிடுகிறான். அவனது செல்வத்தினாலன்றோ இந்தக் காட்சி சுலபமாகிறதென்று அதைப் பார்த்து ஆயிரம் ஏழைகள் பெரு மூச்செறிகிறார்கள். ஸஹோதரா, ஸூர்யாஸ் –தமனத்தின் விநோதங்களைச் சென்று பார். ஸூரியனைப் பார்த்தால் கண்ணுக்குத் கெடுதியென்று குருடர் நம்பிக்கையைப் பொருட்டாக்காதே. ஸூரியனைப் பார்ப்பது பாவம் என்று மூடர் சாஸ்திரத்தைக் கண் கொண்டு பார்க்காதே.

"நமது நாட்டில் வேத காலத்து ரிஷிகள் பிரிகிருதியின் ஸௌந்திர்யங்களைக்கண்டு மோஹித்துப் பரமானந்தம் எய்தியவர்களாய் பல அதிசயமான பாடல்கள் பாடியிருக்கிறார்கள். பிரகிருதியின் அழகை கண்டு பரவச மெய்திக் காளிதாசன் முதலிய பெருங்கவிகள் அற்புதக் கவிதைகள் செய்திருக்கின்றனர். இக்காலத்தில்தான் இந்தத் துரதிருஷ்ட நிலை கொண்ட நாட்டில் வானம் பார்த்தறியாத குருடர்களெல்லாம் கவிகள் என்று சொல்லி வெளி வருகிறார்கள்.

ஸூர்யாஸ்தமனத்தின் அற்புத ஸௌந்திர்யங்களை எழுதிப் பிறர் மனதில் படும்படி செய்வது சாத்தியமில்லை. நேரிலே கொண்டு காட்டினாலும் பலருக்கு ஆரம்பத்திலே கண் கூசுவதுதான் அர்த்தமாகுமேயல்லாமல் விஷயம் தெரியாது. ஸஹோதரா நீயாகவே போய்ப் பல தினம் அடுத்தடுத்துப் பார்க்க வேண்டும். பிறகு தான் உனக்கு அந்த தெய்வக்காட்சி சிறிது சிறிதாக விளங்கும். ஸூர்யோதயத்திலேயும், ஸூர்யாஸ் –தமனத்திலும் வானத்தில் நடக்கும் இந்திர ஜாலக் காட்சியில் க்ஷணம் தோறும் புதிய புதிய விநோதங்கள் மாத்திரமேயன்றி இன்னுமொரு விசேஷமுண்டு. நேற்றிருந்தது போல் நாளையிராது. தினந்தோறும் வெவ்வேறு வாய்ப்புகள், வியப்புகள், வெவ்வேறு உலகங்கள், வெவ்வேறு மஹிமைகள், வெவ்வேறு கனவுகள், வெவ்வேறு ஆனந்தங்கள், வெவ்வேறு அநிர்வசனீயங்கள்.

சில தினங்களின் முன்பு ஓர் மாலைப் பொழுதில் நான் கண்ட அதிசயங்களை ஒருவாறு இங்கு குறிப்பிடுகிறேன், அடிவானத்தில் ஸூரிய கோளம் தக தகவென்று சுழன்று கொண்டிருந்தது. இருபது கோடி மின்னல்களை எடுத்து ஒரு சக்கரமாக வார்த்துச் சுழற்றுவது போலிருந்தது. ஆரம்பத்திலேதான் கண் கூசும். சிறிது நேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தால்,

பிறகு கண் கூச்சம் தீர்ந்து போய் விடும். இரண்டு வட்டத்தகடுகள் ஒன்றின் மேலொன்று சுழலும். கீழேயிருப்பது சுத்தமான மின்வட்டம். மேலே மரகத வட்டம். பச்சை வர்ணம் அற்புதமான பசுமை.

"பச்சைத் தகடு பின்புறத்திலிருக்கும் மின் தகட்டை முழுதும் மறைத்துக் கொண்டிருக்கும். ஆயினும் இடையிடையே பின்னுள்ள வட்டத்தின் வயிரக்கிரணங்கள் கண் மீது பாயும்.

"பார் ஸூர்யனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பெட்டெரிவது போலத் தோன்றுகிறது. ஆஹா, என்ன வர்ணங்கள் எத்தனை வித வடிவங்கள் எத்தனை ஆயிரவிதமான கலப்புகள். அக்கினிக் குழம்பு தங்கம் காய்ச்சி விட்ட ஓடைகள். எரிகின்ற தங்கத் தீவுகள்.

"நீல ஏரிகள். கரும் பூதங்கள், எத்தனை வகை நீலம், எத்தனை விதச் செம்மை, எத்தனை வகைப் பசுமை, எத்தனை வகைக் கருமை, நீல ஏரியின் மீது மிதக்கும் தங்கத் தோணிகள் எரிகின்ற தங்க ஜரிகைக்கரை போட்ட கரிய சிகரங்கள். தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல். எங்கு பார்த்தாலும் ஒளித்திரள். வர்ணக் களஞ்சியம், போ போ என்னால் அதை வர்ணிக்க முடியாது"என்று பாரதியின் தமிழ் உள்ளம் பாரத உள்ளம், கவியுள்ளம், கலையுள்ளம், கவிதை உள்ளம், இலக்கிய உள்ளம், இயற்கை உள்ளம், இன்ப உள்ளம், மனித உள்ளம் தனது தமிழ் உரைநடை மொழியில் விவரித்துக் கூறுகிறது. காலைக் கதிரவனின் அழகிய தோற்றமும், மாலைக் கதிரவனின் பேரழகு மிக்க மறைவின் காட்சியும், கவிஞனைக் கவர்ந்திருக்கிறது. அந்தக் காட்சியை பாரதி வர்ணித்திருப்பது தனி அழகு.

பாஞ்சாலி சபதம் பாட்டு 175, வரிகள் 6,7 பற்றிய விளக்கத்தில் பாரதி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"நம்மவர் காத்திருக்கும் பழய வழக்கை மாத்திரம் மறந்து விட்டாய். க்ஷத்திரியர்களுக்குள்ளேயிருக்கும் புராதன சம்பிரதாய மொன்றை மாத்திரம் நீ மறந்து விட்டாய் என்று சகுனி சொல்கிறான். வழக்கு வழக்கம், பூர்வாசாரம், 'மாமூல்' அந்த பூர்வாசாரம் இன்னதென்பது பின்னே எட்டாம் வரியில் கூறப் படுகிறது. "மன்னர் வல்லினுக்கழைத்திடில் மறுப்பதுண்டோ?" என ஒரு அரசனை மற்றொருவன் "என்னுடன் சூதாட வா" என வலிந்தழைக்கும் போது 'மாட்டேன்' என்று சொல்லலாகாது என்பது கருத்து. க்ஷத்திரியன் நஷ்டங்களுக்குத் துணிந்திருக்க வேண்டுமென்று நல்ல கொள்கையால் விளைந்த கெட்ட வழக்கங்களில் இதுவொன்று. அறிவுடையவர்கள் கூடப் பூர்வாச்சாரம் என்ற காரணத்தால் தீய வழக்கங்களை அனுசரித்தல் பாரத தேசத்திற்கு ஏற்பட்ட சாபம், இப்போது தான் நீங்கி வருகிறது" என்று பாரதி குறிப்பிட்டு மேலும் தொடர்ந்து எழுதுகிறார்.

பாட்டு 178 – 181 வரையிலான பாட்டு வரிகளிலே இப்பூர்வாசாரங்களில், ஆராய்ச்சியிலில்லாது, பக்தி செலுத்து –வோரின் மடமை காட்டப்படுகிறது. பழமையிலே பெரும்பகுதி உயர்வு சான்றது தான் பாரத தேசத்தினராகிய நம்மவரின் நடைகள் அறிவும் அறனும் பொதிந்தனவாகும். ஆயினும் இழிந்த அமானுஷிக நடைகள் சில இவற்றோடு கலந்துள்ளன.

"எனது தந்தை க்ஷய ரோகம் வந்து இறந்து போனார் எனக்கும் க்ஷய நோய் வந்திருக்கிறது. எங்கள் பாட்டனுக்கும் இந்த நோய் உண்டு. ஆதலால் இந்த நோய் தீர்ப்பதற்கு நான் மருந்து தின்ன மாட்டேன்"என்று ஒரு மனிதன் சொல்லுவானானால் அவன் எவ்வளவு பெரிய மூடன்? லோக க்ஷேமத்திற்கும் லோகாபிவிருத்திக்கும், இந்த மாமூல் பக்தி எத்தனை பெரிய இடையூறு என்பதை நம்மவர் இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை" என்று பாரதி தனது உரைநடையில் கூறுகிறார்.

பாரதியின் தமிழ் உரைநடை பற்றிய இந்த எடுத்துக் காட்டுகளும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியவைகளாகும். தனது உள்ளத்தில் எழும் கருத்துகளைச் சரளமாக உரைநடையிலும் எடுத்துக் கூறுவதில் பாரதி நமக்குச் சிறந்த வழி காட்டியாக உள்ளார். பாரதி காலத்தில் இருந்த பேச்சு மொழியை இந்த அவருடைய உரைநடை பிரதிபலிக்கிறது.

மொழி நடையிலும், கருத்தமைவுகளிலும் பாரதியின் தெளிவான சிந்தனை இந்த உரைநடைப் பகுதியில் தென்படுகிறது. ஒவ்வொன்றும் அந்தந்த தலைப்பிற்கேற்ப தனித்தன்மையோடு கருத்துக்களுடன் அமைந்திருக்கின்றன. இந்தக் கருத்துகள் பாரதியின் கவியுள்ளத்திலிருந்தும், தேச பக்தியிலிருந்தும், தெய்வ பக்தியிலிருந்தும், அனுபவங்களிலிருந்தும் உணர்வு பூர்வமாகப் பாரதப் பண்பாட்டு தளத்திலிருந்து எழுந்தவைகளாக அமைந்துள்ளன. இந்த உரை நடைப் பகுதிகளும் அவைகளின் மொழி நடையும் சிறந்த கருத்துக்களும் மக்களிடம் விரிவாகச் செல்ல வேண்டும்.

## 20. பாரதியின் பகவத் கீதை தமிழாக்கம்

தமிழில், கம்பன், கவிச்சக்கரவர்த்தி கம்பன், திருவள்ளுவர், தெய்வப்புலவர் வள்ளுவப் பேராசான், இளங்கோவடிகள், பெரும்பபுலவர் இளங்கோவடிகளார், சுப்ரமணிய பாரதி மகாகவி பாரதியார் என்று புகழ் பெற்றவர்கள். இந்தப் பெரும் புலவர்கள் எல்லாம் உலகப் பெருங்கவிகளின் வரிசையில் உயர்ந்துள்ளவர்கள். இவர்களைக் கண்டு, இவர்களைக் கேட்டு தமிழர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டும். இந்தியர்கள் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும். இந்த மகாகவிகளின் படைப்புகள் எல்லாம் பாரத சம்பத்தாகும். பாரதத்தின் பெரும் செல்வங்களாகும்.

பாரதப் பாரம்பரியத்தின் வழியிலான பேரிதிகாசத்தைத் தமிழில் பெருங்காவியமாகப் படைத்த கம்பன், பாரதக் கலாச் சாரத்தின் சிந்தனை வழியில் எழுந்த புருஷார்த்தங்களை அறம் பொருள் இன்பத்தை உலகப் பொது மறையாக உருவாக்கித் தந்த வள்ளுவப் பேராசான், கோவலன் என்னும் சிறப்பு மிக்க கலாரசிகனையும் இசையிலும் நாட்டியத்திலும் ஆடல்களிலும் பாடல்களிலும் பண்ணிலும், கூத்திலும், நிகரற்ற கலையரசி மாதவியையும் மனிதப் பிறவி எடுத்து தெய்வ வடிவத்திற்கு உயர்ந்த வீரப்பெண்மணி, கற்பின் பெருவடிவம் கண்ணகியையும், இமயம் வரை சென்றுயர்ந்த மூவேந்தர்களையும் படைத்த பெரும் புலவன் சேரன் தம்பி சிலம்புச் செல்வன், இளங்கோவடிகள், பாரதத்தை வையத் தலைமை வென்றெடுக்க வழி காட்டிய மகாகவி பாரதி ஆகிய பெரும் செல்வங்களை பாரத நாட்டிற்கும் உலகிற்கும் அளித்து தமிழகம் பெருமை பெற்றிருக்கிறது.

தமிழகம் தந்த தலை சிறந்த மகான்களின் வரிசையில் பாரதி பிறந்தான். அவன் ஒரு சித்தன். அவன் ஒரு மகாகவி. தேசியத்தையும், தெய்விகத்தையும் இணைத்துப் பாடிய பெருங்

கவிஞன். பாரதி கவிஞன் மட்டுமல்ல. அவன்தன் காலத்திய சிறந்த எழுத்தாளன், சிறந்த கட்டுரையாளன், சிறந்த கதையாசிரியன், சிறந்த பத்திரிகையாளன், சிறந்த உரையாசிரியன், சிறந்த உரைநடை ஆசிரியன், சிறந்த மனிதாபிமானி, சிறந்த புரட்சிகர ஜனநாயகப் பெரும் புலவன், சிறந்த பண்புமிக்க அரசியல் வாதி, சிறந்த தமிழன், சிறந்த பாரதன், சிறந்த மனிதன், நாற் –பதாண்டு பிராயம், கூட எட்டாத முன்பு பாரதத்தை உலகத்தின் தலைவனாக தனது ஒப்புயர்வற்ற கவிதைகள் மூலம் உயர்த்த முயன்றவன்.

பாரதி தனது உரைநடைத் தமிழ் மூலம் தமிழ் மொழியின் உரைநடைக்கு ஒரு புதிய அடிப்படையை அமைத்தான். பாரதி தனது சிறந்த தமிழ் உரைநடை மூலம் தமிழனுக்கு உணர்ச்சியூட்டி இருக்கிறான்.

"தமிழா, தெய்வத்தை நம்பு, பயப்படாதே! உனக்கு நல்ல காலம் வருகிறது. உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள்.

"தமிழா! கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார்.

"தமிழா! பயப்படாதே, ஊர் தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போட்டு உலகத்து சாத்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய். ஒளி, சக்தி, வலிமை, வீரியம், கவிதை, அழகு, மகிழ்ச்சி முதலிய நலன்களெல்லாம் உன்னைச் சார்கின்றன. கலைவாணி உனக்குத் துணையாக இருக்கிறாள், கல்வியும், கலைகளும் உனக்கு வந்து சேரும். மகாலக்ஷிமி உனக்குத் துணையிருக்கிறாள். உலகத்துச் செல்வங்கள் எல்லாம் உனக்கு வந்து சேரும். உனது நாடு செல்வம் கொழிக்கும் நாடாகப்

பெருகும். பராசக்தி உனக்குத் துணையாக இருக்கிறாள். தமிழா! பயப்படாதே! வீரமும், புகழும் வீடும் உனக்கு வந்து சேரும் பயப்படாதே!

மனித முயற்சிகள் அனைத்திலும் ஈடுபட்டு நீ முன்னேறு வாயாக! என்றெல்லாம் தமிழனுக்கு உணர்வும் ஊக்கமும் ஊட்டிய மகாகவிஞன் பாரதியல்லவா?

பாரதி தனது தமிழ் உரைநடையில் கதை, கட்டுரைகள், பத்திரிகைச் செய்திகள் எழுதினான். அவைகளில் பல புதிய கருத்துகளை முன் வைத்தான்.

பாரதி எந்தப் பொருளைத் தொட்டாலும் அதில் புதுமையைப் புகுத்தினான். பாரதி தனது கவிதைகளைப் போலவே உரைநடையிலும் பல புதிய கருத்துக்களையும் எடுத்துக் கூறியுள்ளார்.

பாரதி பெருங்கவிஞன் என்று பெயரும், புகழும், பாராட்டுகளும் பெற்றுள்ளான். புரட்சிகர, ஜனநாயக் பெரும் புலவனாக நாட்டிலும், நாட்டு மக்களிடமும் பெயரும் புகழும் பெற்றிருக்கிறார். தமிழகத்தில் மட்டுமல்லாமல் மும்பாய், டில்லி, கொல்கத்தா, பெங்களூர், ஐதராபாத் முதலிய இந்தியப் பெரு நகரங்கள் பலவற்றிலும் பாரதிக்கு சங்கங்கள் அமைந்து பாரதியின் புகழும் தமிழின் புகழும் பரவிக் கொண்டிருக்கிறது. அவருடைய கவிதைகள் பிரபலமடைந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் அவருடைய கவிதைகள் பிரபலமடைந்துள்ள அளவிற்கு அவருடைய கட்டுரைகளும், கதைகளும் பிரபலமாகப் பரவியுள்ளன என்று கூற முடியவில்லை. இன்னும் அவருடைய கட்டுரைகளும், கதைகளும் கூறப்படும் அளவுக்குக் கூட அவருடைய பகவத் கீதை தமிழாக்கமும், அந்தத் தமிழாக்க நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையும் பிரபலமாகி உள்ளது

என்று கூற முடியவில்லை. பாரதியின் கவிதைகளைப் போலவே அவருடைய சிறந்த கட்டுரைகளையும், கதைகளையும் அவைகளில் பொதிந்துள்ள ஆழ்ந்த கருத்துகளையும், கருத்தமைவுகளையும் பாரத நாட்டின் இதர மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடப் பட வேண்டும். அதற்கு அறிஞர்கள் பலரும் தனி முயற்சிகள் மேற் கொள்ள வேண்டும். காசியில் பாரதிக்கு ஒரு நினைவுச் சின்னமும், மணி மண்டபமும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். காசி பல்கலைக் கழகத்தில் பாரதிக்கு ஒரு துறையை அமைக்க வேண்டும்.

பாரதியின் பகவத்கீதை தமிழாக்கம் ஒரு அற்புதமான படைப்பாகும். அவர் தன்னுடைய பகவத்கீதை தமிழாக்க நூலுக்கு ஒரு மிக அற்புதமான முன்னுரை எழுதியுள்ளார். அந்த முன்னுரை பாரதியின் உரைநடைக்கு மணி முடியாகும். அந்த முன்னுரை பாரதியின் ஒரு தனியான சிறப்பு மிக்க இலக்கியப் படைப்பாகவே அமைந்துள்ளது. அந்த முன்னுரை பதிமூன்று பகுதிகளாக எழுதப் பட்டிருக்கிறது. அதிலுள்ள பாரதியின் தமிழ் உரைநடை மொழிச் சிறப்பைக் காண்பதும், கண்டறிவதும் நமது கடமையாகும். அந்த உரைநடையிலும், பாரதியின் இயல்பான தமிழ் மொழிச் சிறப்பையும் கருத்துச் செழுமையையும் நடை வேகத்தையும், பாரதப் பண்பாட்டு உணர்வையும் காணலாம். இந்தத் தமிழ் இலக்கியச் சிறப்பு மிக்க முன்னுரையின் சில பகுதிகளை இங்கு காணலாம்.

## முன்னுரையின் 1–ம் பகுதியில்

அறிவுத் தெளிவைத் தவற விடாதே! பின் ஓயாமல் தொழில் செய்து கொண்டிரு. நீ எது செய்தாலும் அது நல்லதாகவே முடியும். நீ சும்மா இருந்தாலும் அப்போது உன்மனம் தனக்குத்தான் ஏதேனும் நன்மை செய்து கொண்டேயிருக்கும்.

உடம்பினால் செய்யப்படும் தொழில் மாத்திரமே தொழில் அன்று. மனத்தினால் செய்யப்படும் தொழிலும் தொழிலேயாம். ஜபம் தொழில் இல்லையா? படிப்பு தொழில் இல்லையா? மனனம் தொழில் இல்லையா? சாஸ்திரங்கள் எல்லாம், கவிதைகள் எல்லாம், நாடகங்கள் எல்லாம், சட்டங்கள் எல்லாம், வேதங்களெல்லாம், புராணங்கள் எல்லாம், கதைகளெல்லாம், காவியங்களெல்லாம் தொழில்கள் அல்லவா? இவையெல்லாம் உடம்பாற் செய்வதன்றி மனத்தாற் செய்யப் படுவன அன்றோ? எனவே, "அறிவுத் தெளிவைக் கலங்க விடாதே" என்று பாரதி கூறுகிறார்.

## முன்னுரையின் 2–ம் பகுதியில்

"எல்லா துயரங்களும் எல்லா அச்சங்களும், எல்லாக் கவலைகளும் நீங்கி நிற்கும் நிலையே முக்தி. அதனை எய்த வேண்டுமென்ற விருப்பம் உனக்கு உண்டாயின் நீ அதற்குரிய முயற்சி செய். இல்லாவிட்டால் துன்பங்களிலே கிடந்து ஓயாமல் உழன்று கொண்டிரு. உன்னை யார் தடுக்கிறார்கள்? ஆனால் நீ எவ்விதச் செய்கை செய்த போதிலும் அது உன்னுடைய செய்கையில்லை. கடவுளுடைய செய்கை என்பதை அறிந்து கொண்டு செய். அதனால் உனக்கு நன்மை விளையும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. "*ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்*" என்பது ஸநாதன தர்மத்தின் சித்தாந்தம். எல்லாம் கடவுள் மயம். எல்லாத் தோற்றங்களும், எல்லா வடிவங்களும் எல்லா உருவங்களும், எல்லாக் காட்சிகளும், எல்லா கோலங்களும், எல்லா நிலைமைகளும், எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும், எல்லா சக்திகளும், எல்லா நிகழ்ச்சிகளும், எல்லாச் செயல்களும், எல்லாம் ஈசன் மயம், (ஆதலால் எல்லாம் ஒன்றுக்கொன்று சமானம் – ஈசாவாஸ்யம் இதம் சர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்" என்று ஈசாவாஸ் யோபநிஷத் சொல்கிறது. அதாவது "இவ்வுலகத்தில்

நிகழ்வது யாதாயினும் அது கடவுள் மயமானது" என்று பொருள்படும் என்று குறிப்பிடுகிறார்.

## முன்னுரையின் 3–ம் பகுதியில்

"எல்லாச் செயல்களையும், கடவுளுக்கென்று சமர்ப்பித்து விட்டுப் பற்றுதல் நீங்கி எவன் தொழில் செய்கிறானோ அவனைப் பாவம் தீண்டுவதில்லை. தாமரை இலை மீது நீர் போல (கீதை 5–ம் அத்தியாயம் 10–ம் சுலோகம்) சால நல்ல செய்தியன்றோ! மானுடர்கள் இஃது உங்களுக்கு? பாவத்தைச் செய்யாமல் இருக்கும் வழி தெரியாமல் தவிக்கும் மானுடரே! உங்களுக்கு இந்த சுலோகத்தில் நல்வழி காட்டியிருக்கிறார் கடவுள். ஈசனைக் கருதி, அவன் செயலென்றும், அவன் பொருட்டாகச் செய்யப் படுவதென்றும் நன்கு தெளிவெய்தி நீங்கள் எத்தொழிலைச் செய்யப் புகுந்தாலும் அதில் பாவம் ஒட்டாது. தாமரை இலைமீது நீர் தங்காமல் நழுவி ஓடி விடுவது போல உங்கள் மதியைப் பாவம் கவர்ந்து நிற்கும் வலியற்றதாய் உங்களை விட்டு நழுவியோடிப் போய் விடும் என்று குறிப்பிடுகிறார்.

## முன்னுரை 4–ம் பகுதியில்

"எனவே கண்ணபிரான் மனிதருக்குள் ஜாதி வேற்றுமையும் அறிவு வேற்றுமையும் பார்க்கக் கூடாதென்பதுமட்டுமேயன்றி எல்லா உயிர்களுக்குள்ளேயும் எவ்வித வேற்றுமையும் பாராதிருத்தலே ஞானிகளுக்கு லக்ஷணம் என்று சொல்லுகிறார்.

"எல்லாம் கடவுள் மயம் அன்றோ? எவ்வுயிரிலும் விஷ்ணு தானே நிரம்பியிருக்கிறார். சர்வமிதம் பிரஹமம் பாம்பும் நாராயணன், நரியும் நாராயணன், பார்ப்பானும் கடவுளின் ரூபம், பறையனும் கடவுளின் ரூபம். இப்படியிருக்க ஒரு ஜந்து மற்றொரு

ஐந்துவை எக்காரணம் பற்றியும் தாழ்வாக நினைத்தல் அஞ்ஞானத்திற்கு லட்சணம். அவ்விதமான ஏற்றதாழ்வு பற்றிய நினைப்புக்களுடையோர் எக்காலத்தும் துக்கங்களிலிருந்து நிவிர்த்தியடைய மாட்டார். வேற்றுமையுள்ள இடத்தில் பயமுண்டு, ஆபத்துண்டு, மரணமுண்டு, எல்லா வேற்றுமைகளும் நீக்கி நிற்பதே ஞானம், அதுவே முக்திக்கு வழி'' என்று குறிப்பிடுகிறார்.

முன்னுரையின் ஐந்தாம் பகுதியில்

"இங்கு தொழில் செய்யும் படி தூண்டியிருப்பது முக்கியமன்று. அதனை என்ன நிலையிலிருந்து என்ன மாதிரியாகச் செய்ய வேண்டுமென்று பகவான் காட்டியிருப்பதே மிக மிக முக்கியமாகக் கொள்ளத்தக்கது.

"பற்று நீக்கித் தொழில் செய், பற்று நீக்கி, பற்று நீக்கி, பற்று நீக்கி, பற்று நீக்கி இதுதான் முக்கியமான பாடம். தொழில்தான் நீ செய்து தீர வேண்டியதாயிற்றே! நீ விரும்பினாலும் விரும்பா விடினும் இயற்கை உன்னை வற்புறுத்தித் தொழிலில் மூட்டுவதாயிற்றே! எனவே அதை மீட்டு மீட்டுச் சொல்வது கீதையின் முக்கிய நோக்கமன்று. தொழிலின் வலைகளில் மாட்டிக் கொள்ளாதே. அவற்றால் இடர்ப்படாதே, அவற்றால் பந்தப்படாதே, வேதனைப் படாதே. இதுதான் முக்கிய உபதேசம். எல்லாவிதமான பற்றுக்களையும் களைந்து விட்டு மனச் சோர்வுக்கும், கவலைக்கும், கலக்கத்துக்கும், பயத்துக்கும் இவையனைத்திலுங் கொடியதாகிய ஐயத்திற்கும் இடம் கொடாதிரு. "ஸம் சயாத்மா விநச்யதி—ஐயமுற்றோன் அழிவான்'' என்று கண்ணபிரான் சொல்லுகிறார்'' என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

முன்னுரையின் 6–ம் பகுதியில்

"இனி இன்பத்தையும், துன்பத்தையும் ஒன்றாகக் கருதிடல் அவசியமென்கையில் அப்போது கடவுளை நம்புவதெதன் பொருட்டு? கடவுள் நம்மை அச்சந்தீர்த்துக் காப்பார் என்று எதிர் பார்ப்பது எதன் பொருட்டு? நமக்குத் தீங்கு நேர்ந்தாலும், நன்மை நேர்ந்தாலும் வாழ்வு நேர்ந்தாலும், மரணம் நேர்ந்தாலும் எல்லாம் கடவுள் செயல். ஆகையினாலே நாம் எல்லாவற்றையும் சமமாகக் கருத வேண்டும் என்று பகவத் கீதை சொல்லுகையில் நமக்குக் கடவுளின் துணை எதன் பொருட்டு? நம்மைக் கற்றூணுடன் கட்டியாரேனும் கடலுள் வீழ்த்தினால் நாம் அதுவும் கடவுள் செயலென்று கருதி அப்படியே மூழ்கி இறந்து விடுதல் பொருந்துமன்றி அப்போது நமச்சிவாய, நமச்சிவாய என்று கூவி நம்மைக் காத்துக் கொள்ள ஏன் முயல வேண்டும்? என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அந்த ஆக்ஷேபம் தவறானது. யாங்ஙனமெனில் சொல்லுகிறேன். முந்திய கர்மங்களால் நமக்கு விளையும் நன்மை தீமைகளைச் சமமாகக் கருதி நாம் மனச் சஞ்சலத்தை விட்டுக் கடவுளை நம்பினால் அப்போது கடவுள் நம்மைச் சில வலிய சோதனைகளுக்கு உட்படுத்துகிறார். அந்தச் சோதனைகளில் நாம் மனம் சோர்ந்து கடவுளிடம் நம்பிக்கை இழந்து விடாமல் இருப்போமாயின் அப்போது நமக்குள் ஈசனே வந்து குடி புகுகிறான். அப்போது நமக்குத் துன்பங்களே நேர்வதில்லை. ஆபத்துக்கள் நம்மை அணுகா. மரணம் நம்மை அணுகாது. எல்லா விதமான ஐயுறவுகளும் கவலைகளும் துயரங்களும் தாமாகவே நம்மை விட்டு நழுவி விடுகின்றன. இந்த உலகத்திலேயே, நாம் விண்ணவரின் வாழ்க்கை பெற்று நித்தியானந்தத்தை அனுபவிக்கிறோம்" என்றும் பாரதியார் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

## முன்னுரை 7–ம் பகுதியில்

"இறந்து போன ஜீவன் முக்தர்கள் யாவரும், ஜீவன் முக்தியை எய்திய பின் அந்த நிலையினின்றும் வழுவினவர் –களாகவே கருதப்படுதல் வேண்டும். நித்ய ஜீவர்களாய் மண்மேல் அமரரைப் போல் வாழ்வாரே நித்ய ஜீவன் முக்தராவர். அத்தகைய நிலையை இந்த உலகில் அடைதல் சாத்தியம் என்று மேற்கூறிய இரண்டு சுலோகங்களிலே கடவுள் போதிக்கிறார். அதற்கு உபாயமும் அவரே குறிப்பிட்டிருக்கிறார். குளிர் – வெம்மை, இன்பம் – துன்பம் எனும் இவற்றை விளைவிக்கும் இயற்கை அனுபவங்கள், தெய்வக் கிருபையால் சாசுவதமல்ல. அநித்யமானவை. தோன்றி மறையும் இயல்புடையன. ஆதலால் இவற்றைக் கண்ட விடத்தே நெஞ்சு மிளகுதலும் நெஞ்சடைத்து மடிதலும் சால மிக பேதமையாமன்றோ? ஆதலால் இவற்றைக் கருதி எவனும் மனத்துயரப் படுதல் வேண்டா. அங்ஙனம் துயர்ப் படாதிருக்கக் கற்பான். சாகாமலிருக்கத் தகுவான். இஃது ஸ்ரீகிருஷ்ணனுடைய கொள்கை. இதுவே அவருடைய உபதேசத்தின் சாராம்சம். பகவத் கீதையின் நூற்பயன். எனவே பகவத் கீதை அமிர்த சாஸ்திரம்" என்று பெயர் என்று பாரதி மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

## முன்னுரை 8–ம் பகுதியில்

"அமிர்த சாஸ்திரம்" அதாவது சாகாமலிருக்க வழி கற்றுக் கொடுக்கும் சாஸ்திரமாகிய பகவத் கீதையைச் சிலர் கொலை நூலாகப் பாவனை செய்கிறார்கள். துரியோதனாதிகளைக் கொல்லும் படி அர்ஜுனனைத் தூண்டுவதற்காகவே இந்தப் பதினெட்டு அத்தியாயமும் கண்ணபிரானால் கூறப்பட்டனவாதலால் இது கொலைக்குத் தூண்டுவதையே தனி நோக்கமாகவுடைய நூலென்று சிலர் பேசுகிறார்கள். கொலை செய்யச் சொல்ல

வந்த விடத்தே, இத்தனை வேதாந்தமும் இத்தனை சத்வகுணமும், இத்தனை துக்க நிவர்த்தியும் இத்தனை சாகா திருக்கவழியும் பேசப்படுவதென்னே என்பதை அச்சில மூடர் கருதுகின்றிலர்.

க்ஷத்திரிய அரசர் படித்துப் பயன் பெறச் செய்ய வேண்டுமென்பதே இந்த நூலின் விசேஷ நோக்கம். பூமண்டலத்தார் அனைவருக்கும் பொதுமையாகவே விடுதலைக்குரிய வழிகளை உணர்த்த வேண்டுமென்று கருதி எழுதப் பட்டதே பகவத் கீதை. இதில் ஐயமில்லை. எனினும் இந்த நூல் க்ஷத்திரிய மன்னருக்கு விசேஷமாக உரியது இது அவர்களுக்குள்ளே அதிகமாக வழங்கி வந்தது. வேதங்கள் எப்படி உலகத்துக்கெல்லாம் பொதுவே ஆயினும் பிராமணர்களுக்கு விசேஷமாக உரியனவோ அது போலவே புராணங்கள் க்ஷத்திரியர்களுக்கு உரியன. மேலும்,

கீதையைச் சொன்னவன் ராஜா. கேட்டவன் ராஜா. ஆதலால் க்ஷத்திரிய அரசருக்கு இதில் ரஸம் உண்டாகும் பொருட்டாக இது போர்க்களத்தை முகவுரையாகக் கொண்ட மகா அற்புத நாடகத் தொடக்கத்துடன் ஆரம்பிக்கிறது. இஃது இந்நூல் ஞான சாஸ்திரங்களில் முதன்மைப் பட்டிருப்பதைப் போல காவிய வரிசையிலும் மிக உயர்ந்ததென்பதற்குச் சான்றாகும்." என்பதைப் பாரதி மிகவும் உறுதி படக் குறிப்பிடுகிறார்.

முன்னுரை 9-ம் பகுதியில்

ஹிந்துக்களாலே ஹிந்து தர்மத்தின் மூன்று ஆதார நிதிகளாகக் கருதப்படும். பிரஸ்தான திரயங்களாகிய உபநிஷத், பகவத் கீதை, வேதாந்த சூத்திரம் என்பவற்றுள் கீதை இரண்டாவதென்பதை இந்த சில மூடர் மறந்து விடுகின்றனர். இதற்கு, அதாவது -பகவத் கீதைக்கு சங்கரர், இராமானு

—ஜாச்சாரியார், மத்துவாச்சாரியார் என்று மூன்று மதஸ்தாபகாசாரியரும் வியாக்கியான மெழுதி, இதனை ஹிந்து தர்மத்தின் ஆதாரக்கற்களில் ஒன்றாக நாட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த மூடர் அறிகின்றிலர். கொலைக்குத் தூண்டும் நூல் ஒன்றுக்கு சங்கராசாரியார் பாஷ்யம் எழுதுவதென்றால் அஃது எத்தனை வினோதமாக இருக்குமென்பதைக் கருதித் தம்மைத் தாமே நகைக்குந்திறமையிலர்.

"கொலை எவ்வளவு தூரம். பகவத் பாத சங்கராசாரியர் எவ்வளவு தூரம்?

"மேலும் நாம் மேலே கூறியபடி பகவத் கீதையைக் கொலை நூலென்று வாதாடுவோர் அதில் முகவுரை மாத்திரம் படித்தவர்களேயன்றி நூலின் உட்பகுதியில் நுழைந்து பார்த்தவரல்லர் என்பதில் சந்தேகமில்லை.

"ஈசனைச் சரணாகதியடைந்து இக லோகத்தில் மோக்ஷ சாம்ராஜ்யத்தை எய்தி நிகரற்ற ஆனந்தக்களியில் மூழ்கி வாழும் படி வழி காட்டுவதே பகவத் கீதையின் முக்கிய நோக்கம். அதனால் இஃது கர்ம சாஸ்திரம். இஃது பக்தி சாஸ்திரம், இஃது யோக சாஸ்திரம், இஃது ஞான சாஸ்திரம், இஃது மோக்ஷசாஸ்திரம், இஃது அமரத்வசாஸ்திரம்" என்று விளக்கம் கூறி பாரதியார் நமக்கு ஒரு அற்புதமான காட்சியைக் காட்டுகிறார். அவர் இங்கு கூறியுள்ள சிறந்த கருத்துச் செறிவு மிக்க சொற்களும், சொற்றொடர்களும் பாரதியின் தமிழ் உரைநடைக்குத் தனிச் சிறப்பைத் தந்திருக்கின்றன. மேலும் இங்கு பாரதியின் தமிழ் உரைநடையில் ஒரு புதிய வளர்ச்சி நிலையை அபிவிருத்தியைக் காண்கிறோம்.

முன்னுரை 10-ம் பகுதியில்

மனம் இயற்கையாலும், தீய சகவாசத்தாலும் ஆத்மாவுக்குத் துன்பமிழைத்தல் பிரத்யக்ஷம், நல்ல கூட்டத்தாலும் நல்ல பயிற்சியாலும் அதனை உபகார வஸ்துவாகச் செய்தல் சாத்யமென்பது யோகிகளின் சர்வ சாதாரண அனுபவம்.

எல்லாம் கடவுளுடைய செயல் என்பது பொது உண்மை. பரம சத்தியம். ஆயினும் மனிதருக்குத்துன்பமுண்டு. எல்லாம் கடவுளுடைய வடிவம் என்பது பரம சத்தியம். எனினும் ஜீவர்கள் துயரப்படுவதைப் பிரத்யக்ஷமாகக் காண்கிறோம்.

சூரிய கோளங்கள் ஒன்றோடொன்று மோதித் தூளாகின்றன. இவையனைத்தும் புதியன புதியனவாகத் தோன்றுகின்றன. கோடிப்பொருள்கள் கோடியா? ஒரு கோடியா? கோடி, கோடியா? கோடி, கோடி, கோடி, கோடியா? அன்று அனந்தம், எண்ணத் தொலையாதன எண்ணத் தொலையாத பொருள்கள் க்ஷணம் தோறும் தோன்றி மடிகின்றன. எல்லாம் கடவுளுக்கு ஒரேமாதிரி. சலித்தல் அவருடைய இயல்பு. அவருடைய சரீரமாகிய ஜகத் ஓயாமல் சுழன்று கொண்டிருத்தல் இயற்கை. இதனால் அவருக்கு அசைவில்லை. அவருக்கு அழிவில்லை" என்று பாரதியார் கூறுகிறார்.

முன்னுரை 12-ம் பகுதியில்

"இயற்கை விதியை அனுசரித்து வாழ வேண்டும். அதனால் எவ்விதமான தீமையும் எய்த மாட்டாது. எனவே சாதாரண புத்தியே பரம மெய்ஞ்ஞானம். இதனை ஆங்கிலேயர் காமன் சென்ஸ் என்பர். சுத்தமான, மாசுபடாத, கலங்காத, அஞ்சாத, பிழை படாத -சாதாரண அறிவே பரம மெய்ஞ்ஞானமாகும்.

சாதாரண ஞானத்தைக் கைக் கொண்டு நடத்தலே எதிலும் எளிய வழியாகும். சாதாரண ஞானமென்று சொல் மாத்திரத்தில் அது எல்லோருக்கும் பொதுவென்று விளங்குகிறது. ஆனால் சாதாரண ஞானத்தின் படி நடக்க எல்லாரும் பின் வாங்குகிறார்கள். சாதாரண ஞானத்தின் படி நடக்க வொட்டாமல் ஜீவர்களைக் காமக் குரோதாதிகள் தடுக்கின்றன. சாதாரண ஞானத்தின் தெளிவான கொள்கை யாதெனில் நம்மை மற்றொர் நேசிக்க வேண்டுமென்றால் நாம் மற்றோரை நேசிக்க வேண்டுமென்பது. நேசத்தாலே நேசம் பிறக்கிறது. அன்பே அன்பை விளைவிக்கும்'' என்று பாரதியார் ஒரு புதிய தெளிவான கருத்தை தனது உரைநடை வாசகத்தில் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

## முன்னுரை 13-ம் பகுதியில்

கடவுள் ஓயாமால் தொழில் செய்து கொண்டேயிருக்கிறார். அவர் அண்ட கோடிகளைப் படைத்த வண்ணமாகவும், காத்த வண்ணமாகவும், அழித்த வண்ணமாகவும் இருக்கிறார். இத்தனை வேலையும் ஒரு சோம்பேறிக் கடவுளால் செய்ய முடியுமா? கடவுள் கர்மயோகிகளிலேச் சிறந்தவன். அவன் ஜீவாத்மாவிற்கும் இடைவிடாத தொழிலை விதித்திருக்கிறான். சம்சாரத்தை விதித்திருக்கிறான். குடும்பத்தை விதித்திருக்கிறான், மனைவி மக்களை விதித்திருக்கிறான், சுற்றத்தாரையும், அயலாரையும் விதித்திருக்கிறான். நாட்டில் மனிதர் கூட்டுறவைத் துறந்த ஒருவன் காட்டுக்குச் சென்ற மாத்திரத்தானே அங்கு அவனுக்கு உயிர்க் கூட்டத்தின் சூழல் இல்லாமற் போய் விடமாட்டாது. எண்ணற்ற விலங்குகளும், பறவைகளும், ஊர்வனவுமாகிய ஜீவர்களும், மரம், செடி கொடிகளாகிய உயிர்ப்பொருள்களும் அவனைச் சூழ்ந்து நிற்கின்றன. சூழ

மிருகங்களை வைத்துக் கொண்டு அவற்றுடன் விவகரித்தல் மனிதக் கூட்டத்தினிடையே இருந்து அதனுடன் விவகரிப்பதைக் காட்டிலும், எளிதென்றேனும், கவலைக் குறைவுக்கு இடமாவதென்றேனும் கருதுவோன் தவறாக யோசனை பண்ணுகிறான். மனிதர் எத்தனை கொடியோராயினும் மூடராயினும் புலி, கரடி, ஓநாய், நரிகளுடன் வாழ்வதைக் காட்டிலும் அவர்களிடையே வாழ்தல் ஒருவனுக்கு அதிக நன்மை பயக்கத்தக்கது என்பதில் ஐயமில்லை. ஆனால் "கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில் கடும் புலி வாழும் காடு நன்றே" என முன்னோர் குறிப்பிட்டபடி கடும்புலி வாழும் காட்டைக் காட்டிலும் நாட்டை ஒருவனுக்கு அதிகக் கஷ்டமாக்கக் கூடிய மனிதரும் இருக்கக் கூடும் என்பது மெய்யே. ஆனால் இந்நிலையைப் பொது விதியாகக் கருதலாகாது. பொது விதியை ஸ்தாபகம் செய்வதாகிய விதி விலக்கென்றே கருதத்தகும்." என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

அதே பகுதியில் பாரதியார், இல்லறம், துறவறம் பற்றி மேலும் விவரிக்கிறார். துறவறம் சிறந்தது என்று பாரதியார் ஏற்றுக் கொள்ளவில்லை. இல்லறமே சிறந்தது என்பது அவருடைய கொள்கை. "இல்லற மல்லது நல்லற மல்ல" என்பதை முழுமையாக ஏற்றுக் கொண்டிருப்பவர். அதனால் பகவத் கீதை ஒரு சந்நியாச நூல் என்று கூறப்படும் கருத்தை மறுத்து அவர் வாதாடுகிறார். அதற்காக இல்லறம், துறவறம் ஆகிய இரண்டையும் சமநிலையில் கண்ட தாயுமான ஸ்வாமி கூறிய "மத்தமதகரி முகிற் குலமென்ன" என்று தொடங்கும் பாடலை மேற்கோள் காட்டி அப்பாடலுக்குத் தனது உரைநடையில் பொருள் கூறுகிறார். அது வருமாறு :–

"மதமேறிய யானைகள் மேகக் கூட்டங்களைப் போல மலிந்து நிற்கும் வாயில்களையுடைய அரண்மனையில் சந்திரனை

அளாவுவன போன்ற உயரமுடைய மாடங்களும், கூடங்களும், சிகரங்களும் சூழ்ந்திருப்ப அவற்றிடையே நிலா விளை –யாட்டுக்காகச் சமைக்கப் பட்டிருக்கும் சந்திரகாந்த மேடைகளின் மேலே இனிய தமிழ் பேச்சுக்கும், தமிழ்ப் பாட்டுக்கும், நாட்டியங்களுக்குமிடையே முத்தொளி வீசும் நகை பிரிகின்ற மாதர்களுடனே முத்து முத்தாக உரையாடி முத்தமிட்டு முத்தமிட்டுக் குலாவிக் காதல் நெறியில் இன்புற்றிருந்தாலென்ன? அஃதன்றி யோக வழியிலே சென்று மூச்சை அடக்கிக் கொண்டு ஆயுதங்களைப் போல வலிய நகங்களையுடைய புலி சிங்கம் கரடி முதலியன பதுங்கிக் கிடக்கும் பொந்துகளையுடைய காட்டு மலையுச்சியில் தாமொரு பொந்தில் இருந்தாலென்ன? உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குவதோர் உண்மை கூறுகின்றோம்.'' சலனமின்றி மனதிலே சாந்த நிலை பெற்றோர் உய்வார். இதுவன்றோ ஜனகன் முதலியோரின் முடிபானது? எங்கும் நிறைவற்றதாய்ப் பிரிக்கப் படாத மூலப் பொருளே அறிவும் உண்மையும், மகிழ்ச்சியும் ஆகிய கடவுளே!'' என்று நல்ல தமிழில் விளக்கிக் கூறுயுள்ளார்.

மேலும் துறவு வழி பற்றி அதை மறுத்து பாரதியார் கூறுகிறார்.

''வேத காலத்தில் இந்தத் துறவு வழி ஹிந்துக்களுக்குள்ளே கிடையாது. வேத காலத்தில் சந்நியாசம் நமக்குள்ளேயே இருந்திருப்பதாக சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார். வசிஷ்டர், வாமதேவர், முதலிய வேதரிஷிகள் அத்தனை பேரும் மணம் புரிந்து கொண்டு மனைவி மக்களுடனேயே இன்புற்று வாழ்ந்தனர். புலன்களை அடக்கியாளும் பொருட்டாக அக்காலத்தில் ரிஷிகள் பிரம்மச்சாரிகளாக இருந்து நெடுங்காலம் பலவகைக் கொடிய தவங்கள் செய்ததுண்டு. ஆனால் குறிப்பிட்ட

காலம் வரை தவங்கள் செய்து முடித்துப் பின்பு இல்வாழ்க்கையில் புகுதலே மகரிஷிகளுக்கு வழக்கமாக நடை பெற்று வந்தது. மகா பாரதத்திலும் மற்றும் பூர்வ புராணங்களிலும் வேதரிஷிகளைப் பற்றிய கதைகளும், சரித்திரங்களும் ஒரே சித்தாந்தமாக வேத ரிஷிகளுக்குத் துறவறம் என்ற விஷயமே இன்னதென்று தெரியாது என்ற என் வார்த்தையை நிலை நிறுத்துகின்றன. மேலும் சுவாமி விவேகானந்தர் வேதங்களின் பின் சேர்க்கைகளாகிய உப நிஷத்துக்களையே முக்கியமாகப் பயின்றவர். இந்த உபநிஷத்துக்கள் வேதாந்தம் என்ற பெயர் படைத்தன. அதாவது வேதத்தின் நிச்சயம். இவைகள் வேத ரிஷிகளால் சமைக்கப்பட்டனவல்ல. பிற்காலத்தவர்களால் சமைக்கப் பட்டன. ஸம்ஹிதைகள் என்று மந்திரங்கள் சொல்லப்படுவனவே உண்மையான வேதங்கள். அவையே ஹிந்து மதத்தின் வேர். அவையே வசிஷ்ட, வாம தேவாதி ரிஷிகளின் கொள்கைகளைக் காட்டுவன. உபநிஷத்துக்கள் மந்திரங்களுக்கு விரோதமல்ல. அவற்றுக்கு சாஸ்திர முடிவு. அவற்றின் சிரோபூஷணம். ஆனால் பச்சை வேதம் என்பது மந்திரம் அல்லது சம்ஹிதை எனப்படும் பகுதியேயாகும் என்று பாரதி குறிப்பிடுகிறார்.

இங்ஙனமிருக்கப் பிற்காலத்து ஆசாரியர்களிலே சிலர் வேதத்தைக் கர்ம காண்டம் என்றும் அதனால் தாழ்ந்த படியைச் சேர்ந்ததென்றும், உபநிஷத்தே ஞான காண்டம் என்றும் ஆதலால் அதுவே வேதத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்றும் கருதுவாராயினர்.

இங்ஙனம் பிற்காலத்து ஆசாரியர்கள் நினைப்பதற்கு உண்டான காரணங்கள் பல. அவற்றுள் சிலவற்றை இங்கே தருகிறேன்.

முதலாவது காரணம் வேத பாஷை மிகவும் பழமைப்பட்டுப் போனபடியால் அதன் உண்மையான பொருளைக் கண்டு பிடித்தல் மிகவும் துர்லபமாய் விட்டது. நிருத்தம் என்ற வேத நிகண்டையும் பிராம்மணங்கள் என்று சொல்லப்படும் பகுதிகளிலே காணப்படும் வேத மந்திரங்களையும் கற்ற பின்னரே ஒருவாறு வேத மந்திரங்களின் பொருளையறிதல், சாத்தியமாயிற்று. வேதம் பிரம்மாண்ட நூல். அதில் இத்தகைய ஆராய்ச்சி செய்வார் மிகச் சிலரேயாவர். இப்போது வேதத்திற்கு விளக்குப் போல நிற்கும் சாயனரென்ற வித்தியாரண்ய சங்கராசாரியாரின் பாஷ்யம் பிராம்மணங்களையும், நிருத்தத்தையுமே ஆதாரமாகவுடையது. பிராம்மணங்களில் பெரும்பாலும் கற்பனைக் கதைகளும், கற்பிதப் பொருள்களுமே கூறப்பட்டிருக்கின்றன. நிருத்தத்திலோ என்றால் பெரும்பாலும் வேதபதங்களுக்குச் சரியான பொருளே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் பல இடங்களில் அதன் தாது நிச்சயங்கள் மிகவும் சம்சயத்துக்கு இடமாகவும் சில இடங்களில் அதன் பொருட் கோளே பிழைபட்டதாகவும் இருக்கிறது" என்பது பாரதியின் வாக்காகும்.

பகவத் கீதை முன்னுரையின் நிறைவாக பாரதி, "உலகமெல்லாம் கடவுள் மயம் என்ற உண்மையான வேதாந்தத்தைக் கீதை ஆதாரமாக உடையது. மாயை பொய்யில்லை. பொய் தோன்றாது. பின் மாறுகிறதேயெனில் மாறுதல் மாயையின் இயற்கை. மாயை பொய்யில்லை. அது கடவுளின் திருமேனி. இங்கு தீமைகள் வென்றொழித்தற்குரியன. நன்மைகள் செய்வதற்கும், எய்துவதற்கும் உரியன. சரணாகதியில் – கடவுளிடம் தீராத மாறாத பக்தியால் – யோகத்தை எய்துவீர்கள். எல்லா ஜீவர்களையும் சமமாகக் கருதக்கட வீர்கள் அதனால் விடுதலை யடைவீர்கள், சத்திய விரதத்தால் ஆனந்தத்தை அடைவீர்கள்.

"இந்த மகத்தான உண்மையையே கீதை உபதேசிக்கிறது" என்று பாரதி கூறி முடிக்கிறார்.

பாரதியின் உரைநடைக்கு எடுத்துக் காட்டாக இங்கு அவர் தன்னுடைய பகவத் கீதை தமிழாக்கத்திற்கு எழுதியுள்ள முகவுரையின் பகுதிகளை சற்று விரிவாகவே கூறப்பட்டிருக்கிறது. பாரதியின் உரைநடையில் இந்தப் பகுதி மிகவும் சிறப்பாகவும் எளிமையாகவும், மிகவும் கடினமான விஷயங்களையும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய முறையிலும் அமைந்திருக்கிறது.

பகவத் கீதையின் கருத்துக்களின் உண்மைகளையும், வேதங்கள், உபநிடதங்கள், வேதாந்த தத்துவ ஞானம் பற்றிய பல உண்மைகளையும் பாரதி தனது பகவத் கீதை தமிழாக்கத்திற்கான முன்னுரையில் மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறியிருப்பதாலும், பாரதி காலத்திய தமிழ் உரைநடைக்கு இந்த பாரதியின் உரைநடைப் பகுதி ஒரு தனி இலக்கியமாக சிறப்புற அமைந்திருப்பதாலும் இந்த நூலில் மிகவும் விரிவாகவே இந்தப் பகுதியிலிருந்து இங்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. மேலும் பாரதியின் தமிழ் உரைநடைப் பகுதியைப் பற்றியும் குறிப்பாக பகவத் கீதை தமிழ் மொழி பெயர்ப்புக்கான இந்த முன்னுரையின் தனி இலக்கியச் சிறப்புகளையும் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்னும் நோக்கத்துடனும், இப்பகுதியில் உள்ள வாசகங்கள் சற்று விரிவாகவே இங்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

பகவத் கீதை பற்றி பாரதியின் கருத்துக்கள் விளக்கங்கள், மூல நூலுக்கு அவர் செய்துள்ள தமிழாக்கம் ஆகியவை தனித் தன்மையும் சிறப்பும் கொண்டிருக்கின்றன. அத்துடன் இந்தப் பகுதியில் காணப்படும் அவருடைய தமிழ் உரைநடையும் மிகவும் சிறப்பாகவும், முன்னோடியாகவும் அமைந்துள்ளது.

பாரதி ஒரு மகாகவிஞன். சிறந்த எழுத்தாளர். பாரதப் பண்பாட்டு நிலையில் வேர் ஊன்றி நின்றவர். தமிழும் சமஸ்கிருதமும் நன்கு அறிந்தவர். வேதங்களையும் உப நிடதங்களையும் அறிந்தவர். அவர் ஒரு மகாஞானி, கர்மயோகி, ஜீவன் முக்தர், பாரத தத்துவ ஞான சிந்தனையை, வேதாந்தத்தை நன்கு அறிந்து கொண்டவர். அவருடைய தெளிவான சிந்தனையும் அதிலிருந்து வெளிப்படும் கருத்துகளின் உண்மை நிலையும் அவருடைய தமிழும் தமிழ்ப் பற்றும் இணைந்து இந்த உரைநடைப் பகுதியில் மிகவும் சிறப்பாக வெளிப்படுகிறது.

## 21. நிறைவுரை

பாரதியின் கவிதைகளைப் போலவே அவருடைய உரைநடைப் பகுதிகளும் பல தலைப்புகளையும், பல புதிய கருத்துக்களையும், கருத்து வடிவங்களையும், பல பரிமாணங்களையும் கொண்டிருக்கிறது.

நாட்டில் உள்ள பாரத சமுதாயத்தில் உள்ள தமிழ் நாட்டில் உள்ள பலவேறு சமுதாயப் பிரச்னைகள், அரசியல் பிரச்னைகள், தேச விடுதலை, பொருளாதாரப் பிரச்னைகள், சமூக சீர்திருத்தம், பெண்கள் விடுதலை தொடர்பான பல பிரச்னைகள், மொழி வளர்ச்சி, தமிழ் இசை, சங்கீதம், சங்கீத வித்வான்கள், மக்களுடைய பாடல்கள், கல்வி, கல்வி வளர்ச்சி, நாட்டுக் கல்வி, தேசியக் கல்வி, பத்திரிகைகள், செய்திகள், மொழி பெயர்ப்புகள், அரசியல் கட்சிகள், அரசியல் கட்சிகளின் மகாநாடுகள், கூட்டங்கள், மதம், மத நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள், இந்தியப் பண்பாடு, இந்திய மரபுகள், இந்தியப் பேரிலக்கியங்கள், புராணங்கள், கதைகள், ஆடல் பாடல், கூத்துக்கள், நாட்டியம், அபிநயம், நவரசம், சமூக சேவை, தத்துவஞானம், வேதங்கள், உபநிடதம், வேதாந்தம், பகவத்கீதை இவ்வாறு இன்னும் பல தலைப்புகள் பிரச்னைகளைப் பற்றித் தனது உரைநடைக் கட்டுரைகளில் பாரதி எழுதியுள்ளார்.

அத்துடன் அவர் சுதேச மித்திரன் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரைகள், செய்திகள், மொழி பெயர்ப்புகள், நாட்டு நடப்புகள், பாரதி நடத்திய பத்திரிகைகள், இந்தியா, விஜயா, கர்மயோகி, சக்கரவர்த்தினி, சூரியோதயம் முதலியவற்றில் அவர் எழுதிய கட்டுரைகள், செய்திகள், தலையங்கம், ஆகியவைகளில் அவர் எழுதியுள்ளவைகளின் தமிழ் உரைநடை மிகவும் சிறப்பான

—வைகளாகவும் தெளிவான புதிய தமிழ் நடை கொண்டதாகவும் இருப்பதைக் காணலாம்.

பாரதியாருடைய உரைநடை மொழி பண்டைய மரபில் வேர் ஊன்றி எழுந்து துளிர் விட்டு புதுமை பெற்று வளர்ந்திருக்கிறது. மறுமலர்ச்சி பெற்று இதழ் விரித்து மணம் வீசுகிறது.

பாரதியின் உரைநடை மொழி நவீன தமிழ் உரைநடைக்கு முன்னோடியாக அமைந்துள்ளது என்று கூறலாம். தமிழ் உரைநடை மொழிக்கு பாரதியின் உரைநடை மொழி ஒரு புதிய சகாப்தத்தைத் தொடக்கி வைத்திருக்கிறது எனக் கூறலாம்.

பாரதி தொடக்கி வைத்த தமிழ் உரைநடை மொழி அவர் வழியில் ஒரு புதிய மரபை உருவாக்கி அது வளர்ந்து வந்திருக்கிறது. பாரதியின் உரைநடை மொழி மக்கள் பேசிய மொழியைப் பிரதி பலித்திருக்கிறது. பாரதியின் உரைநடை மொழியில் அக்காலத்தில் கற்றோரிடம் பழக்கத்தில் இருந்த வடமொழி (சமஸ்கிருதம்) சொற்களும், வடமொழி மற்றும், பாலி, பிராகிருதம், மொழிகள் சார்ந்த எழுத்துகளும் சொற்களும் காணப்படுகின்றன. அவைகளும் காலத்தால் மாறி வந்திருக்கின்றன. தலைப்புகளுக்கேற்றவாறு மொழி நடையும் இருப்பதைக் காணலாம்.

பத்திரிகைகளின் வளர்ச்சி அச்சு எந்திரங்களின் வளர்ச்சி, தகவல் தொடர்பு சாதனங்கள், தகவல் தொழில் நுட்பம், மக்கள் தொடர்பு சாதனங்கள், கணிணி மற்றும் சமுதாயத்தின் உற்பத்தி சாதனங்கள், உற்பத்திக் கருவிகள், மனிதவளம், போக்குவரத்து, சாதனங்கள், நிர்வாக வளர்ச்சி, பல துறைக்கல்வி வளர்ச்சி, பன்னாட்டுத் தொடர்பு, இதர மொழிகளுடன் உள்ள தொடர்பு

முதலிய பல காரணங்களாலும், மொழிகளும் அதில் தமிழ் மொழியும் முன்னேற்றம் அடைந்து வளர்ச்சி பெற்றிருகிறது. வளர்ச்சி பெற்று வருகிறது.

பாரதியின் உரைநடை மொழி எந்தப் பொருளைப் பற்றிய தாயினும் ஒரு உயிர்த்துடிப்புடன் அப்பொருளைப் பற்றிய கருத்துச் செறிவுடன் விளங்குவதைக் காண்கிறோம். பாரதியின் கவிதைகளைப் போலவே அவருடைய உரைநடைப் பகுதிகளும் தமிழ் மொழியின் நவீன கால வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்திருக்கிறது என்று உறுதியாகக் கூறலாம். அதற்காக பாரதிக்கு தமிழ் கூறும் நல்லுலகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

பாரதி வாழ்க, தமிழ் வாழ்க.

# நூலாசிரியரைப் பற்றி

நூலாசிரியர் : அ. சீனிவாசன்

நூலாசிரியர் திரு. அ.சீனிவாசன் ஒரு மூத்த தமிழறிஞர். எழுத்தாளர், பத்திரிகையாளர் முன்னாள் விமானப் படை வீரர். பல நாடுகளிலும், இந்தியாவின் பல மாநிலங்களிலும், விரிவாகச் சுற்றுப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர். தனது பள்ளிப் படிப்பு காலத்திலேயே பன்னிரண்டாவது வயது முதலே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு நாட்டுப் பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசீய காங்கிரஸ், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி (1937 ம் ஆண்டில் ஜெயப் பிரகாஷ் நாராயணன் தலைமையிலான சோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி என்னும் பெயரில் ஒரு தீவிரமான கட்சி என்னும் பெயரில் ஒரு கட்சி அமைத்திருந்தனர். அக்கட்சியினர் காங்கிரஸ் கட்சியிலும் உறுப்பினர்களாயிருந்தனர்). சுயமரியாதை இயக்கம், பின்னர் பொதுவுடமை இயக்கம் ஆகிய இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றியவர், சிறை வாசம் சித்திரவதை, கொடுமையான போலீஸ் அடக்கு முறைகளுக்கு ஆளாகித் தியாகத் தழும்புகள் ஏறியவர்.

இரண்டாவது உலகப் பெரும் போர் காலத்தில் விமானப் படையில் சேர்ந்து இராணுவப் பயிற்சியும் தகவல் தொழில் நுட்பப் பயிற்சியும் பெற்றவர்.

திரு. அ.சீனிவாசன் முன்னள் இராமநாதபுரம் மாவட்டம் இன்றைய விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, வத்திராயிருப்பு ஒன்றியம் மகாராஜபுரம் கிராமத்தில் விவசாய குடும்பத்தில் 1925–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6–ம் தேதி

பிறந்தார். தந்தையார் மெட்ட.வெ.அய்யப்ப நாயுடு, தாயார் மெட்ட.வெங்கடம்மாள், உடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரி, இரண்டு சகோதரர்கள். 1957–ம்

ஆண்டு மே மாதம் 31–ம் தேதி திரு. அ.சீனிவாசன் அவர்களுக்கு திருமணம் ஆயிற்று. மனைவி திருமதி. சீ.நாகலட்சுமி. குழந்தைகள் இரண்டு பெண்கள், ஒரு ஆண். பெண்களில் மூத்தவர் திருமதி. கே.பகீரதி எம்.ஏ.,பி.எட்.,(தமிழ்) திருமணமாகி விட்டது. சென்னையில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இளையவர் கு.வைதேகி, கர்நாடக இசையில் பட்டம் பெற்று கோவையில் இசை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். மகன் ஏ.எஸ்.வாசன் (பழைய பெயர் எஸ். அய்யாசாமி) ஏரோநாட்டிக்கல் என்ஜினியரிங் மற்றும் பி.காம். படிப்பு முடித்தவர். சினிமா துறையில் தயாரிப்பு, நிர்வாகம், இயக்கம் ஆகிய துறைகளில் பணியாற்றி வருகிறார். அத்துடன் தந்தையார் எழுதி வரும் நூல்களைப் பதிப்பித்து அப்பதிப்பகத்தின் நிர்வாகியாகப் பணியாற்றியும் வருகிறார்.

திரு.அ.சீனிவாசன் மகராஜபுரம் சாத்தூர், வத்திராயிருப்பு விருதுநகர் ஆகிய ஊர்களில் பள்ளிப் படிப்பு முடித்து இந்திய விமானப் படையில் தகவல் தொழில் நுட்பப் பயிற்சியும் பெற்றுள்ளார். அப்போது ஆங்கில மொழியில் தனிப் பயிற்சியும் பெற்றார். அத்துடன் சொந்த முயற்சியில் தமிழ் இலக்கியத்திலும் குறிப்பாக பாரதி நூல்கள், கம்பராமாயணம், நாலாயிரத்திவ்யப் பிரபந்தம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் ஆழப்படிப்பும் பயிற்சியும் பெற்றார்.

இவ்வாறு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நல்ல பயிற்சியும் அத்துடன் தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளும் அறிந்தவர்.

திரு. அ. சீனிவாசன் 1947–ம் ஆண்டு முதல் 1999–ம் ஆண்டு வரை சுமார் 52 ஆண்டுகள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில், அக்கட்சியின் வட்டாரப் பொறுப்பிலிருந்து, மாவட்ட, மாநில, அகில இந்தியப் பொறுப்புகள் வரையில் பல்வேறு பொறுப்புகளில் குறிப்பாக அமைப்பு நிலை, தொழிற் சங்கத்தலைமை, பத்திரிகைத்துறை, பிரச்சாரத்துறை, பிரசுரத்துறை, கட்சிக்கல்விப் பயிற்சித்துறை, (சித்தாந்தத்துறை) முதலிய பல துறைகளிலும் பணியாற்றியுள்ளார். கட்சியின் உயர்ந்த அமைப்பான தேசீயக் கவுன்ஸிலில் இருபத்து ஐந்து ஆண்டுகள் உறுப்பினராக இருந்து, மாநில, மத்தியப் பொறுப்புகள் பலவற்றில் இருந்து பணியாற்றியுள்ளார். தமிழ் மாநிலக் குழுவின் துணைச் செயலாளர் பொறுப்பில் இருந்து மாநில அளவில் அமைப்பு நிலை, சித்தாந்தப் பயிற்சி, பத்திரிகை பொறுப்புகள் வகித்து இருபது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார்.

கட்சியின் உயர் மட்டக் குழுவின் பிரதிநிதியாக அன்றைய சோவியத்யூனியன் (ரஷ்யா–மாஸ்கோ, லெனின் கிராட், ஆர்மீனியா, ஆஜர்பைஜான்) மற்றும் செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து சுற்றுப் பயணம் செய்துள்ளார்.

## தொழிற் சங்கத் தலைவராக

திரு.அ.சீனிவாசன் 1950–ம் ஆண்டு காலத் தொடக்கத்திலேயே இராஜபாளையம், சிவகாசி, சத்திரப்பட்டி, தளவாய்புரம், விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளில் பஞ்சாலை, அச்சு, தீப்பெட்டி, கைத்தறி மற்றும் பல தொழில்கள் தொடர்பான தொழிலாளர் சங்கங்கள் பலவற்றையும் தொடங்கியும், உருவாக்கியும், தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். மாநில அளவிலும் பல தொழிற் சங்கப் பொறுப்புகளில் இருந்து பணியாற்றியுள்ளார்.

பின்னர் திரு.அ.சீனிவாசன் தனது தொழிற் சங்கப் பொருப்புகளில் சென்னைக்கு மாற்றப்பட்டு, சென்னையில் ஹார்பர், ஆவடி டாங்க் தொழிற்சாலை, கல்பாக்கம் அணுமின் நிலையம், ஆகிய துறைகளில், தொழில் நிறுவன அளவிலும், அகில இந்திய அமைப்பு வரையிலும், பொறுப்புகள் வகித்து தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

திரு.அ.சீனிவாசன் சென்னை டாக் லேபர் போர்டு உறுப்பினராக மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்டு அந்தப் பொறுப்பில் தொழிலாளர் பிரதிநிதியாக பணியாற்றியுள்ளார்.

## ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல்

வளர்முக நாடுகளில் இளம் தொழிலாளர்களுக்கு மறுக்கப் பட்டுள்ள வாய்ப்புகள் என்னும் தலைப்பிலும், மற்றும் இளம் தொழிலாளர்களின் பொதுப் பிரச்சனைகள் பற்றியும், உலக தொழிற் சங்க சம்மேளத்தின் சார்பில் பல்கேரிய நாட்டில் வார்னா நகரில் நடைபெற்ற சர்வ தேசத் தொழிலாளர் மகாநாட்டில் இந்தியத் தொழிலாளர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். அம் மாநாட்டில் இந்திய நாட்டின் இளம் தொழிலாளர்களின் பிரச்னைகள் பற்றிய அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கை உலகத் தொழிலாளர் சம்மேளத்தின் ஆவணங்களின் பகுதியாகச் சேர்க்கப் பட்டிருக்கிறது.

1980–ம் ஆண்டுகளில் உலக தொழிற் சங்க சம்மேளமும், சமாதானம் மற்றும் சோஷலிஸம் பற்றிய பிரச்னைகளும் என்னும் சர்வதேச இதழும் சேர்ந்து நடத்திய கருத்தரங்கில் வளர்முக நாடுகளில் பொதுத்துறையின் பங்கும் பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் இடையிலான உறவு தொடர்புகள் பற்றிய பிரச்னைகள் பற்றி டில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு.அ.சீனிவாசன்

இந்தியாவில் பொதுத்துறைக்கும் தனியார் துறையில் உள்ள நடுத்தர மற்றும் சிறு தொழில்களுக்கும் இடையிலான உறவு என்னும் தலைப்பில் ஒரு ஆய்வறிக்கை சமர்ப்பித்து, அது உலக தொழிற் சங்க ஆவணத்தில் பதிவாகியுள்ளது.

## பத்திரிகையாளராக

தொழிற் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் தொழிற் சங்கச் செய்தி ஹார்பர் தொழிலாளி ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியர் பொறுப்பில் பணியாற்றியுள்ளார். கட்சியின் மாநிலத் துணைத் செயலாளராக இருந்த போது கட்சியின் மாநில அமைப்பு நிலைப் பொறுப்பில் இருந்த காலத்தில் கட்சியின் பத்திரிகையான ஜன சக்தி வார இதழ் மற்றும் நாளிதழ்களில் தலைமை ஆசிரியராக எட்டாண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார். கட்சியின் சித்தாந்த ஏடான மார்கசீய ஒளி மாத இதழின் தலைமை ஆசிரியராக இருபது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார்.

## எழுத்துப் பணிகளில்

பத்திகை ஆசிரியராக இருந்த காலத்தில் கட்சி மற்றும் தொழிற் சங்கப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாகப் பல முக்கிய அரசியல், பொருளாதாரம், இலக்கியம் மற்றும் தத்துவ ஞானம் மற்றும் தொழிலாளர், விவசாயிகள் பற்றியப் பிரச்னைகள் பற்றிய பல கட்டுரைகள் எழுதி வந்ததுடன்,

அரசியல், வரலாறு, பொருளாதாரம், தத்துவஞானம், சர்வதேசப் பிரச்னைகள் முதலியவை பற்றிய பல தலைப்புகளிலான நூல்களை மொழி பெயர்ப்பு (தமிழாக்கம்) செய்தும், மூல நூல்கள் எழுதியும் அவை வெளியாகியுள்ளன. காரல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு, மார்க்சிய லெனினிய தத்துவ ஞானப் பிரச்னைகள் அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகள், ஐக்கிய

முன்னணித்தந்திரம், மார்க்சீய தத்துவம், வரலாற்றியல் பொருள் முதல் வாதம், மார்க்சீயமும் பகவத் கீதையும் முதலியன அவர் தமிழாக்கம் செய்துள்ள முக்கியமான பெரிய நூல்களாகும். மற்றும் மார்க்சீய பொருளாதார தத்துவம், ஜீவாவின் தமிழ் பணிகள், கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி ஆகிய தலைப்புகளில் மூல நூல்கள் எழுதியுள்ளார். இந்த மூன்று நூல்களுக்கும் முறையே பேராசிரியர் வான மாமலை பேராசிரியர் சஞ்சீவி, பேராசிரியர் நா. தர்மராஜன் ஆகியோர் முன்னுரை எழுதி பாராட்டியுள்ளனர். இவ்வாறு திரு.அ.சீனிவாசன் அப்போது எழுதி வெளியான நூல்கள் சுமார் பதினேழாயிரம் பக்கங்களுக்கு மேலாகும். இவை திரு.அ.சீனிவாசன் அவர்களுடைய எழுத்துப் பணிகளில் அமைதியான சாதனையாகும்.

## விருதுகள்

திரு, அ. சீனிவாசன் தனது சிறந்த எழுத்துப் பணி சாதனைகளுக்காக சோவியத் நாடு நேரு விருதும், சிறந்த பத்திரிகைப் பணிகளுக்காக, சமாதானம் சோஷலிஸம் பற்றிய பிரச்னைகள் என்னும் சர்வதேசப் பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் சிறந்த பத்திரிகையாளர் என்னும் கௌரவப் பட்டயமும் பெற்றுள்ளார். அத்துடன் அண்மையில் பாரதி தொடர்பாக அவர் எழுதியுள்ள நூல்களும் தனியார் விருதுகளைப் பெற்றுள்ளன.

## தேர்தல்களில் பங்கு

1950–ம் ஆண்டுகளின் கடைசியில் திரு. அ. சீனிவாசன் இராஜபாளையம் நகரசபைத் தேர்தலில் வார்டு உறுப்பினர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று நகரசபை உறப்பினராகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

1984–ம் ஆண்டிலும் 1991–ம் ஆண்டிலும் நடைபெற்ற

பாராளுமன்றத் தேர்தல்களில் சிவகாசி பாராளு மன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக திரு. அ. சீனிவாசன் போட்டியிட்டு ஒவ்வொரு தடவையிலும் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்று குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார். இருதடவைகளிலும் முறையே இந்திரா காந்தி படுகொலை, ராஜீவ் காந்தி படுகொலை அதனால் ஏற்பட்ட அனுதாப அலை அவருக்கு பாதகமாக இருந்தது.

திரு. அ. சீனிவாசன் சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர், நூலாசிரியர், சிறந்த பேச்சாளர், இராணுவ சேவை அனுபவம் பெற்றவர். தொழிற்சங்கத் தலைவராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர். பல நாடுகளுக்கும், இந்திய நாட்டில் பல மாநிலங்ககளுக்கும் சென்று சுற்றுப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகள் அறிந்தவர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் 1948–50ம் ஆண்டு காலத்தில் கடுமையான போலிஸ் அடக்கு முறைக்கும் சித்திரவதைக்கும் கொடுமையான சிறைவாசத்திற்கும் உட்பட்டு மதுரை, சேலம் சிறைகளில் கடும் தண்டனை அனுபவித்து தியாகத் தழும்புகள் ஏறியவர்.

## இலக்கிய அனுபவம்

திரு. அ. சீனிவாசன் ஏற்கனவே தனது குழந்தைப் பிராயத்திலிருந்தே தனது தாய் தந்தையர் மூலம் இராமாயணம், மகாபாரதம் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், நளவெண்பா, இராமனுஜருடைய தத்துவங்கள் முதலியவை பற்றி

அறிமுகமானவர். விடுதலை இயக்கத்தின் ஆதர்சத்தில் பள்ளிப் படிப்புகாலத்தில், மகாகவி பாரதியார், வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா, விவேகானந்தர் நூல்கள், அவர்களைப் பற்றிய செய்திகள், ஆனந்த மடம் முதலிய பங்கிம் சந்திரர், மற்றும் சரத் சந்திரர் நாவல்கள், கல்கி நாவல்கள், மணிக் கொடி கதைகள் முதலிய இலக்கியங்களிலும் அறிமுகமாகி நாட்டுப்பற்றை வளர்த்துக் கொண்டவர். சுதந்திரப் போராட்ட காலத்தில் தீவிர வாதக் கருத்துக்களுக்கு ஆதரவான சிந்தனைப் போக்குகளைக் கொண்டிருந்தார். பாரதி, விவேகானந்தர், ஆகியோரின் இந்திய சிந்தனைப் போக்கு அவரை மிகவும் கவர்ந்தது. அதன் பெரு –மிதத்தை படிப்படியாக வளர்த்துக் கொண்டிருந்தார்.

திரு. அ. சீனிவாசன், இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டபோது கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் குறிப்பாக மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களின் மூல நூல்களை ஆழ்ந்து படித்தார். அப்போது, இயற்கை, சமுதாயம் தனி மனித சிந்தனை பற்றியும் அதன் வழியில் தத்துவ ஞானம், அரசியல் பொருளாதாரம் சமுதாய வரலாறு பற்றியுமான ஐரோப்பிய சிந்தனைகள், ஐரோப்பாவில் நிகழ்ந்த தீவிரமான கருத்துப் போராட்டங்கள், தொழில் புரட்சி மூலம் நிகழ்ந்த சமுதாய மாற்றங்கள் முதலியவை பற்றிய இலக்கியங்கள் மூலம் ஐரோப்பிய சிந்தனை வளர்ச்சி பற்றிய அறிமுகம் ஏற்பட்டது.

அத்துடன், சோவியத் யூனியனின் தோற்றமும் வளர்ச்சியும் சர்வ தேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள் தொடர்ச்சியான அறிக்கைகள் தீர்மானங்கள் ஆகியவற்றையும் ஆழ்ந்து படிக்க நேர்ந்தது. சீனாவின் கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் படிக்க நேர்ந்தது.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், நாட்டின் வளர்ச்சிக்கான பாதை எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பது தொடர்ச்சியான விவாதப் பொருளாக இருந்து வந்திருக்கிறது. இதில் ஆங்கில (ஐரோப்பிய) சிந்தனைப் போக்குகளுக்கும் இந்திய சிந்தனைப் பொக்குகளுக்கும் இடையில் அடிப்படையான மோதல் இருந்து வந்திருக்கிறது. இந்த மோதலில் பல பெரிய அரசியல் கட்சிகளும் கூட பிளவுபட்டு உடைந்திருக்கின்றன. சுதந்திரம் அடைந்தபோது இந்திய நாடும் உடைந்து, இந்தியா, பாகிஸ்தான் பின்னர் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் எனப்பிரிந்து பிளவுபட்டிருக்கின்றன.

இந்திய நாட்டின் வெளி உறவுக் கொள்கை, இந்திய நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாடு, இந்திய மக்களின் ஒற்றுமை, நாட்டின் தற்காப்பு பலம், இந்திய நாட்டின் தொழில் வளர்ச்சி விவசாயப் பிரச்சனை, உற்பத்திப் பெருக்கம், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், கல்வி, கலாச்சார முன்னேற்றம், மக்களின் சுகாதாரம் நல்வாழ்வு பல துறைகளிலும் நாட்டின் ஒன்றிணைப்பு இந்திய மக்களின் ஆன்மீக பாரம்பரியத்தின் மேன்மை, ஒட்டுமொத்தமான அரசியல், பொருளாதார, சமுதாய, கலாச்சார, ஆன்மீக வளர்ச்சி பற்றிய பலவேறு பிரச்னைகளும் எழுந்து அவைகளுக்குச் சரியான தீர்வு காண்பதில் இந்திய மக்களிடையில் நூறாண்டு காலத்திய ஆங்கிலக் கல்வி மூலம் ஏற்பட்ட மேலைநாட்டு சிந்தனைப் போக்குகளும், இந்திய பாரம்பரியத்தின் தொடர்ச்சியான இந்திய சிந்தனைப் போக்குகளும் எழுந்து அவை மோதியிருக்கின்றன. இன்னும் அது தொடர்கிறது.

திரு. அ. சீனிவாசன் தன்னுடைய ஐம்பது ஆண்டு காலத்திற்கு மேலான பொது வாழ்க்கை, பத்திரிகைப் பணிகள், தொழிற்சங்க இயக்கப் பணிகள், விவசாயிகளின் போராட்ட

அனுபவங்கள் ஐந்தாண்டு திட்டங்களின் வளர்ச்சிப் போக்குகள் பற்றிய படிப்பு, இந்திய நாட்டின் அரசியல் வளர்ச்சி ஆகியவற்றின் அனுபவத்தில் தான் அதுவரை பணியாற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து சித்தாந்த சிந்தனை, அரசியல் கொள்கைகள் அவைகளின் செயல்பாடு, அமைப்பு நிலைப்பணிகள், அணுகும் முறை ஆகிய பல பிரச்னைகளிலும் தனக்குச் சொந்தமான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு அக்கட்சியிலிருந்து விலகி 1999–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரதிய ஜனதாக் கட்சியில் சேர்ந்து அக்கட்சியின் தலைமையின் கீழ் சமுதாயப் பணி ஆற்றிவருகிறார். ஒரே நாடு பத்திரிகை, மற்றும் விஜய பாரதம் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியும் எழுதியும் வருகிறார்.

அத்துடன் சொந்தமாகவும், பாரதி, கம்பன், சிலப்பதிகாரம், திவ்யப் பிரபந்தம் தொடர்பான பல நூல்களும் எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டும் வருகிறார். அதன்படி பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி, பாரதியின் புதிய ஆத்திசூடி. ஒரு விளக்கவுரை, சிலப்பதிகாரத்தில் வைதீகக் கருத்துக்கள், கம்பநாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும், பாரதியின் தேசீயம் ஆகிய நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நூல்கள் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெற்றிருக்கிறது.

அத்துடன் திரு. அ. சீனிவாசன் எழுதிய சிலப்பதிகாரமும் திவ்யப் பிரபந்தமும்–ஒரு ஆய்வு என்னும் நூலை பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனமான பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டிருக்கிறது.

மேலும் திரு. அ.சீனிவாசன் எழுதி முடித்து அச்சில் உள்ள, ஆழ்வார்களும், பாரதியும், கம்பன் ஒரு சமுதாயப் பார்வை, கம்பன்

காவியத்தில் விதியின் பிழையும் அறத்தின் வெற்றியும் என்னும் நூல்கள் விரைவில் வெளிவரவுள்ளன.

மேலும் பாரதி, கம்பன் தொடர்பாக வேறு சில நூல்களும், கிராமங்களை நோக்கி, இந்தியப் பொருளாதார சிந்தனைகள், பாரதியும் பகவத் கீதையும் முதலிய நூல்களும் எழுதிக் கொண்டு வருகிறார். பாரதி தொடர்பாக பல நூல்களை எழுதியும் பாரதி புகழ் பரப்புவதில் பங்கு கொண்டும் வருவதால் திரு. அ. சீனிவாசன் பாரதிய ஜனதா கட்சி வட்டாரத்தில் பாரதி சீனிவாசன் என்று அழைக்கப்பட்டு பெயர் பெற்றுள்ளார்.

★ ★ ★